198

வசந்தம்

பார்த்திப - புரட்டாசி

1945 - செப்டம்பர்

N45.4.6
197236

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ, 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில்
நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப்
பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம்
சவவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,
தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.



ஸோப்பு கண்டுபிடிப்பதற்கு முன்பு ஜனங்கள் தேய்த்துக் குளிக்க இயற்கைப் பொருள்களையே உபயோகித்துவர நேர்ந்தது. அவற்றிலொன்று சீனிக்காய்ப் பொடி. சீனிக்காய் மரத்தின் பழுத்த காய்களைப் பறித்து வெயிலில் உலர்த்தி பொடியாக்கி, அந்தப் பொடியை ஜலத்திற் குழைத்து தேய்த்து வந்தனர். இன்னும் சிலர் சீனிக்காய்ப் பொடி உபயோகித்து வருவதுண்டு. ஆனால் ஹமாம் ஸோப்பு வந்ததோடு இதுபோன்ற பழைய வழிகள் மறைந்து வருகின்றன. ஏனென்றால் பழையகாலப் பொருள்களின் சிறந்த அம்சங்களனைத்தும் கூடுதல் சௌகரியமும் சுகமும் அளிக்கும் விதத்தில் நறுமணங் கமழ்வதும் எளிதில் நுரையளிப்பதுமான ஹமாமில் நன்கு பொருந்தி அமைந்திருக்கின்றன.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா.
பிக் பஜார், பாலக்காடு.

T. S. 4694

Sept, 1945. தி டாட்டா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.,

ஸிம்ப்சன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தங்கள் சக்தியை நிரூபிக்கின்றன.

இந்த நெருக்கடியான காலத்தில் ஆயிரக்கணக்கான ஸிம்ப்ஸன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தினந்தோறும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்து சாதனங்களை மிகசிக்கனமாகவும் சுலபமாகவும் தங்கள் வேலையைச் செய்து|முடிக்க உதவுகின்றன.

இவைகளின் உழைப்புத் தன்மையையும் எவ்வளவு கடினமான போக்குவரத்தாயிருந்தாலும், நம்பிக்கையுடன் வேலை செய்யுந் திறமையையும், அபார சக்தியையும் தினந்தோறும் வந்து கொண்டிருக்கும் செய்திகள் மேலும் மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த நம்பிக்கைக்குக் காரணம் **ஸிம்ப்ஸெனின்** என்றென்றைக்கும் வழக்கமான உயர்ந்த ரக தயாரிப்பேயாகும். சிம்ப்ஸன்ஸ் க்யாஸ் உற்பத்தி செய்யும் பிளாண்டுகள் தான் மிகவும் உயர்தரமானவை. மற்ற எந்தத் தயாரிப்புகளைக் காட்டிலும் **ஸிப்ம்ஸன் கியாஸ் ப்ளாண்ட்டுகள்** தான் இன்று இந்தியாவிலேயே அதிகமாக வேலை செய்து வருகின்றன.

ஸிம்ப்ஸன் & கம்பெனி, லிமிடெட்.
மவுண்ட்ரோடு, மதருஸ்.

1840-ல் ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஒரு இந்திய தொழிற்சாலை

வழியில் அமிர்தம்

மோட்டார் வண்டிகள் எண்ணை எடுக்கும்போது நேரம் பிடிக்கும். வண்டி விட்டு வண்டி மாறவோ இன்னும் அதிகநேரம் வேண்டும். சிற்றூர்களிலோ தூசி நிறைந்த சந்திகளிலோ பிரயாணம் செய்த அலுப்புத் தீர இளைப்பாற ஒரு மணி அல்லது மேலும் அவகாசம் கிடைக்கும்.

உடல் மனத் தளர்ச்சியை நீக்கப் புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேனீரை விடச் சிறந்த அமிர்தம் வேறு என்ன இருக்கிறது?

இந்தியாவெங்கும் பஸ் நிற்குமிடங்களிலும், பாதைச் சந்திப்புகளிலும் தேனீர்க் கடைகளுண்டு.

இந்தக் கடைகளுக்கெல்லாம் தோட்டத்திலிருந்து நேராக வந்த புத்தப் புதிய தேயிலை இடைவிடாமல் எங்கள் விற்பனையாளர்கள் விநியோகிக்கிறார்கள்.

புத்தப் புதுமை
குறைந்த நேரமே
தோட்டத்திலிருந்து
தொண்டைக்கு

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

இண்டோ - கமர்ஷியல்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : மாயவரம்

1945ளு ஜூன்மீ 30உ ப

பொறுப்புகள்

	ரூ.	அ.	ப.
கோரப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம்	18,75,000	0	0
ரிஸர்வ் நிதி	3,75,000	0	0
அவசர நிதி	22,000	0	0
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது	92,966	3	0
டிபாஸிட்டுகள் :			
பிக்ஸட், கரண்ட், சேவிங்க்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், மற்றும் இதர பொறுப்புகள்	2,73,14,603	15	4
பாங்குகளுக்கு கொடுக்க வேண்டியவை	Nil		
பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள்	4,056	8	0
வசூல் பில்கள்	13,28,544	10	10
கமர்ஷியல் கிரெடிட்கள்	27,500	0	0
பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள்	6,69,892	12	4
வழங்கப்பட வேண்டிய டிராப்டுகள், தந்திகள்	1,99,645	0	4
சில்லறை இனங்கள்	42,364	0	8
இவ் வரை வருஷத்திய நிகர லாபம் :	2,73,201	1	5
ஆக மொத்தம் ரூ.	3,22,24,774	3	11

K. லக்ஷ்மணன்

அக்கௌன்டன்ட்

டைரக்டர்கள்

R. விஸ்வநாதன் K. சிவஸ்வாமி

R. S. A. சங்கர ஐயர்

V. வெங்கடராமன்

·D·

மதராஸ், ஜூலை 21, 1945

பாங்க் லிமிடெட்,

சென்ட்ரல் ஆபீஸ் : சென்னை.

19 OCT 1945 MADRAS

சுருக்கமான கணக்கு விபரம்

ஆஸ்திகள்

	ரூ.	அ.	ப.
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோநோட்டுகள் இதர அட்வான்சுகள், முதலியன	1,63,08,940	2	4
தற்சமயமாவது, எப்பொழுதாவது, டைரக்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள்	Nil		
பாங்கிக் கட்டிடங்கள்	35,698	0	0
ஸேப்கள், மரதளவாடங்கள்	68,372	9	3
கைவசமுள்ள புத்தகம் ஸ்டேஷனரி	39,756	0	5
வசூல் பில்கள்	13,28,544	10	10
கஸ்டமர்களின் பொறுப்புகள்	27,500	0	0
சில்லரை இனங்கள்	3,35,290	6	10
முதலீடுகள் :			
கவர்ன்மெண்ட் புரோநோட்டுகள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பாங்குகள், ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள சிப்பந்திகள் ஜாமீன்	74,74,511	11	6
முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி	83,094	14	0
கைவசமுள்ள ரொக்கமும், கரண்டுக் கணக்கில் பாங்கர்களிடமும்	65,23,065	12	9
ஆக மொத்தம் ரூ.	3,22,24,774	3	11

P. S. சுப்பிரமணிய ஐயர் அன்ட் கம்பெனி

ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட் அன்ட் ஆடிட்டர்ஸ்

S. N. N. சங்கரலிங்க ஐயர்

மானேஜிங் டைரக்டர்

விளம்பர அட்டவணை

●

வசந்தா மில்ஸ் லிமிடெட்
பி. ஏ. ராஜூ செட்டியார்
ஜுபிடர் பிக்சர்ஸ்
ஸிம்ஸன் & கம்பெனி
ப்ருக் பாண்ட்
மைசூர் சில்க்
உம்மிடியார்
கவர்னர் யுத்த நிதி
சென்ட்ரல் பேங்கு

எஸ். பிமைய செட்டி
ஆர்ய வைத்ய பார்மஸி
இந்தியன் பாங்கு லிமிடெட்
வசந்தா டையிங் ஒர்க்ஸ்
நாஷனல் சேவிங் சர்ட்டிபிகெட்
மைசூர் சந்தன அத்தர்
இண்டோ கமர்ஷியல் பாங்கு
அரவிந்த் மில்ஸ்
ஹமாம் சோப்பு

வசந்தம்

மலர் 4	பார்த்திப ஸூ புரட்டாசி மீ	இதழ் 6

பொருளடக்கம்

வேங்கை	... "அம்பலவாணன்"	... 1
மறுமலர்ச்சி	... அ. கிருஷ்ணமூர்த்தி	... 2
தேவ சுகம்	... கு. ப. சேது அம்மாள்	... 6
கபோதி உலகம்	... ரா. நா.	... 11
அடிமை வாழ்வு	... பூ. சொ. கணேசன்	... 14
இயற்கை இன்பம்	... கா ம. காளிதாஸ் பிள்ளை	... 16
சிலப்பதிகாரம்	... சர். ஆர். கே. எஸ்.	... 17
பிரிவும் பரிவும்	... வெ. ராமராவ்	... 22
புத்தக ஆராய்ச்சி	... தா. நா.	... 24
அன்புக் காணிக்கை	... ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்	... 25
விசாகை	... கே. வி. எஸ். அருணாசலம்	... 29
பாரதி : சில குறிப்புகள்	... கே. வி.	... 38
யுத்தகால இலக்கியம்	... "சுகி"	... 39
கலைக்கோயில்	... சுத்தானந்த பாரதி	... 46
மனக் குலைவு	... ரா. மகாதேவன்	... 53
பசும்புல்	... சு. கிருஷ்ண ராவ், டி. எஸ். சங்கரன்	... 54
சாவித்திரி	... ஆர். ஷண்முகசுந்தரம்	... 57
நாணமென்னடி	... அ. ஸ்ரீநிவாசன்	... 72
வெற்றியா? தோல்வியா?	... ஆர். கே. பார்த்தசாரதி	... 74
இளம் எழுத்தாளரும் ...	... "கலி"	... 80
மலர் மணம்	... ...	... 83

வசந்தத்தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.

சந்தோஷத்தைப் போலவே குடும்ப சௌகரியத்துக்கும் முன்னதாக திட்டம் போடவேண்டும்

சில சிறிய சுகபோகப் பொருள்கள் இல்லாவிட்டால் குடும்ப வாழ்க்கை உற்சாகமற்றதாகவே இருக்கும். இப்பொருள்களை வாங்கி வைத்துக்கொண்டு அனுபவிக்கக்கூடிய மனிதன் சந்தோஷசாலிதான்! ரேடியோ, டெலிபோன, புஷ்பங்கள், குழந்தைகளுக்குரிய விளையாட்டுச் சாமான்கள்—இவைதான் பணம் படைத்தவனுக்கும் அது படைத்திராதவனுக்கும் உள்ள வேற்றுமைகளாகும். இவைகள் இந்த யுத்ததிற்குப் பிறகு ஏராளமாய்க் கிடைக்கும். ஆனல், ஒருமாத வருமானத்திலிருந்து அல்லது மூன்றுமாத வருமானத்திலிருந்துகூட நீர் இப்பொருள்களையெலலாம் வாங்கமுடியாது.

ஆகையினுல் தான் இப்போது பணம் சேர்த்துவைக்க முடியுமென்று நினைக்கும் அநேகர் ஒவ்வொரு மாதமும் கிரமமாக சேர்த்துக்கொண்டு வருகிறுர்கள். அவர்களுடைய எதிர்கால வாழ்வு வாடகைக் கிரய எற்பாடாகிய பாறைகளின் மேல் மோதி உடைபடாது. தங்கள் சேமிப்புகளைச் சிறந்த முறையில் வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு உகந்ததென்று அவர்கள் தெரிந்துகொண்ட சாதனம்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ருபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணு, 8 அணு, 1 ருபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜென்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

★ பிரதி 10 ருபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ருபாய் ஆகிறது.

★ தனிவட்டி 4½ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ருபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அது வரையில் சேர்ந்து வந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

AAA 127

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:

டி. கே. சிதம்பரநாத முதலியார். சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

—கம்பர்

அட்டைச் சித்திரம்:

வேங்கை!

வைரம் என மின்னி ஒளி
சிந்துதே கண்கள்!
வாளெனவே நீண்ட மீசை
வலிமை காட்டுதே!
புன்னை மலர்ப் பொன்னெனவே
பொலியுதே உடல்
புள்ளிபல தோணுததில்
புதுமை காட்டியே!
கொல்லும் பார்வை கண்டு கண்கள்
அஞ்சி மருளுதே!
குரலினோசை கேட்டிடிலோ
குடல் தெறிக்குதே!
படுத்திருக்கும் அழகு கண்டால்
பசுவாய்க் காணுதே!
பாய்ந்திடுங்கால் உயிரைக் கவ்வும்
வேங்கையாகுதே!

"அம்பலவாணன்"

197236

மறுமலர்ச்சி

வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி

மறுமலர்ச்சி என்ற வார்த்தை தமிழுலகத்தில் சமீபகாலமாய் அதிகமாக அடிபடுகிறது. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதைப் பற்றி அறிந்தவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். பிற்பாடு இது தமிழ் எழுத்தாளர் உலகத்தில் பெருவாரியாக வழங்கி வந்தது. இன்று 'மறுமலர்ச்சி' என்பது எங்கும் பரவிய பழைய வார்த்தையாகும் நிலைமையில் இருக்கிறது.

மறுமலர்ச்சி என்பது மொழியின் நடையில் ஏற்படலாம்; மக்களின் மனப்பான்மையில் ஏற்படலாம். மொழிநடை, மக்கள் மனப்பான்மை இரண்டிலும் ஏற்படும் மறுமலர்ச்சிதான் நாட்டுக்கு உண்மையிலேயே நன்மை தரக்கூடியது.

மனப்பான்மையில் ஏற்படும் மறுமலர்ச்சி, மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை உண்டு பண்ணும். மொழியில் உண்டாகும் மறுமலர்ச்சி, மனக்கருத்தைப் பலவிதத்தில் வெளியிடுவதில் அளவில்லாத அழகை உண்டுபண்ணும்,

நமது நாட்டில் ஏற்பட்டு, வளர்ந்து வந்திருக்கும் மறுமலர்ச்சி, மக்கள் மனப்பான்மையிலும், மொழி நடையிலும் என்ன விதமான மலர்ச்சியைக் கொண்டு வந்திருக்கிறது? — என்று சிந்தனை செய்வது, இப்பொழுது ஏற்றதொரு காரியம். அதனுடைய சரித்திரம், நல்ல வழியில் போயிருந்தாலும், அல்லாத வழியில் போயிருந்தாலும், அதைப்பற்றி ஒரு மதிப்புரை எழுதுவதற்குப் போதிய காலம், இதுவரையில் கடந்து போயிருக்கிறது. வேறு விதமாகச் சொன்னால், அதன் சரித்திரத்தின் ஒரு பாகம்—முதற் பாகம்—இப்பொழுது முடிவடைந்து வருகிறது. ஆகவே, அதைப் பற்றிச் சில கருத்துக்களை வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே.

கிழக்குத்திசை நாடுகளைப்பற்றி, உலகத்தில்—அதுவும் மேற்கு நாடுகளில்—பொதுவான ஒரு அபிப்பிராயம் உண்டு. அதாவது, கிழக்கு நாடுகள் முன்னேற்றப் பாதையில், புரட்சி வேகத்தில் விரைந்து போவதில்லை; மெதுவாகவே நடந்து போகக் கூடியவை என்பது. இந்த முடிவு முழுவதும் சரியானதல்ல; ஆனாலும், பல விஷயங்களில் சரியானதுதான்.

நமது நாட்டு மறுமலர்ச்சி இயக்கம் இந்த முடிவுக்கு விலக்கானதல்ல. நமது நாடு என்று சொல்லும் போது, நமது தமிழ் நாட்டைக் குறிப்பிடுகிறேன். மறுமலர்ச்சி எண்ணமும் எழுத்தும் எவ்வளவோ நாடுகளில் ஏற்பட்டு நல்ல பல கிளர்ச்சிகளையும், புதுமைகளையும் உண்டுபண்ணிய பிறகு தான், நமது நாட்டிற்கு வந்திருக்கின்றன. இதற்குச் சரித்திர சம்பந்தமான காரணங்கள் பல இருந்தாலும், நமது நாட்டு முன்னேற்றம் மெதுவானது என்ற பொது

முடிவுக்கு நமது இயக்கம் விலக்கானதல்ல.

மறுமலர்ச்சியில் நமது நாட்டைவிடப் பிற்போக்கான பலபிரதேசங்கள் இந்தியாவில் இருந்தாலுங்கூட, இதுவரையில் முன்னேறியவைகளில் நாம் பிந்தி நிற்கிறோம்; நமது போக்கு மெதுவானது என்பது எனது எண்ணம். சுருங்கச் சொன்னால், நெடுநாள் கழித்து மெதுவாகத் தொடங்கிய இயக்கம், தனது வேகத்திலும் மெதுவாகவே இருக்கிறது.

இதுவரையில் வெளி வந்திருக்கும் மறுமலர்ச்சி நூல்களையும், கட்டுரைகளையும், பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு பார்த்தால், அவைகளில் அடங்கியிருக்கிற செய்திகளைக் காதல் — இயற்கை — கிராமம் என்ற மூன்று தலைப்புகளில் பெரும்பாலும் அடக்கிவிடலாம்,

இந்த மூன்று விஷயங்களைத் தவிர அதிக முன்னேற்றமான தீவிரக் கருத்துக்களோடு பல புத்தகங்களும், கட்டுரைகளும், பத்திரிகைகளும் வெளி வந்திருக்கின்றன என்று சிலர் வாதிக்கலாம். அது உண்மைதான். ஆனால், முந்தியவற்றை நினைக்கும் போது இந்த வெளியீடுகள் எங்கோ ஒரு மூலையில் போய் அடங்கி விடுகின்றன; அவ்வளவு குறைவாக இருக்கின்றன. ஆனால், உண்மை என்ன? பொதுவாக மக்களிடையே எண்ணத்திலும் வாழ்க்கையிலும் பலத்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்துங்கூட, அவை மறுமலர்ச்சி நூல்களில்—கட்டுரையில் — பத்திரிகையில் விளக்கம் பெறவில்லை.

இங்கே "மறுமலர்ச்சி" என்ற சொல்லைக் குறிப்பாக வற்புறுத்துகிறேன். ஏன்? காதல் — இயற்கை— கிராமம் இவைதாம் மறுமலர்ச்சி எழுத்தின் எண்ணங்களாக இது வரை வெளிவந்த எழுத்துக்கள் தெரிவிக்கின்றன.

இதனால் காதலும், இயற்கையும் இவற்றின் இன்பமும் மக்களுக்குத் தேவையில்லை; அவை முன்னேற்றத்திற்குத் தடையானவை என்பது கருத்தல்ல. மக்கள் வாழ்க்கையில் எல்லோரும் அடைய விரும்பும் இன்பத்தின் உச்சம் அதுதான்; அன்பும், அமைதியும் இன்பமும் இருப்பது அங்கேதான். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் வாழ்க்கை முழுவதும் அதுவல்ல. வாழ்க்கையின் நடைமுறையில் காதலைத் தவிர எவ்வளவோ பல செய்திகள் — சிக்கல்கள் — இருக்கின்றன.

வாழ்க்கை முழுவதும் காதலாகவே — இன்பமாகவே — இருந்துவிட்டால் அதாவது, வாழ்க்கைதான் காதல்; காதல்தான் வாழ்க்கை என்று இருந்து விட்டால், காதலுக்கு இவ்வளவு பெருமையும் சிறப்பும் ஏற்பட நியாயமில்லை. அப்படி இல்லாமையால்தான், காதல் இன்பத்தையும், இயற்கை இன்பத்தையும் மனிதன் கிடைக்கும்போது ஆசையார அநுபவிக்க விரும்புகிறான்.

காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவில் ஏற்படுகிற ஒருவித மனக்கிளர்ச்சி. அதாவது ஒருவரை இன்னொருவர் கவர்ச்சி பண்ணக்கூடிய சம்பந்தத்தில் இருக்கிறார்கள். உலகத்தின் ஜனத்தொகையில் பாதிப் பேர் ஆண்; பாதிப் பேர் பெண்கள். இவர்களில் ஏறக்குறைய எல்லாரும் ஒரு வயது வந்ததும் ஆணும் பெண்ணுமாகவே வாழ்வு நடத்து

கிறார்கள்; காதலின்பத்தை அநுபவிக்கிறார்கள். தமது இல்லற வாழ்வைத் தவிர, வேறுவகையிலும் பலர் இந்தக் காதலை அநுபவிக்கிறார்கள். இருந்தும் காதல்மேல் வைத்த காதல் உலகத்தில் தணிந்தபாடில்லை. இவ்வளவு செல்வாக்கு இருந்துங்கூட, அதற்கு மனிதனுடைய தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்யும் வல்லமை இல்லை!

காதலைத் தவிர வாழ்வில் அநுபவிக்க வேண்டிய வேறு பல இன்பங்கள் இருக்கின்றன. மனிதன் ஆடையுடுத்துத் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறான். சத்துள்ள நறுசுவை நுகர நாள்தோறும் மாடாய் உழைக்கிறான். நேர்த்தியான கட்டடத்தில் நிம்மதியாக வாழ விரும்புகிறான். உணவும் உடையும் உறைவிடமும் என்ற இந்த மூன்றையும் தழுவி எவ்வளவோ பல சில்லரைச் செய்திகள் தொக்கி நிற்கின்றன. சரியான காதலைச் சரியாக நுகர்வதற்குக் கூட, இந்த மூன்றும் சரிவர அமைய வேண்டும்.

உண்மையான காதலுக்கு இவையிருந்தே தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று சிலர் சொல்லலாம். அவர் எளிமையிலேயே — எல்லாம் இயற்கை வெளியிலேயே — எல்லாம் நுகரக் கூடிய மனப் பக்குவம் வாய்ந்தவராக இருக்கலாம். ஆனால் எல்லா மக்களையும் அப்படி எதிர்பார்க்க முடியாது. பெரும்பாலான மக்கள் அப்படி இல்லவும் இல்லை. ஆயினும், காதல் எல்லோருக்கும் பொது; அது சமூக விஷயம்; அதற்கு இந்த உபதேசம் சிறந்ததல்ல

மக்கள் பெரும்பாலோர் சுகமான உணவும், உடையும், உறைவிடமும் இல்லாமலே காதலை அநுபவிக்கவில்லையா என்று கேட்கலாம். இவைகள் உண்டாகும் வரையில் அவர்கள் காத்திருக்க வேண்டுமா? என்று நான் ஒரு எதிர்க்கேள்வி கேட்கலாமல்லவா? தப்பான ஒரு சமூக அமைப்பு, தடுக்க முடியாதபடி வந்து அமைந்திருக்கும்போது, அதைச் சரியான அமைப்புக்கு உதாரணமாகக் காட்டுவது சரியல்ல.

ஏழை மக்களிடத்தில் காணப்படும் அமைதியும் காதலும் ஒரு வெளித் தோற்றந்தான். அது அடிப்படையில் உண்டானதல்ல. ஏழ்மை நிலைமையில் பொழுதெல்லாம் உழைத்துப் பாடுபடும் அவர்களுக்கு அதிக மனக்களிப்பைத் தரக்கூடியதும், எளிதாகக் கிடைக்கக் கூடியதும், ஓரளவு மனதுக்கு மறுமலர்ச்சி கொடுப்பதும், கூடியவரையில் சுதந்தரமுள்ளதும் இந்தக் காதல் ஒன்றுதான். ஏழைகள் வேறு சுகங்கள் வாய்க்காமையினால், கிடைக்கக் கூடிய இந்தச் சுகத்தையாவது அநுபவிக்கிறார்கள். நமது நாட்டில் வறுமை அதிகமாக ஆக, மணமக்களிடையே அதிக நெருக்கம் ஏற்படுவதுஇயற்கை வழக்கம். ஏழைகள் வீட்டில் அதிகப் பிள்ளைகள் இருப்பதற்கும், பணக்காரர் வீட்டில் அதிகப் பிள்ளைகள் இல்லாமைக்கும் இப்படிப்பட்ட காதல் ஒரு முக்கியமான காரணம்.

ஜனக் கூட்டத்துக்கு வறுமையும், வறுமையோடு கூடிய காதலும் ஒரு முக்கியமான காரணம். (அதுவே முழுக் காரணமல்ல.) வறுமையை ஒழிப்பதற்கு வேண்டிய சமூக வேலைக்காக திட்டமிட்டுச் சித்தரித்து வேலை செய்ய வேண்டும். இதைச் செய்து மற்ற வேலைகளையும் செய்தால் அது

நியாயமாகும். இல்லையேல் சமூக சிந்தனையில்லாத ஒரு படாடோப வேலையாகவே முடியும்.

வறுமை இயற்கையாகவே உள்ளதா? அல்லது கடத்தப்பட்ட வறுமையா என்பது பற்றி கவலையே இல்லை. எந்த விதத்தில் இருந்தாலும் அதை ஒழிக்க வேண்டும். வறுமை என்பது என்ன? மனிதன் உண்பதில் — உடுத்துவதில் — உறைவதில் — அந்தஸ்தில் நியர்யமான சுகத்தை அநுபவிக்க ஆசையிருந்தும் வழியில்லாத நிலைமை; உழைப்பிருந்தும் ஊதியமில்லாத நிலைமை.

இந்த வறுமை நம் நாட்டைப் பிடித்திருப்பது யாருக்கும் தெரியாததல்ல, இது திடீரென்று தோன்றிவிடவுமில்லை; எவ்வளவோ காலமாக வளர்ந்து வந்திருக்கிறது. நம் எழுத்தாளர்களையும் இந்த வறுமை விட்டபாடில்லை. ஏழைமக்கள் வறுமையால் வாடுகிருர்கள்; எழுத்தாளர்களோ வாடுவது மட்டுமல்ல; சொல்லச் சொன்னுலும் எழுதச் சொன்னுலும் கற்பனை ததும்பச் சித்திரிக்கும் சிந்தனைத்திறம் படைத்தவர்கள். வறுமையே பலபேரை வேறு கல்வி படிக்க இடங்கொடுக்கவில்லை. வறுமையே மேற்கல்வி படித்தவரையும் கீழ்நிலையில் வைத்திருக்கிறது. சுருங்கச்சொன்னுல் பல எழுத்தாளர்கள் வறுமையின் காரணமாகவே எழுத ஆரம்பித்தவர்கள்.

வறுமைக்குக் காரணம் சமூக அமைப்பு. இதை நன்கு அறிவார்கள் எழுத்தாளர்கள். வறுமையில் முளைத்து — வறுமையில் உழன்று — அதன் காரணத்தையும் உணர்ந்த எழுத்தாளர்கள், அந்த வறுமைச் சமூகத்தை மாற்றியமைக்க எண்ணமிருந்தும் எழுதுவதில்லை; இடங் கிடைத்தாலும் பேசுவதில்லை.

இதற்கு என்ன காரணம்? அறிவுக்குப்பட்ட ஒன்று உடனே நடைமுறைக்கு வந்தே தீரும் என்ற கட்டாயம் இல்லை. 'நினைப்பும் செய்கையும்' 'அறிவும் ஒழுக்கமும்' ஒருமாதிரியாக அமைவதில்லை. எழுத்தாளர்கள் இப்படி இருப்பதற்கு இந்த நியாயந்தான் காரணம். கால்வாசிப்பேர் சீர்திருத்தமாக எழுத நினைத்தாலும் பல தடைகளால் எழுத முடியாமல் இருப்பவர்கள். பாதிப்பேர் அசட்டையாக இருப்பவர்கள்; மீதிப் பேருக்கு இந்தச் சிந்தனையே கிடையாது. பொதுவாக, எல்லோருக்கும் தெரியும்; ஆனுல் ஒருவரும் ஒன்றும் செய்வதில்லை, வெகு சிலரைத்தவிர.

இத்தனை ஆண்டுகளாக எல்லாரும் எழுதிய இலக்கியம் என்ன? எவ்விதமானது அது? காதல், இயற்கை, கிராமம் என்ற மூன்றை மட்டும் அவர்கள் காவியப் பொருளாகக் கொண்டதற்கு என்ன காரணம்? எவ்விதமான சூழ்நிலைகள் அவர்களைக் கடந்த பத்தாண்டுகளாகத் தூண்டிவந்திருக்கின்றன? மறுமலர்ச்சி இப்பொழுது எப்படியிருக்கிறது? எப்படி இருக்க வேண்டும்? என்பவைகளைப்பற்றியெல்லாம் அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.



தேவ சுகம்

கு.ப. சேது அம்மாள்

அகலிகை கல்லான கதையின் காரண கர்த்தா தேவேந்திரன். அவனைப்பற்றி அவன் பட்டத்தரசி இந்திராணியின் சித்தக்கடலில் வீசிய எண்ண அலைகளைச்சித்தரிக்கிறது இச்சொற்சித்திரம். அகலிகை கதையைப் பலர் பலவிதமாகப் பேசியும், எழுதியும், பாடியும் தீர்த்துவருவதற்கு, இது ஒரு மாற்று.

— ஆசிரியர்

கிருஷ்ண பக்ஷத்து அஷ்டமி இரவு. தேவராஜனுடைய பட்டத்து ராணி சசிதேவி தனது இரண்டாம் ஜாம பூஜை முதலியவற்றை முடித்துக் கொண்டு பூஜை அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

வாயிலில் காத்திருந்த கன்னிகைகள், இளைப்பாறும் மண்டபத்திற்கு வழிகாட்ட அங்கு வந்து அவள் அமர்ந்தபோதுதான் வானத்தில் வெளிர்கண்டு சந்திரோதயமாகிக் கொண்டிருந்தது.

சந்திரகாந்தி வீசும் நிர்மல தேகத்தில் வியர்வை வழிய அங்கு மிங்குமாக உலவி விட்டு மஞ்சத்தில் வந்து அமர்ந்தாள்.

அலங்காரமற்றமேனி. சோகமும், வேதனையும் படிந்த முகமும், கண்களும். சோர்ந்துபோய் ஆசனத்தில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

'நடுநிசி' என்றது அரண்மனையின் கால அறிவிப்பு.

சசிதேவி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். சைகை செய்து கவரி வீச்சுக்களை நிறுத்திவிட்டு, "ஜோதிமதி, போய் திலோத்தமையை அழைத்து வா!" என்று ஒருத்தியை அனுப்பினாள்.

"ஆ, நிசி நேரமா இது? இவ்வளவு நாழிகையா தியானத்தில் ஒன்றி இருந்தேன்? ஆம்! இன்று அஷ்டமியல்லவா? சரிதான். தேவி, மகேச்வரி! எனக்கு சாந்தியை அருள் அம்மணி" என்று வணங்கி இரு கைகளையும் கூப்பி பிரார்த்தித்தாள். மூடிய விழிகளிலிருந்து நீர்த் தாரைகள் வழிந்தன.

அப்படியே அசைவற்றுப் பதுமை போல கூப்பிய கைகளும், நீர் வழியும் முகமும், நடுங்கும் உடலு

மாக இருந்த சசிதேவியை திலோத்தமை வந்து தொட்டெழுப்பினள்.

"தேவி, இதென்ன?" என்றுள் கலவரத்துடன்.

"திலோத்தமே, வா! உட்கார்" என்று இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார்த்திக் கொண்டாள் சசி.

பிறகு சசிதேவியின் கட்டளைப்படி தாதிகள் விலகிப் போனார்கள். நெஞ்சத்து வேதனையால் வாடிச் சுருங்கிப்போன முகத்தை திலோத்தமை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு, "தேவி, கவலை என்? என்னிடம் அதைச் சொல்லலாமா?" என்று கேட்டாள்.

"சகி, என்ன ஜென்மமெடுத்தேன் பாபி! மனித ஜென்மமாக வேனும் பிறந்திருந்தால் — மரணத்தால் மோட்சமுண்டு. அதற்கும்கூட வகையற்ற......"

"தேவி, மன்னதை அலட்டிக் கொள்ளாதீர்கள். என்ன இவ்வளவு கலக்கம், தேவராஜனின் பட்டத்து ராணிக்கு?"

"பாழாய்ப் போகவில்லையா நான்? கேலி செய்கிறுயா நீ, பட்டத்து ராணியென்று!" என்று உரைந்த மென்சிரிப்பில் நெருப்புத் தோன்றக் கேட்டாள்.

திலோத்தமை அடங்கிப்போனுள். நிதானமாக, மெல்லிய குரலில் "மன்னிக்க வேண்டும். அவ்விதம் நான் நினைப்பதாகத் தங்களுக்கு ஏன் தோன்றுகிறது?"

"அது கிடக்கட்டும் திலோத்தமே, நான் எவ்வளவு காலம் இருக்கவேண்டும், எப்பொழுதும் இப்படியே பயப்பட்டுக்கொண்டு? பட்டத்து ராணியென்கிறுய்! என்ன வேண்டியிருக்கிறது? சபல சித்தனைக் கணவனுக அடைந்த ஒரு பெண்ணுக்குச் சுகமேது, சாந்தியேது? பார், நடு இரவும் கழிகிறது. இன்னும் காணேன்! எங்கு எந்த மகா பதிவிரதையின் சாபத்திற்கோ, மகரிஷிகளின் கோபத்திற்கோ........."

"தேவி, வேண்டாம். அபசகுனத்தை ஏன் சிந்திக்கிறீர்கள் இப்படி?"

"காரணமாகத்தானடி! இன்று மாலை பூஜை முதல் அபசகுனமேதான் ஆகிறது! பூஜைக்கு வரும்போதே கால் தடுக்கிற்று. நடு பூஜையில் விளக்கு மங்கிற்று.

நைவேத்யங்கள் கைபட்ட சாக்கில் உருண்டன! சகி, என் சுகத்தையும், நலனையும் அற்பமாக மதித்து உதறிவிட்டு, தபோ வாழ்வில் ஈடுபட்டு, பதியின் நலத்திற்காக விரதமிருக்கிறேன். பரஸ்திரீ மோகம் கொண்ட பதி, தேவராஜனுக இருந்தால் என்ன, தேவதேவனுக இருந்தால்தான் என்ன? சோகமும், அவமானமும் என் உயிரை உறிஞ்சுகின்றன. பதிவிரதைகளின் முகத்தைப் பார்க்கக்கூட வெட்கும் நான் – நானும் ஒரு பெண்! – என் போன்ற ஒரு பெண்ணினுடைய மானம்......"

"தேவி, சாந்த மடையுங்கள். தங்கள் கண்களிலிருந்து நீர் உதிரலாகாது. பொறுமைதான் நமது நிதி"

"போதும்;பொறுக்க இனி எனக்குச் சக்தி யில்லை. சசிதேவியின் உண்மையான உயிர் மடிந்து விட்டது. தேவலோக விதியின்படி உடல் அழிய முடியாது; அது இருக்கிறது! பார் இன்னமும் காணேன்! ஆ, இதென்ன? சந்திரன் அகாலத்தில் அஸ்தமிக்கிறுன்? வாயுமண்டலத்தில் புழுதிக்காற்று! நட்சத்திரங்கள் மங்கி உதிர்கின்றனவே! ஐயோ, என்மனம் பதைப்பது ஏனடி திலோத்தமா?"



அப்படியே அசைவற்றுப் பதுமை போலிருந்த சசிதேவியைக் கண்டு திலோத்தமை திடுக்கிட்டாள்..........

"ஆ, தேவி, நான் கேள்வி யுற்றது உண்மை! கௌதம பத்தினி பங்கமுற்ருள் போலும்!" என்று பதறிஞள்.

"ஆ, என்ன?" என்று வீரிட்டாள் சசிதேவி.

"தெரியாதா? ஐயோ, ஆம் தேவி. உத்தமி அகல்யை பதிதை யாகி விட்டாள்! கௌதமரின் கோபத்தீ லோகத்தை ஊழி படுத்துகிறது. தேவராஜன் என்ன ஆனரோ தெரிய வில்லையே!"

"ஆ, ஐயோ, மாதா, பார்வதி தேவி! என்ன செய்வேன்?" என்று சசிதேவி நினைவு இழந்து பொத்தென்று கீழே விழுந்தாள்.

●

விடியற்காலை!

மெல்லத் தூக்கம் கலைந்து எழுவது போல கண் விழித்துப் பார்த்தாள் இந்திராணி.

இந்திரன் அருகில் உட்கார்ந்து விசிறிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் சட்டென்று அவனுடைய கையைப் பிடித்து விசிறியை வாங்கிக் கீழே போட்டுவிட்டு, எழுந்து இறங்கிவந்து நமஸ்காரம் செய்து நின்ருள். அவளை இழுத்து அருகில் உட்கார வைத்துக் கொண்டு "பிராணேஸ்வரி, உன்முகம் உன் துயரத்தைச் சொல்லுகிறது — நீ சொல்லா விட்டாலும். என் அன்பே! உனது கோமள இதயத்தில் துயரை அடைத்து அடைத்து வைத்தால் அது வெடித்தல்லவா போகும் — தாங்க முடியாமல்? உன்வாய் திறந்து என்னை, — நான் உனக்குச் செய்த துரோகத்தைக்— கேளேன்? உலகில் உன்னைத் தவிர மற்ற அனைவருடைய கோபத்தையும், பெற்று பலனை அனுபவித்து விட்டேன். என்தேவி, சசி, உன் கோபத்தைக் காண்பி. மகா ஞானியும், கருணையின் உருவமுமான உன் கோபம் என் பதிதத்தன்மையை அழிக்கட்டுமே! என் ஆசை அழியட்டும்; மோகம் சாம்பலாகட்டும்! ஹா, என்ன கோர மான பாபம் செய்து விட்டேன் சசி? ஐயோ, மகா சாதுவான கௌதம பத்தினி, கல்லானள், கால முடிவுவரை. நானும் என் பாபக் கண்களுக்கு கோர உருவ மானேன். தேவி, சசி, அநீதனை என்னை நீயேன் இன்னும் வெறுக்க வில்லை?

"பெண்ணின் மணியான உன்னை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தும் தேவமாதர்களை யெல்லாம் ஆண்டும், ... அடடா எவ்வளவு பாபி யாகிவிட்டேன் நான்? என் பாப நினைவுகளை உற்சாகத்துடன் இரவோடிரவாக உன்னிடம் ஓதி இருக்கிறேனே, எப்படி அதையெல்லாம் சகித்தாய்? அப்பொழுது என்னைத் தடுத்து ஒரு சொல்......சொல்லி......ஆம்! தெரிகிறது நீ ஏன் சொல்ல வில்லையென்று ......" என்று மேலே பேச வாயெழாமல் நிறுத்தினன் தேவேந்திரன்.

இந்திரனுடைய வழியும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, மெல்லிய இன்குரலில், "தங்களுக்கு சாந்தி உண்டாகட்டும் தேவர் நாயகா! மாதா கௌரிதேவி என்னைக் காப்பாற்றி விட்டாள். தங்களுக்கு இந்த ஞானம் உதிக்க நான் நோற்ற நோம்புகளும், செய்த ஜப, தியானங்களும் இன்றுதான் பலன் தந்தன."

"இனிமேல், என் குலத்தின் மானம் பிழைக்கும். அகல்யை மறுபடி சதியாவாள் என் பிரார்த்தனையின் பயனுக!" என்ருள் சசி தேவி.

கபோதி உலகம்

ரா. நா.

மிக மிக கவனமாக ஒரு மாதப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கையில் "ஸார் உங்க கிட்டே ஒரு ரோசனேயல்ல கேக்கலாம்னு வந்தேன்" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் எனக்கு நெடுநாட் பழக்கமுள்ள ஒரு தொழிலாள நண்பன் வந்திருந்தான்.

"என்னப்பா அப்படிப்பட்ட ரோசனே" என்று கேட்டேன் பத்திரிகையைப் படித்துக் கொண்டே.

"பேப்பரு அப்புறம் படிக்க லாமுங்க. இந்த விசயம் ரொம்ப முக்கியமுங்க" என்ருன்.

பத்திரிகையை மடித்து வைத்து விட்டு, "என்ன விஷயம். சொல்லு பார்க்கலாம்" என்றேன்.

"ஒரு பெண்ணுங்க! புருசனும் அடிச்சூத் துரத்திப் புட்டாளும். பெத்தவங்களும் ரச்சிக்க முடியல் லிங்களாம். அது ரயிலேறி இங்கெ வந்திருச்சுங்க. அவுக சாதிக்காரங்க எடம் குடுக்க மாட்டேங்கராங்க. நம்ம ஊட்டிலே நாலு நாளா இருக்குது. என்ன செய்யறதுங்க. அதுக்கு ஒரு வழி சொல்லிவிங்கண்ணுதா உங்க கிட்ட வந்தனுங்க" என்ருன்.

உடனே பதில் சொல்லக் கூடிய விஷயமல்ல இது. ஆகையால் "அந்தப் பெண்ணேப் பாத்துத்தான் அப்பா சொல்லணும்" என்று கூறினேன், சிந்திப்பதற்காக அவகாசம் பெறுவதற்காக.

"சரிங்க. ரவைக்கு இட்டாரேன்" என்று கூறிவிட்டுப் போனன்.

●

மறுபடி இரவு எட்டு மணியிருக்கும், அவன் வந்தான். அவன் பின்னல் சுமார் பத்தொன்பது வயதுள்ள பெண் ஒருத்தி வந்தாள். நல்ல வசீகரமான தோற்றம். துக்கத்தினல் முகம் வாட்டமாயிருந்தாலும் அதில் ஒரு குறுகுறுப்பு இருந்தது. அவர்கள் இருவரையும் உட்காரச் சொல்லிவிட்டு நிதானமாக,

"அம்மா நீ எந்த ஊர்? என்ன விஷயம்" என்றேன். சற்று நிதானித்துக்கொண்டு தன்சோகக் கதையைச் சொன்னள். ஊர், பெயர் முதலியவைகளை நீக்கிவிட்டு அவள் கதையைச் சொல்லுகிறேன்.

"எங்கப்பனுக்கு நாங்க ஏழு பெண்ணுங்க. இந்தக் காலத்திலேயும் முப்பது ரூபா தானுங்க

சம்பளம். எங்களெ அதிகமாகப் படிக்க வைக்கலிங்க. நாலாவது வரையில்தான் படிச்சிருக்க னுங்க.

வீட்டுலே கூட்டம் கொறைய ணும்னு நெனச்சு என்னெ பத்து வயசிலேயே கண்ணாளம் செய்து கொடுத்துட்டாங்க. கண்ணளப் பந்தல்லே எனக்குத் திங்கறதுக்கு பழத்தெக் குடுத்துத் தாலி கட்ட ணுங்களாம்.

வயசு வந்ததும் என்னெ புருஷன் வீட்டுக்கு அனுப்பிச்சாங்க. அவருக்குச் சம்பாத்தியம் கிடையாது. அவரு அவங்க அக்கா வூட்டிலே சாப்புட்டுட்டிருந்தாக. எனக்குச்சாதம்போட முடியலே. நான் வேறே பாரமாயிருக்கே னென்னு கோவம் வந்து அடிப் பாருங்க. என்னலெ தாங்க முடியாமே, 'என்னெ என் இப்படி இம்சிக்கிறீங்க' என்னு கேட்டேன். நீசொகமா ஒங்கப்பா வீட்டுலே போயிருண்ணு துரத்திட்டாங்க.

எங்கப்பெ என்ன பண்ணுவாருங்க? என்னெ தர்மத்திலே படிக்க வெக்கலாம்னு பட்டணத்துக்குக் கூட்டிகிட்டு வந்து சேக்க வந்தாருங்க. அம்பது ரூபாயாவது பணமில்லாதெ சேத்துக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க. சமயல்வேலெ செஞ்சாவது படிக்க பணம் சேக்கலாம்னு ஒரு வீட்டிலெ வேலேக்கு இருந்து மூணு மாசம் கஷ்டப் பட்டேனுங்க. மானத்தைக் காப்பாத்திட்டு பொழைக்கரதுங்கரது முடியா ... ாச்சு.

வேலையை விட்டுட்டு திரும் ருக்குப் போனேனுங்க. திரும்பியும் அவருக்குத் ஒரு பெரிய மனுசருக்கு கடுதாசி குடுத்து பட்டணத்துக்கு அனுப்பிச்சாரு. சரின்னு பட்டணத்துக்கு வந்தேனுங்க. அந்தப் பெரிய மனிசர் பொஞ்ஜாதி என்னெப் பாத்து என்னமோ நெனச்சுட்டு அவுங்க புருஷனேப் பாத்து இரண்டாங் கல்யாணம் பண்ணிக்கிறதாக உத்தேசமா' இன்னு அதட்டினுங்க. அவரும் பயந்துட்டு என்னெ ஒரு சினேகிதர் வூட்டுக்கு அனுப்பிச்சுட்டாரு. அந்த வூட்டிலெ ரெண்டு நாளு இருந்தேன். அவுங்களும் 'ஒரு சின்னப்பொண்ணேவச்சிட்டிருக்க முடியாதுண்ணு சொல்லிட்டாங்க. அனதையாய் நிண்ணு அழுதுட்டிருக்கையிலே இவங்க அம்மா என்னெ வீட்டுக்குச் சாப்பிட அழைச்சுக்கிட்டாங்க. அவங்க மகராஸியாயிருக்க வேணும்'' என்று தன்னை அழைத்து வந்த தொழிலாள நண்பரைக் காட்டினள்.

அந்தப் பெண் பேசி நிறுத்தினள் என்பதை நான் உணர சில நிமிஷங்கள் ஆயின. அப்புறம் சற்று நிதானித்துக் கொண்டு, "அம்மா நீ என்ன செய்யலாம் என்று நினேக்கிருய்?'' என்று கேட்டேன்.

''அதுக்குத்தான் உங்ககிட்டே வந்திருக்கேனுங்க'' என்ருள் அப்பெண் துடியாய்.

"உனக்கோ படிப்பில்லே. உனக்கென்ன வேலே கிடைக்கும்'' என்றேன். அதற்கு அவள் கொச்சையாகச் சொன்ன பதிலேப் பேச்சுத் தமிழில் தருகிறேன்.

"எனக்கு அதிகமான படிப்பில்லே என்று சொன்னேனே தவிர சுத்தமாகப் படிக்கவே இல்லே என்பதல்ல. ஏதோ படித்தேன், சின்ன வயசில். அந்தப்

பள்ளிப் படிப்புப் புள்ளிக்கு உதவாது என்பதும் எனக்குத் தெரியும். இருந்த போதிலும் சிறு வயதிலே நிறையப் புத்தகங்களும், பத்திரிகைகளும் படிப்பது வழக்கம், பாடல்கள் என்ருல் எனக்கு ரொம்ப ஆசை. கதை கேட்டுக் கொண்டிருப்பதென்ருல் விடிந்தே போனலும் எனக்குத் தெரியாது. அத்தனை ஆசையோடு கேட்பேன். ஒரு நாள் ஒரு கதை படித்தேன். ஏழைப் பெண் ஒருத்தி — என்னைப்போல் திக்கற்றவள் — நல்ல நல்ல கதைகள் எழுதியே முன்னுக்கு வந்து விட்டாளாம். அவள் கற்பனைக்காகப் புதிதாக ஒன்றும் கற்பனை பண்ண வில்லையாம். தன் வாழ்வையே கதையாக எழுதினளாம். அதைப் படித்த ரசிகர்கள் 'இந்த மாதிரி சோகக் கதை' உலகிலே கிடையாது என்று புகழ்ந்தார்களாம், வெகு சீக்கிரத்திலே அந்தப் பெண் நல்ல நிலைமைக்கு வந்து விட்டாளாம். அதைப் படித்த போது நானும் ஏன் எழுதலாகாது என்று நினைத்தேன். ஆனல், எழுதுவது அப்படி ஒன்றும் சுலபம் அல்ல என்பதும் எனக்குத் தெரிந்த விஷயம்தான். பலவிதமாக யோசனைகள் உதித்துத்தான் என்ன பயன்? எழுத்துக்கும் ஊக்கமும் உற்சாகமும் தரும் ஆசிரியர்கள் வேண்டாமா? எனக்கு வழிகாட்டி அழைத்துச் செல்ல யார் இருக்கிருர்கள்? நடுக்காட்டில் நிற்பதுபோல பிரமை தட்டுகிறது. சுற்றிலும் முள்வேலி சிம்ம கர்ஜனை, தகிக்கும் கானல் இந்த வனந்திரத்தை விட்டு வெளியேறுவது எப்படி என்று யோசிக்கிறேன். எனது யோசனைக்கு எல்லையே இல்லை! எனக்கு ஒரு வழி துலங்குமா? நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்களோ?'' என்ருள்.

''ஏதாவது ஸேவாஸதனத்தில் சேர்க்க முடியுமா என்று பார்க்கிறேன்'' என்றேன்.

''எந்த வேலையானலும் சரி, சீக்கிரம் பார்த்துச் சொல்லுங்கள். நான் போய் வருகிறேன்'' என்று புறப்பட்டாள் அப்பெண்மணி.

மேல் ஜாதியினர் — பணக்காரர்கள் — அனுதைக்கு அபயமளிக்க அஞ்சுகையில் ஒரு ஏழைத் தொழிலாளிக்கு என்ன கருணை! மையிருட்டில் ஒரு மின் வெட்டு. அந்தப் பெண் புறப்பட்டுப்போய் வெகு நேரமாகி விட்டது. நான் இருந்த விடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை.

''என்னங்க, சாப்பிட வரலயா'' என்ற சகதர்மிணியின் குரல் என்னைப் பூலோகத்திற்குக் கொணர்ந்தது. எழுந்திருந்தேன். 'கபோதி உலகம்' என்று யாரோ உரத்துக் கூவுவதுபோல் பிரமை ஏற்பட்டது.

★

அடிமை வாழ்வு!

[பூ. சொ. கணேசன்]

சுயேச்சையாய்ப் பறவைபோல் பறந்து திரிந்த என்னைப் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டாய். உன்னால் அவ்வாறு செய்ய முடியுமென்று நான் கனவிலும் கருதவில்லை.

சுதந்திரத்தைப் பற்றிக் கோஷித்துக்கொண்டிருந்த என் மனம் உன்னுடைய தெய்வீக சக்தியில் அடிமைப்பட்டுவிட்டது. ஆனால் அவ்வடிமைத் தன்மையிலிருந்து விடுதலையடைய என் மனம் விரும்பவில்லையே, அது ஏன்? என் உள்ளிருந்த சுதந்திர உணர்ச்சி அடியோடு வற்றிவிட்டதா என்ன?

மகுடியின் கீதத்தில் மயங்கிக் கிடக்கும் பாம்பைப் போல், உனது மோகன முறுவலிலேயே மருண்டுவிட்டதே என் மனம்! நீ என்ன மாயக்காரியா? களங்கமற்ற முகத்துடன் தோன்றும் உன்னை மாயக்காரி என்று எவ்வாறு நான் ஒத்துக்கொள்ளுவது?

உன்னைச் சில வருடங்களுக்கு முன்புதான் நான் பார்த்தேன். அப்போதெல்லாம் நீ சிறுமி. உன்னுடைய அழுக்குப் படிந்த கந்தல் ஆடையையும், செம்பட்டையான உனது பரட்டைத் தலையையும் பார்த்துக் கேலி செய்வேன். அப்போது அம்மாளிடம் போய் நீ அழத் தொடங்கி விடுவாய். அன்று நான் பார்த்த நீதானா இன்று என்னை இவ்வாறு திணற அடிக்கிறாய்?

இரண்டு வருடங்களிலா இவ்வித மாறுதல்! கால தேவனின் கடிய வேகத்திலே ஏற்பட்ட உனது உடல் மாற்றமா இது? உன்னை மாற்றி யமைக்க அவன் என்ன சிற்பியா? இல்லை, பருவந்தான் உன்னை இவ்வாறு பக்குவப் படுத்தியிருக்கிறது!

உனது கரிய கண்களிலே நான் காதற் சுடரைக் காண்கிறேன். உனது முல்லை முறுவலிலே காதற் சுவையைக் கலந்து பருகுகின்றேன்; சிவந்த கன்னங்களிலே விழும் அழகுக் குழிகளில் காதலின் ஆழத்தையே காண்கின்றேன். கவிகளாலும் முற்றுப்பெற வருணிக்க முடியாத கற்பனைச் சித்திரமாக வல்லவா இருக்கின்றாய்? அப்படிப்பட்ட உன்னை நான் வருணிக்க முயலுவது, உனது அழகுக்கே அடிமைப் பட்டிருக்கும் எனது மதியின் குறைவைத்தான் காட்டுகிறது. ஆனால் நான் நினைப்பதை என்னால் வெளியிடாமலிருக்க முடியவில்லையே!

கண் முன்னல் காணும் 'காதல் தெய்வம்' நீ. கனவிலே தோன்றி மறையும் உருவெளித் தோற்றமல்ல; கற்பனைப் புலவர்கள் காணும் பொய் யுருவுமல்ல; சிற்பிகள் செதுக்கும் சிலையுமல்ல; சித்திரக்காரர்கள் தீட்டும் ஓவியமுமல்ல. ஆனல் கற்பனைக்கும் எட்டாத, கண் முன் காணும் 'அழகுத்தெய்வம்' நீ. அவ்வழகுத் தெய்வத்திற்கே அடிமையான பக்தன் நான். அடிமை வாழ்விலே அன்பு காண்கின்றேன்; அழகு காண்கின்றேன்; வாழ்க்கையின்பம் காண்கின்றேன்.

உனது இதயத்திலே என்றைக்கும் எனக்கு இடம் உண்டு. உன்னுடைய காதலினல் என்னைச் சுத்தப் படுத்து. பகுத்தறிவினல் வழி காட்டு. என் வாழ்க்கையின்பம் உன்னிடத்திலேதான் இருக்கின்றது. அதைத்தான் நான் இப்போழுது உன்னிடமிருந்து யாசிக்கின்றேன்.

என்னைக் கூண்டை விட்டு வெளியே விட்டுவிடாதே. இப்பொழுது நான் சுயேச்சையைவிட அடிமைத்தன்மையையே விரும்புகின்றேன். காதல் மயக்கத்திலே களிப்பு; அதனல் கட்டுண்ட அடிமை வாழ்விலே ஆனந்தம்! மகா காவியங்கள் உன்னைப் போற்றிப் புகழ்கின்றன. உனது முத்து நகைக்காக மகுட மணிகள் கீழே சிந்திச் சிதறுகின்றன. மலரினும் மென்மையான ஆசனத்தை உனக்கு வழங்க மன்னதி மன்னர்களும் கைகட்டிக் காத்திருக்கின்றனர். வாழ்வின் நுட்பமான லட்சியம் இன்னதுதான் என்பதையே நீ தெளிவாகத் தித்திக்கக் காட்டி விடுகிருய். உனது பணிகள் அடிமை வாழ்வை அகற்ற அதி அற்புத மருந்தாக உதவட்டும். உனது செய்கை மாசற்ற ஒளியை நெஞ்சிலே நிரப்பட்டும். உன் கனவு உலகத்திலே ஒரு ஒப்பற்ற சக்தியைப் பரப்புவதாக. உன் எண்ணமே என் வாழ்வின் இன்ப ஊற்ருக உள்ளத்தை மகிழச் செய்யட்டும். நான் வேண்டும் வரம் இதுதான்!

19 OCT 1946
MADRAS

இயற்கை இன்பம்

கா. ம. காளிதாஸ் பிள்ளை

நீலவானக் கடலிலே
    நெடிய வெள்ளி மின்னியே
கோலமாகத் துள்ளியே
    குதிப்ப தென்ன கூத்தடா?

வாரி நீர் பறந்து போய்
    வானில் மேக மாகிப்பின்
மாரி யாக மாறியே
    வருவ தென்ன வித்தையா?

தீய்ந்த கானல் போல முன்
    திமழ்ந்த, காடு, மேடெலாம்
மாய்ந்த தாவ ரங்தொறும்
    வளர்வ தென்ன ஜாலமா?

அப்பினுள்ளே சேற்றிலே
    ஆழ்ந்தி ருக்கும் புன்புழுச்
சிப்பியைத் திறந்ததும்
    சிரிக்கும் முத்தை வைத்த தார்?

குகைக்குமுன் இருந்து நாம்
    குரல் எழுப்பிக் கூவினல்
குகைக்குளே இருந்தெதிர்
    கூறுகின்ற தெவர்கொலோ?

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

10. நாடுகாண் காதை
(தொடர்ச்சி)

கோவலன் கண்ணகி இவர்களுடன் தானும் மதுரைக்கு வருவதாக கவுந்தி அடிகள் ஒப்புக்கொண்டு, வழியில் உள்ள இடர்களைப் பற்றி அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

வழியில் உள்ள இடர்கள்
(64—97)

"கோவலனே! நாம் செல்லும் வழியில் பலவகையான இடர்கள் உள்ளன. சொல்லுகின்றேன் கேள். இவளுடைய மெல்லிய உடல் வெய்யிலின் வெப்பத்தைத் தாங்காது. ஆதலால் நிழலான பூஞ்சோலைகள் நிறைந்த வழியில் நாம் போவோம். அச்சோலைகளில் வள்ளிக் கிழங்குகள் தோண்டிஎடுக்கப்பட்ட குழிகள் ஏராளமாய் உண்டு. அக்குழிகளின் மேல் சண்பக மலர்கள் உதிர்ந்து குழிகளை மறைத்துக் கொண்டிருக்கும். இதை அறியாமல் நடந்தோமானால் அக்குழிகளில் வீழ்ந்து துன்புறுவோம்.

உதிர்ந்து வாடிய பூக்களால் மூடப்பட்ட அக்குழிகளைவிட்டு ஒதுங்கிப் போவோமென்றால், தாழ்ந்த கிளைகளில் தொங்கும் தேன் முதிர்ந்த பலாப்பழங்கள் பகைவர்போல் நம் உடலில் முட்டினாலும் முட்டும்.

இவற்றையும் விலகிப் போவோமென்றால், மஞ்சளும், இஞ்சியும் ஒன்றோடொன்று கலந்து முளைத்திருக்கும் பாத்திகள் உண்டு. இப்பாத்திகளில் பலாக் கொட்டைகள் சிதறிக் கிடக்கும். இவைகள் நம் கால்களில் முட்டி வருத்தத்தைக் கொடுக்கும்.

சோலைகளிலுள்ள இந்த இடர்களை விலக்கி வயல் வழியே செல்வோமென்றால், அவ்வழியில் பூமணம் வீசுகின்ற குளங்கள் உள்ளன. அக்குளங்களில் உள்ள கயல் மீன்களை ஒட்டும் வாளைமீன்களை நீர் நாய்கள் கௌவும். அப்போது அவ்வாளை மீன்கள், மலங்குமீன் பிறளு

கின்ற பக்கத்து வயல்களில் சட்டென்று தாவிப் பாயும். அதைக்கண்டு இப்பெண்மணி நடுங்கக்கூடும்.

கரும்பு வயல்களில் உள்ள பெரிய தேன்கூடுகள் உடைந்து, அருகிலிருக்கும் பொய்கை நீரில் தேனைக்கொட்டி, தேனும் நீரும் கலந்து நிற்கும். அதுகண்ட இவள் அடங்காத் தாகத்தால் அந்நீரை உள்ளங் கையால் மொண்டு பருகக்கூடும். அப்படிச் செய்து விட்டாளானால், அது பெரும் பாபம். (தேனை உண்பது பாபம் என்று சமணர்கள் கருதுகிறார்கள்.)

களை எடுப்பவர்கள், வயலில் பிடுங்கிய குவளைப் பூவை வரப்புகளின் மேல் குவித்து வைத்திருப்பார்கள். அப்பூவில் வண்டினங்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். நாம் வரப்பின்மேல் நடக்கும்போது அறியாமல் அவ்வண்டுகளை மிதித்துவிட்டால் கொலைப் பழிக்கு உள்ளாவோம்.

வாய்க்கால் வழியே போவோமென்றால், அவ்வழியில் புள்ளிகளின் அழகுடைய நண்டுகளும் நத்தைகளும் ஏராளமாயிருக்கும். இவற்றைக் கவனியாமல் நடந்தோமானால், அவைகள் நம் காலால் மிதிபட்டு நசுங்கிவிடும்.

நாம் வயல் வழி போனாலும், சோலை வழி போனாலும் இரண்டு வழிகளிலும் பல இடர்கள் இருக்கின்றன. சோழநாடு மிகுந்த வளப்பம் நிறைந்த நாடானதால், வயல்களும் சோலைகளுமல்லாமல் வேறு நிலமே இந்நாட்டில் இல்லை. ஆகையால் நான் சொன்ன குறிப்புகளை மனதில் வைத்துக்கொண்டு, வழியிலுள்ள எவ்வுயிர்களுக்கும் தீங்கு நேராமல் நீ உன் அருமை மனையாளுடன் நடக்கவேண்டும்.''

64. ''கோவலன் காணாய்; கொண்ட இந்நெறிக்கு,
ஏதம் தருவன யாங்கும் பல காண்மோ;
வெயில் நிறம் பொறாஅ மெல்லியல் கொண்டு
பயில்பூம் தண்டலை படர்குவம் எனினே,
மண்பக விழ்ந்த கிழங்கு அகழ் குழியைச்
சண்பகம் நிறைந்த தாதுகோர் பொங்கர்
70. பொய் அறைப் படுத்துப் போற்றா மாக்கட்கு
கையறு துன்பம் காட்டினும் காட்டும்;
உதிர் பூம் செம்மலின் ஒதுங்கினர் கழிவோர்,
முதிர் தேம் பழம் பகை முட்டினும் முட்டும்;
மஞ்சளும், இஞ்சியும் மயங்கு அரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரல் பகை உறுக்கும்;
கயல் நெடும் கண்ணி காதற் கேள்வ!
வயல் உழைப் படர்குவம் எனினே, ஆங்குப்
பூநாறு இலஞ்சிப் பொருகயல் ஓட்டி
நீர் நாய் கௌவிய நெடும்புற வாளை,

மலங்கு மிளிர் செறுவின் விலங்கப் பாயின்,
கலங்கலும் உண்டு இக் காரிகை; ஆங்கண்;
கரும்பில் தொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்பு சூழ் பொய்கைத் தூ நீர் கலக்கும்;
அடங்கா வேட்கையின் அறிவு அஞர் எய்திக்
குடங்கையின் நொண்டு கொள்ளவுங் கூடும்;
குறுநர் இட்ட குவளை அம் போதொடு
பொறிவரி வண்டு இனம் பொருந்திய கிடக்கை
நெறி செல் வருத்தத்து நீர் அஞர் எய்தி,
அறியாது அடி ஆங்கு இடுதலும் கூடும்;
எறி நீர் அடைகரை இயக்கம் தன்னில்;
பொறி மாண் அலவனும், நந்தும் போற்றாது
ஊழ் அடி ஒதுக்கத்து உறு நோய் காணின்,
தாழ்தரு துன்பம் தாங்கவும் ஒண்ணு;
வயலும் சோலையும் அல்லது, யாங்கணும்
அயல் படக் கிடந்த நெறி ஆங்கு இல்லை;
நெறி இரும் குஞ்சி நீ வெய்யோளொடு,
குறி அறிந்து அவை அவை குறுகாது ஓம்பு என;

கோவலன் — கோவலனே; கொண்ட இந்நெறிக்கு — போகின்ற இவ்வழியில்; ஏதம் தருவன — துன்பம் தரும் காரணங்கள்; யாங்கும் — எவ்விடத்திலும்; பலகாண்மோர் — பலவாக உள்ளன; காணுய் — நீ அவற்றை அறியாய்; (ஆதலால்) காண்மோ — நான் சொல்லக் கேட்பாயாக; வெயில் நிறம் பொறுஅ — வெயிலின் ஒளியைக் கண்ணுல் பார்க்கவும் பொறுத; மெல்லியல் கொண்டு — இம் மெல்லிய தன்மை வாய்ந்த இவளைக் கூட்டிக் கொண்டு; பயில் பூம் தண்டலை — பூக்கள் நிறைந்த சோலை வழியே; படர்குவம் எனினே — செல்வோமானுல்; மண்பக வீழ்ந்த — நிலம் பிளக்கும்படி உள்ளே ஓடிய; கிழங்கு அகழ் குழியை — வள்ளிக் கிழங்குகள் தோண்டி எடுக்கப்பட்ட குழியை; சண்பகம் நிறைந்த — சண்பக மரங்கள் தமது உதிர்ந்த மலர்களால் மூடிய; தாது சேர் பொங்கர் — பூந் தாதுக்கள் வீழ்ந்த சோலையில்; பொய் அறைப் படுத்து — பொய்யான குழிகளில் வீழ்த்தி; போற்று மாக்கட்கு — அவற்றையறியாது அங்கு சென்ற மக்களுக்கு; கையறு துன்பம் — செயலற்றுப் போகும்படியான துன்பத்தை; காட்டினும் காட்டும் — (இவ்வழி) கொடுப்பினும் கொடுக்கும்.

உதிர்பூம் செம்மலின் — அங்ஙனம் உதிர்ந்து வாடிய பூவுள்ள வழிகளை; ஒதுங்கினர் கழிவோர் — விட்டு விலகிச்செல்வோரை; முதிர் தேம்பழம் — தேன் முதிர்ந்த பலாப்பழங்கள்; பகை — பகையாக நின்று; முட்டினும் முட்டும் — முட்டுதலைச் செய்தாலும் செய்யும்.

மஞ்சளும் இஞ்சியும் — மஞ்சள், இஞ்சி ஆகிய இரண்டும்; மயங்கு அரில் — தம்முள் அடர்ந்து பின்னிக் கொண்டிருக்கும்; வலயத்து — பாத்திகளில்; செம்சுளைப் பலவின் — செஞ்சுளையுள்ள பழங்களையுடைய பலாவின்; பரல் — கொட்டைகள்; பகை உறுக்கும் — கால்களைப் பகையாக நின்று வருத்தும்; கயல் நெடும் கண்ணி — கயல் மீன்போன்ற அழகிய நீண்ட கண்களையுடைய இவளின்; காதற் கேள்வ — காதலனாகிய கணவ; வயல் உழைப் படர்குவம் எனினே — வயல் வழியாகப் போவோமானால்; ஆங்கு பூநாறு இலஞ்சிப் பொருகயல் ஒட்டி — பூக்களின் மணம் வீசுகின்ற குளங்களில் ஒன்றோடொன்று மாறு படுகின்ற கயல் மீன்களை ஓடச் செய்து; நீர் நாய் கௌவிய — நீர் நாயால் கௌவப்பட்ட; நெடும்புற வாளை — நீண்ட முதுகினையுடைய வாளை மீன்; மலங்கு மிளிர் செறுவின் — மலங்கு மீன் புரளுகின்ற பக்கத்து வயலில்; விலங்கப் பாயின் — குறுக்காகத் தாவிப் பாயுமானால்; இக்காரிகை — இப்பெண் மகள்; கலங்கலும் உண்டு — (அது கண்டு) நடுங்கினும் நடுங்குவாள்; ஆங்கண் — அவ்விடத்தில்.

கரும்பில் தொடுத்த — கரும்பிலே வைக்கப்பட்ட; பெருந்தேன் சிதைந்து — மிக்க தேனடை அழிந்து; சுரும்பு சூழ் பொய்கை — வண்டுகள் சூழ்ந்த பொய்கைகளில் உள்ள; தூ நீர் கலக்கும் — தூய நீரைக் கலக்கி விடும்; (அது கண்ட இவள்) அடங்கா வேட்கையின் — தணியாத நீர் விருப்பத்தினால்; அறிவு அனுர் எய்தி — அறிவுத் துன்பப்பட்டு (என்றது, அறிவு கலங்கி); குடங்கையின் நொண்டு — உள்ளங்கையால் மொண்டு; கொள்ளவும் கூடும் — அதனைப் பருகவும் கூடும்.

குறுநர் — பறித்தவர்கள்; இட்ட குவளை அம்போதொடு — கீழே போட்ட அழகிய குவளைப்பூவில்; பொறி வரி வண்டு இனம் — புள்ளிகளையும், கோடுகளையும் உடைய வண்டின் கூட்டம்; பொருந்திய கிடக்கை — படிந்து கிடக்கின்ற இடத்தில்; நெறி செல் வருத்தத்து — வழி போகும் வருத்தத்தால்; நீர் அனுர் எய்தி — நீங்கள் துன்பம் அடைந்து; ஆங்கு — அப்பூவிலுள்ள வண்டுகளின்மேல்; அறியாது அடி இடுதலும் கூடும் — உம்மையறியாமல் அடி வைக்கவும் கூடும்.

எறி நீர் அடை கரை — எறிகின்ற அலை நீரையுடைய வாய்க்காலின் கரையில்; இயக்கம் தன்னில் — அங்ஙனம் போகின்ற போக்கில்; போற்றாது — அறியாமல்; பொறி மாண் அலவனும் — புள்ளிகளால் அழகுடைய நண்டுகளும்; நந்தும் — நத்தைகளும்; ஊழ் அடி ஒதுக்கத்து — முறையாக அடிவைத்து நடக்கும் நடையில்; உறு நோய் காணின் — (நமது காலால் நசுங்கி) மிக்க துன்பத்தினைப் பெற்றால்; தாழ் தரு துன்பம் — அதனால் வரும் ஆழ்ந்த வருத்தம்; தாங்கவும் ஒண்ணா — நம்மால் பொறுக்கவும் முடியா; வயலும் சோலையும் அல்லது — வயல்களையுஞ் சோலைகளையு மல்லாமல்; யாங்கணும் — எங்கும்; அயல் படக் கிடந்த — வேறாகத் தனித்துக் கிடந்த; நெறி ஆங்கு இல்லை — வழிகள் அவ்விடத்தில் இல்லை; (எனவே) நெறி இரும் குஞ்சி — சுரிகளையுடைய கரிய கூந்தலையுடைய; நீ வெய்யோளொடு — உன்னால் விரும்பப்பட்டவளாகிய இவளுடன்; குறி அறிந்து —

குறிப்பால் அறிந்து; அவை அவை குறுகாது — அவ்வுயிர்கள் அத் துன்பங்களை அடையாத வகையில்; ஓம்புஎன — பாதுகாத்துப் போவாயாக என்று கூற.

[பொய் அறை — பொய்யான குழி; அதாவது மேலே சருகு களால் மூடப்பட்டு பார்வைக்குக் குழிபோல் தெரியாமலிருக்கும் குழி; பொங்கர் — வாடிப்போன பழம் பூ; வலயம் — பாத்தி; பலா மரத் தின் அடியில் பாத்திகளில் மஞ்சள் இஞ்சி முதலியவைகளைப் பயிர் செய்வது வழக்கம்; குஞ்சி — கூந்தல்.]

★

மூவரும் புறப்படுதல்.

(*98—101*)

இவ்வாறு வழியில் உள்ள இடர்களைப்பற்றிச் சொல்லிவிட்டு, கவுந் தியடிகள் பிச்சைப் பாத்திரத்தையும், தோள்மேல் இடும் உறியையும், மயிற்பீலியையும் எடுத்துக் கொண்டு, "தெய்வ மந்திரங்களே நமக்கு வழித்துணையாகுக" என்று பிரார்த்தனை செய்து, கோவலன் கண்ணகி யுடன் மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

98. தோம் அறு கடிஞையும், சுவர் மேல் அறுவையும்
காவுந்தி ஐயை கைப் பீலியும் கொண்டு,
மொழிப் பொருள் தெய்வம் வழித்துணை ஆக; எனப்
101. பழிப்பு அருஞ் சிறப்பின் வழிப் படர் புரிந்தோர்;

தோம் அறு கடிஞையும் — குற்றமற்ற பிச்சைப் பாத்திரத்தையும் சுவர் மேல் அறுவையும் — தோள்மீது இடும் உறியையும்; கைப்பீலி யும்—கையில் கொள்ளும் மயிற்பீலியையும்; காவுந்தி ஐயை கொண்டு— காவுந்தியாகிய அத் தவமகள் கையில் எடுத்துக்கொண்டு; மொழிப் பொருள் தெய்வம் — மிக்கப் பொருளையுடைய மொழியாகிய தெய்வம் (என்றது தெய்வத்தன்மையுடைய சில மந்திரங்களை) வழித்துணை ஆக என —நமக்கு வழியில் துணை செய்வனவாக என்று கூறிக்கொண்டு செல்ல; பழிப்பு அருஞ் சிறப்பின் — குறை கூறுவதற்கு அரிய சிறப் பினையுடைய; வழிப்படர் புரிந்தோர் — வழியில் போகுதலைச் செய்த அவர்கள் (என்றது, அங்ஙனம் போன அவர்கள் என்க)

[நடக்கும்போது வழியிலுள்ள உயிர்கள் காலிற்பட்டு அழியாம லிருக்க நிலத்தைக் கூட்டுவதற்காக மயிலின் தோகையைக் கையிற் கொண்டு போவது சமணத் துறவிகளின் வழக்கம்.]

(தொடரும்)

பிரிவும் பரிவும்

வெ. ராமராவ்

அவன் மன்னர் படையைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தன். ஆயிரக் கணக்கில் ஊதியம் பெருபவன். மத்தியக் கிழக்கில் வெற்றி கண்டு, பர்மா முன்னணிக்குச் சென்றுகொண்டிருந்தபடை ஒன்றின் பிரபல டாக்டர் தலைவன். தென் கிழக்கு ஆசியாயுத்தஅரங்கத்துக்குச் செல்லுமுன், வழக்கப்படி கிடைக்கும் ஒரு மாத விடுமுறையில் தாய்நாடு திரும்பி வந்திருந்தான். அந்த ஒரு மாத காலத்தில் இருபக்கத்து பிரயாணத்துக்காகப் பிரத்தியேகமாகத் திட்டம்போட்டு ஒதுக்கி வைத்திருந்த பதின்மூன்று நாட்கள் நீங்கலாக, எஞ்சியிருந்த பதினேழு தினங்களில் அவனுக்கு மிக மிக வேண்டிய உற்றார், உறவினர்களையும், சில உயிர் நண்பர்களையும் கண்டு அவர்களுடன் அளவளாவிச் செல்ல அவன் வெகு ஆசைப் பட்டான். ஆனால் அப்பொழுதைய பிரயாண வசதிகளையும் உன்னிப் பார்க்குமிடத்து, அந்தப் பதினேழு நாட்கள் போதுமா என்ன அவன் வகுத்த திட்டத்தை நிறைவேற்ற?

ஆனால் அவன் கடந்த இரண்டாண்டுகளாக வழிமேல் விழி வைத்து "எப்போ வருவாரோ?" என்று எண்ணி, ஏங்கித் தவித்து அவனுடைய வருகைக்காகத் தவம் கிடந்திருந்த அவனுடைய மனைவி, தன்னுடன் அவன் முதலில் அவளுக்குக் கடிதத்தின் மூலம் சொல்லியிருந்தபடி, குறைந்தது ஒருவார காலமாவது தங்கிச் செல்வான் என்று எதிர்பார்த்திருந்தாள். பாவம் அவனும்தான் அப்படித் தங்கிப்போக வெகுவாக விரும்பினான். ஆனால் சில தவிர்க்க முடியாத, எதிர்பாராத சந்தர்ப்பங்களால் இரண்டு தினங்களுக்கு மேல் அவனுக்கு அவளுடன் தங்கியிருக்க முடியவில்லை. காதலைவிட கருமமே முக்கியமாக இருந்தது. "மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்......கருமமே கண்ணாயினர்" என்றபடி அவளை விட்டுப் பிரியநேர்ந்தது அவனுக்கு

அவன் ரயிலடிக்குப் புறப்படும் நேரம் நெருங்க நெருங்க, அவள் நெஞ்சு வெடித்து விடுவது போலிருந்தது. உள்ளத்தில் துக்கம் பொங்கி அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அவள் படித்தபெண். நிறைகுடம். கணவனின் கடமையைப் பற்றியும், பொறுப்புணர்ச்சியைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தாள். தன் கண்கள் கலங்கி கசிந்து கொண்டிருந்தால், கொழுநன் மனசு படாதபாடுபடும் என்பதை உணர்ந்திருந்தாள். அவளுக்கு, புதிதாக விவாகமாகி கைக்காப்பு களைவதன் முன்பாகவே யுத்த பேரிகையின் அழைப்புக்கு வணங்கி உருவிய உடைவாளுடன் போர்க்களத்துக்கு விரைந்தோடும் தங்கள் கணவரைக் கலங்காத கண்களுடன் ஆசி கூறி விடைதந்து அனுப்பும் நம் நாட்டு

பண்டைக்கால வீர ரஜபுத்திர ரமணிகளின் நினைவு வந்தது. வெகு பிரயாசையின்மீது தன் மனக் கொந்தளிப்பை அடக்கிக்கொண்டு முகத்தில் புன் முறுவல்கள் அலைத்துக்கொண்டிருக்க, கணவனுடன் ரயிலடிக்குச் சென்று, இனிமையாகப்பேசி வழியனுப்பிவிட்டு வந்தாள்.

வீடு 'வெறிச்சோ' என்று இருந்தது. அவள் எதைப்பார்த்தாலும், அது கடந்த இரண்டு தினங்கள் அவள் தன்னுடைய ஆருயிர்த் தலைவனுடன் கழித்த அமுத நிமிஷங்களை நினைப்பூட்டுவதாக இருந்தது. பேதை! ஏதாவது ஒருபுஸ்தகம் படித்து மனதை சாந்தப் படுத்திக் கொள்ளும் எண்ணத்துடன், புத்தக அலமாரியைத் திறந்தாள். ஆம், "அவர் 'பாரதி கவிதை'யை எடுத்துச் சொன்னார் போகும்போது' என்கிற நினைவு வந்தது. அவர் பாரதியின் கவிதையை மட்டுமா எடுத்துச் சொன்னார்? இல்லை, இல்லை: அவளுடைய உள்ளத்துக் கவிதையையும் எடுத்துக்கொண்டு அவளைத் தவிக்கவிட்டுச்சென்றார்.

மேஜையின் பக்கம் திரும்பினாள் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் கூடிய அந்த வெள்ளித் தட்டின் மத்தியில் நல்ல மரகத ஆபரணத்தைப்போல விளங்கிக் கொண்டிருந்த அது என்ன?... புறப்படும் அவசரத்தில் அவன் மறந்து சென்ற வெற்றிலைச் சுருளில் ஒன்று. பட்டின் பளபளப்புடன் கூடிய அதைக் கையில் எடுத்தாள். அவளுடைய நெஞ்சில் அதொருவித உறுத்தலும் வேதனையும் உண்டாயிற்று.

சற்று நிம்மதியாக ஆட்டிக் கொண்டு இன்புறும் எண்ணத்துடன் ஊஞ்சலை நெருங்கினாள். நிறை வசந்தத்தில் காலைக் கதிரவனின் தங்கக் கிரணங்கள் பட்டு தகதகத்துப் பிரகாசிக்கும் மரகதப் புல்வெளி போல் விரிக்கப்பட்டிருந்த அந்தப் பச்சை ரத்தினக் கம்பளத்தின் மீது மாணிக்கமும் பவழமும் இழைத்தாற் போல திகழ்ந்து கொண்டிருந்த சில உதிர்ந்த ரோஜா இதழ்கள் அவள் கவனத்தைக் கவர்ந்தன. காதலனுடைய சட்டையில் பொத்தான் துவாரத்தில் காலையில் தான் ஒரு அழகிய ரோஜா மலரைச் செருகியிருந்தது அவள் நினைவுக்கு வந்தது. அவன் வீட்டை விட்டுப் புறப்படும் வேகத்தில் அம்மலர் கீழே விழுந்து அதன் இதழ்கள் சுற்றிலும் சிதறிக் கிடந்தன போலும். அது அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் பூத்த ரோஜா என்பதற்காக அதனிடத்து அவளுக்கு ஒரு அலாதி அன்பும் பெருமையும் இருந்தது.

அவ்விதழ்களில் சிலவற்றை எடுத்து அன்புடன் கண்களிலும் இதழ்களிலும் ஒற்றிக் கொண்டாள். அம்மலரின் ஸ்பரிசத்தில், அவளுடைய கணவனுடன் சமீபத்தில் கழிந்த இரண்டு நாளைய ஸ்வர்க்க சுகமும், மனச் சமாதானமும் நினைவுக்கு வந்தன போலும்! அவள் கண் தாமரை மலர்கள் இரண்டொரு கண்ணீர் முத்துக்களைச் சிந்தின. அந்த முத்துக்கள் அவளுடைய காஞ்சனக் கன்னங்களின் மீது உருண்டு உதிர்ந்தன. அக்காட்சி சோககரமானதுதான். இருந்துங்கூட அதில் ஒருவித அற்புதமான தெய்வீக எழில் இருக்கத்தான் செய்தது — உரைந்த பனியில் மூடப்பட்ட மலைச் சிகரத்தின் பொலிவு நிறைந்த அழகைப் போல!

புத்தக ஆராய்ச்சி

"ராஜா சாண்டோ." ஆசிரியர்: டி. வி. ராமநாத்; பிரசுரம்: 'பேசும் படம்' காரியாலயம், தியாகராயநகர், சென்னை; விலை: ரூ 2—0—0.

பொள்ளாச்சியிற் பிறந்த ராஜா சாண்டோ (புதுக்கோட்டை அவர் வளர்ந்த ஊர்) வுக்கு அவர் தந்தை குட்டியப்ப பிள்ளை வைத்த பெயர் நாகலிங்கம் என்பது. பின்னால் அவரைத் தாயினும் சாலப் பரிந்து வளர்த்த அண்ணி, அவரை 'ராஜா' என்ற செல்லப் பெயராலேயே அழைத்து வந்த காரணத்தால் அவரது இயற்பெயர் மங்கி மறைந்து, செல்லப் பெயரே நிலைத்து விட்டது. பிற்பாடு தேகப் பயிற்சி நிபுணர் ஆகியதால் சாண்டோவும் சேர்ந்து அவர் பெயரை ராஜாசாண்டோவாக மாற்றி விட்டது.

வேறு எந்த நடிகரின் வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக்க முடியாத அத்தனை சுவையான சம்பவங்கள் பல நடிக டைரக்டர் ராஜாவின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கின்றன. அச்சம்பவங்களே அவரது திறமைக்கும் புத்திகூர்மைக்கும், மனோதிடத்துக்கும் தக்க உதாரணமாய் விளங்குகின்றன. மற்றபடி புத்தகத்தின் அமைப்பும், அச்சும் வெகு அருமை.

"சினிமா நக்ஷத்திரங்கள்." எழுதியவர்: எஸ். எம். சந்தானம் (டைரிகீப்பர்;) கிடைக்குமிடம்: 87, T. H. ரோடு, வண்ணாரப் பேட்டை, சென்னை; விலை: ரூ. 0—10—0.

இன்றைய தமிழ் சினிமா உலகத் தொடர்புடைய இருபது நடிகர்களை அவர்கள் நடித்த படங்களின் குறிப்புகளுடன் கண்ணியமான முறையில் நகைச் சுவை ததும்ப வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார் ஆசிரியர். அடுத்து வரும் புத்தகம் இன்னும் நல்ல முறையில் வெளிவரும் என்று நம்ப இடமிருக்கிறது.

"ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்," (கோயமுத்தூர் ஜில்லா) 1944-45 வருஷத்திய ஆண்டு அறிக்கை.

உன்னதமான லக்ஷியத்தைக்கொண்டு, எல்லாவகையிலும் நாட்டிற்கு வழிகாட்டியாக நிற்கும் பெரியநாய்க்கன் பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தின் 15வது ஆண்டு நிறைவு அறிக்கை ஒன்று வரப்பெற்றோம்.

— தா. நா

அன்புக் காணிக்கை

ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

★

"எப்படீங்க, நான் மீனுக்ஷி அத்தையை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லட்டும்?" என்ருள் ஜானகி.

"என்ன செய்வது ஜானகி? நம்ம அதிர்ஷ்டம் இப்படி ஆகி விட்டதே. நாம் பின் கட்டில் இருந்துகொண்டு நம் பங்களாவை வாடகைக்கு விட்டால் இந்தக் காலம் கட்டாயம் மாதம் நூற்று ஐம்பது ரூபாயுக்குக் குறையாமல் வாடகை கிடைக்கும். ராஜுவின் ஆபீஸ் துரைக்குக்கூட ஒரு பங்களா வாடகைக்கு வேண்டுமாம். ராஜு நேற்றுச் சொன்னுன்" என்ருன் சந்திரசேகரன்.

"ஐயோ, அத்தையிடம் இதை எப்படிச் சொல்வேன்" என்று நெஞ்சு குமுற வேதனை நிறைந்த குரலில் பொருமினுள் ஜானகி. மேலே என்ன சொல்வதென் றறியாமல் சேகரன் மௌனம் சாதித்தான். இவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட மௌனம் அவர்களுடைய துயரத்தைப் பதின் மடங்கு அதிகமாக்கியது. 'இதைத்தவிர வேறு உபாயம் எதுவும் கிடையாதா?' என்பது போல் ஜானகி மிகப் பரிதாபமாகக் கணவனை நோக்கினுள். சேகரனுக்கு மனைவியின் துயரத்தைக் காணச் சகிக்கவில்லை போலும்; அங்கிருந்து எழுந்து தன் அறைக்குச் சென்று விட்டான்.

ஜானகிக்குத் துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. எவ்வளவு செல்வாக்குடன் விளங்கிய குடும்பம்! தினசரி பத்துப் பேருக்கு அன்னமளித்து உதவி செய்து தலை தூக்கிவிட்ட குடும்பம், இந்தக் கதிக்கு வந்து விட்டதென்ருல் அவள் இதயம் நோவாமலிருக்குமா?

ஜானகி அவளுடைய பெற்ருேர்களுக்கு ஏகபுதல்வி. எத்தனையோ தான தருமங்கள், க்ஷேத்திராடனங்கள் எல்லாம் செய்த பிறகு பிறந்த குழந்தையவள். 'இனி நமக்கேது குழந்தை?' என்று நிராசையடைந்து அவள் அத்தை அனுதையாக விட்டுப் போன குழந்தை சேகரனை அவள் பெற்ருேர் சொந்தக் குழந்தை எனப் பாவித்துச் சீராட்டி வருகையில் தான் ஜானகி பிறந்தாள். ஜானகியின் மூன்ரும் வயதிலேயே அவள் தாயார் காலஞ்சென்ருள். அன்று முதல் மீனுட்சி அத்தைதான் குழந்தை ஜானகியை எடுத்து வளர்த்து வந்தாள். இதற்கு ஜானகி பிறந்த பொழுதிலிருந்தே அவள் தாயார் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டதும் ஒரு காரணம். தாய்க்குத் தாயாக அவளைப் போஷித்துவரும் மீனுட்சி அத்தை இல்லாமல் குழந்தை வளர்வது சிரமம் என்று அறிந்த ஜானகியின் தகப்பனுர் கோபாலய்யர், தன் பங்களாவின் பின் கட்டி

லேயே மீனாட்சி அத்தை குடும்பத்துடன் வந்து வசிப்பதற்கான ஏற்பாடுகள் செய்தார். குழந்தையின் யோக க்ஷேமத்தைக் கருதி ஐயர் மறு விவாகமும் செய்து கொள்ளவில்லை. குழந்தை, அத்தையின் அன்பு பொழியும் பராமரிப்பிலும், அத்தான் சேகரனின் சிநேகமய விளையாட்டிலும் நன்கு வளர்ந்து நெஞ்சை யள்ளும்படியான அழகுப் பதுமையானாள்.

தாய்தந்தை யற்ற சேகரனுக்கு கோபாலையர் தெய்வம் போல் விளங்கினார். பையனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்து, தன் செல்வப் புதல்வியைக் கலியாணம் செய்து கொடுத்து, தன்னிடமே ஜூனியராகவும் அமர்த்திக் கொண்டார் வக்கீல் கோபாலையர்.

மீனாட்சி அத்தையைக் கோபாலையர் வீட்டில் சமையற்காரியென்று யாரும் பாவிப்பதில்லை. சமையல் உத்தியோகமானாலும் வெளி ஜனங்கள் அவளை அந்தக் குடும்பத்தில் ஒருவளென்றே எண்ணும்படி வீட்டில் அனைவரும் மதித்து வந்தனர். அவளுக்கு ஒரே ஒரு பிள்ளைதான், பரம சாது. அவனுக்கும் கலியாணமாகிக் குடியும் குடித்தனமுமாக இருந்ததால் மீனாட்சி அத்தை வீட்டுக் கவலையே இல்லாமல் எப்பொழுதும் ஜானகியின் வீட்டிலேயே பெரும்பாலும் காலம் கடத்தி விடுவாள்.

ஒரு நாள் கோர்ட்டிலிருந்து வந்த கோபாலையர் தலைவலி என்று படுத்தவர். அவ்வளவு தான். பிறகு அவர் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. அவருடைய செல்வாக்கும் அவருடனேயே போய்விட்டது. சேகரனின் 'பிராக்டீ'ஸும் அதன் பிறகு சோபிக்கவில்லை. வரும்படியும் குறைந்தது. யுத்தம் காரணமாக விலைவாசிகள் ஏறின. பெங்களூர் போன்ற பெரிய நகரத்தில் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் கனவான்களுக்குமே குடும்பத்தை நிர்வகிப்பது சிரமமாக இருந்த பொழுது சேகரன் என்ன செய்வான்? போதாக்குறைக்கு மூன்று குழந்தைகளுக்கு வேறு தந்தையாகி விட்டான். மாமனார் ஏராளமாகச் சம்பாதித்துங்கூட, தர்ம தாதாவான அவர் பெண்ணிற்கு விட்டுப்போன சொத்து மிகச் சொற்பம். அதுவும் சிறுகச் சிறுகக் கரைந்து கொண்டு வந்தது. வீட்டில் ஆட்கள் ஒவ்வொருவராக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஆனால் மீனாட்சி மட்டும் அவர்கள் கஷ்ட நிலைமையை உணர்ந்து சம்பளமில்லாமலேயே உழைத்து வந்தாள். அவளுக்கு இனிப் பணம்தான் எதற்கு? பாடுபட்டுப் பையனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்து விட்டாள். அவனும் நல்ல பிள்ளையாக லக்ஷணமாக நாலு காசு சம்பாதித்து மானமாகத் தன் குடும்பத்தை நடத்தி வருகிறான். ஜானகியின் கஷ்ட நிலைமைதான் மீனாட்சியின் உள்ளத்தை வதைத்து வந்தது. பெற்ற பெண்ணை விடப் பதின் மடங்கு அதிகமாகப் பாசம் வைத்திருந்த ஜானகியின் குடும்ப சுகத்தைப் பற்றியே எண்ணி எண்ணி மனம் உருகினாள் மீனாட்சி.

சேகரனுக்கு நாளுக்கு நாள் பணக் கவலை அதிகரித்தது. செய்வதென்ன வென்றறியாமல் திகைத்தான். வக்கீல் தொழிலை விட்டொழித்துவிட்டு வேறு ஏதாவது வேலைக்குச் சேரலாமென்று எவ்வளவோ முயன்றும் பயனில்லை. கடைசியில் பெங்க

ஞூரில் வீடுகளுக்குக் கிராக்கி ரொம்ப ஏற்படவே, தான் பின் கட்டில் இருந்துகொண்டு பங்களாவை நல்ல வாடகைக்கு விட்டு விடுவதென்று யோசித்தான். அந்த பங்களாவிற்குக் கூசாமல் மாதம் ரூ. 150 வாடகை கொடுக்கப் பலர் தயாராயிருந்தனர். பங்களாவை வாடகைக்கு விடுவதென்ருல் பின் கட்டிலிருந்து மீனுட்சி அத்தையைக் வெளியே போகச் சொல்ல வேண்டும். அவளை வெளியே போகச் சொல்ல அவனுக்கு லேசில் மனம் வரவில்லை. எவ்வளவோ சிந்தித்த பிறகு இந்த முடிவுக்கு வந்தவனுய், தன் யோசனையைத் தயங்கிக் கொண்டே மனைவிக்குத் தெரிவித்தான். இது பற்றிய சம்பாஷணை தான் முன்னே குறிப்பிட்டது.

"பெற்றதாய்க் கொப்பான, அன்புக் களஞ்சியமான, மீனுட்சி அத்தையை வீட்டை விட்டுத் துரத்துவதா?... ஐயோ, இவ்விதம் நினைப்பதுகூட மகா பாவமாச்சே......" என்று மனமுருகினுள் ஜானகி. துயரம் தாளாமல் அவள் அழகிய விரிந்த கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டு விழுந்தன.

தம்பதிகளின் சம்பாஷணையை கைக்காரியமாக அடுத்த அறைக்கு வந்திருந்த மீனுட்சி கேட்டாள். ஆனுல் அந்தக் குடும்பத்துக்கு ஆதி நாள் தொட்டு தான் செய்துவரும் உதவியை மறந்து, தன்னை வீட்டை விட்டு அனுப்பத் தீர்மானிக்கிருர்களே என்று அவர்கள் மீது அவள் கோபம் கொள்ளவில்லை. ஆனுல் அனுதாபப் பட்டாள். எப்பாடு பட்டாகிலும் அந்தக் குடும்பத்துக்குத் தன்னுலான உதவி செய்ய வேண்டு மென்று அவள் மனம் துடித்தது. என்ன நேரிடினும், தான்மாத்திரம் ஜானகியைவிட்டுப் பிரியப் போவதில்லை என்று உறுதி கொண்டாள்.

அன்று மாலை தன் புதல்வன் கிட்டு வேலையிலிருந்து வீடு திரும்பியதும் அவனுடன் வெகுநேரம் ஏதேதோ வேண்டிய விஷயங்களையெல்லாம் பேசிவிட்டு பிறகு எப்பொழுதும் போல் வீட்டுவேலைகளைச் செய்யலானுள் மீனுட்சி.

வேலை செய்ய, செய்ய மனது சிந்தனையிலிறங்கிற்று. தன் வயிற்றில் பிறந்த பெண் இவ்விதம் கஷ்டப்பட்டால் தான்சும்மா இருக்க முடியுமா? தன் கண்முன் இதே ஜானகி எவ்வளவு சீரும் சிறப்புமாக வளர்ந்தாள்! ஐயோ, அவளுடைய கதி இப்பொழுது சோற்றுக்கே தாளம் போடும்படி யாகி விட்டதே. தன் சொந்தக் குழந்தையை விடப் பதின் மடங்கு அருமை பாராட்டி வளர்த்த பெண் இப்படிக் கஷ்டப்பட, தான் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதா?......எல்லாம் பகவான் விட்டவழி ...... இப்படி மீனுட்சியின் மனம் சிந்தனைக் கடலில் கொந்தளித்தது.

மாலை நெருங்க நெருங்க ஜானகி விஷயத்தை எப்படி மீனுட்சி அத்தையிடம் பிரஸ்தாபிப்பது என்று திகைத்தாள். அவள் மனம் மீனுட்சியை விட்டகல்வதற்குக் கொஞ்சமும் இணங்கவில்லை. இருபத்தாறு வருஷமாய் வீட்டோடு வீடாக உறவினரைவிட அதிகப் பற்றுதலுடனும் உரிமையுடனும் பழகி வந்த மீனுட்சி தன்னை விட்டு வேறெங்கும் செல்வதற்கு விரும்ப மாட்டாள் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். தங்களிடையே முளைத்து வளர்ந்த அன்பு விருட்சத்தில் பூத்த மலரை எவராலும் பறித்துக் கசக்கி எறிய முடியாதென்பதும் அவளுக்கு

நன்ருகத் தெரியும். ஆனல் இந்த நெருக்கடியான நிலைமையில் அவள்தான் என்ன செய்ய முடியும்?......

பொழுது நெருங்க நெருங்க, கணவன் வந்து கேட்டால் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஜானகி திண்டாடிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் இரவு சாப்பாடானதும் சேகரன் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஜானகி வெற்றிலை மடித்துக்கொடுத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் மீனட்சி கையிலொரு உறையுடன் அங்கே வந்தவள், உறையை சேகரனிடம் கொடுத்துவிட்டு "இந்தாப்பா சேகரா, இதை வைத்துக்கொள். ஆபத்துக் காலத்திற்கு இருக்கட்டுமென்று சீட்டுப் பணம் கட்டி வந்ததையெல்லாம் அவ்வப் பொழுது பேங்கில் போட்டு வைத்திருந்தேன். இதில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. எனக்கு கிட்டுவேறு, நீவேறு ஜானுவேறு இல்லே. உங்கள் கஷ்டத்திலும் சுகத்திலும் எனக்கும் பங்குண்டு. இந்தா, இதை மறுக்காமல் ஏற்றுகொள்ளு. ஆனல் சேகரா என்னை மாத்திரம் ஜானகியிட மிருந்து பிரித்து விடாதே......" என்று தழுதழுத்த குரலில் உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னுள் மீனட்சி.

அந்த உத்தமியின் அன்புக் காணிக்கையைப் பார்த்து சேகரனும், ஜானகியும் திகைத்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தங்கள் யோசனையை மீனட்சிஅத்தை எப்படியோ அறிந்து விட்டாளென்று தெரிந்து இருவரும் அவமானத்தால் குன்றிப் போயினர். "அத்தே, எங்களை மன்னிக்க வேண்டும்" என்று இருவரும் அந்த அன்புத் தெய்வத்தின் கால்களில் நெடுக விழுந்து வனங்கினர்கள். மீனட்சியின் கண்களிலிருந்து தம்பதிகளின்மேல் வழிந்த ஆனந்தக்கண்ணீர் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தது!

உண்மைக் காதலின் உயர்வை உலகத்து உணர்த்தும் இந்த நாடகம், ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையிலுள்ள ஒரு சிறு வரலாற்றை அஸ்திவாரமாகக்கொண்டு எழுந்த ஒரு அலங்கார மாளிகை.

★

விசாகை

கே. ஸி. எஸ். அருணசலம்

மாலை நேரம். காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு நந்தவனம். விசாகை மலர் பறித்துக் கொண்டிருக்கிருள். தருமதத்தன் அவளை நோக்கி வருகிறுன்.

1

தருமதத்தன்: *யார், விசாகையா?...*

விசாகை: (திரும்பி) *ஓ! தாங்களா! நல்வரவு.*

தரும: என் புனையா ஓவியத்தை தனிமையிற் காணப்பெற்ற இன்று, ஒரு நன்னுள்.

(விசாகை நாணியவளாக சற்று அப்புரமாகத் திரும்புகின்ருள்)

தரும: *அன்பே, ஏனிந்த நாணம்?*

விசா: பல்லாயிரம் ஆண்டுகளாகப் பழகிய காதலன்தான் என்றுலும், கதிரவன் தன் முன் நிற்கையில் 'அந்தியின்' கன்னங்கள் சிவக்கத் தவறுவதில்லையே!

தரும: *விசாகை!*

விசா: *அன்ப!*

தரும: கனவெல்லாம் விசாகையாய், கற்பனை யெல்லாம் விசாகையாய், இன்னும் எத்தனை காலம் நான் இவ்வாறு ஏங்குவது?

விசா: அல்லிமலர், என்றும்அழகுத் திங்களுக்குத்தானே உரியது?

தரும: விசாகை! சந்திரனின் தண் கதிர்களைவிரும்பி, வான் நோக்கி ஏங்கும் சகோரத்தைப்போல் நாளெல்லாம் உன் இன்ப நினைவாலே நலியும் என் துயரை நீ உணர வில்லையா?

விசா: காதலுற்றபிறகுதான் கண் கவரும் மலரும் கனியாகப் பரிணமிக்கிறது. மலர் தன் மனதில் மண்டிக் கிடக்கும் ஆசைப் பெருக்கைத் தன் காதல் வண்டினிடம் கொட்டி விடுவதில்லை. ஆனல் வண்டின் பதட்டம் தான் இன்னிசையாக வெளிப்படுகிறது.

தரும: ஆம். விசாகை! ஆடவன் வெறும் ஆண்மையின் உறைவிடம். கன்னி,காமனின்படைக்கலம். அதன் முன் அவன் அமைதி அழிவதில் வியப்பில்லை.

விசா: இருக்கலாம், ஆனல் அக் காதல் நோயாலே விசாகை படும் துயரைத் தாங்கள் மறந்து விட்டீர்கள் போலும்.

தரும: அதற்கு என் ஏக்கமே காரணம். அன்பே! செந்தாமரை ஒருத்தியின் திருமுகமாயிற்று. அதிலே சீர்கொண்ட நுதலாகப் பிறைமதி சேர்ந்தது. காமனின் கரும்பு வில் இரு கரும்புருவச் சிலேகளாகச் சமைந்தது. கருநீலக் குவளை அம்முகத்திலே இரு கண்களாயின. பவழத்தின் செம்மை அவளது இதழிலே படிந்தது. தேனின் இனிமை அவளது சொல்லிற் கலந்தது. யாழின் பண்கள் அவளது சொற்களாய்ப் பிறந்தன. காந்தள் மலர்கள் அவளது கரங்களாயின. கருக்கொண்ட கார் முகில் அவளது கூந்தலில் தவழ்ந்தது. வசந்தத்தின் புதுத் தளிர்கள் அவளது மேனியிற் சேர்ந்தன. என் கற்பனையிலே இவ்வாறு பிறந்தவள் தான் என் விசாகை. ஆனல்......

விசா: ஆனல்!...

தரும: அவள் நாகத்தினும் கொடும் நஞ்சு!

விசா: (புன்சிரிப்புடன்) ஏனே?

தரும: கடித்துக் கொல்லும் கரு நாகத்தைக் காட்டிலும், கண்ணுல் க் கடூரமாய்க் கொல்லுகின்ருள் அக்கன்னி.

விசா: அன்ப! காதல் ஒரு கரையற்ற இன்பம். ஆனல் அது கை சேருவதற்குக் கடலினும் பெரிய பொறுமை வேண்டும். சிந்தனைப் புயலாலே அக்கடல் பெரிதும் கொந்தளித்து அலை வீசும்.

தரும: விசாகை! அதோ! சூரிய பொற்குடம் அந்திவானின் செந்தீப் பரப்பிலே ஆழ்கிறது. செக்கர் வானத்தின் சீர் நிறத்தைக் கவ்வ கன்னங்கரிய இரவு காத்து நிற்கிறது! நாம் பிரிவோம்!

(ஒரு பூஞ்செடி மறைவிலிருந்த ஒருத்தி இதையெல்லாம் கண்ணுற்றுச் செல்லுகின்ருள்.)

2

குளக்கரையில் ஒரு பவழமல்லி மரத்தடியில் கையால் கன்னத்தைத் தாங்கியவளாய் ஒருத்தி உட்கார்ந்திருக்கின்ருள். பவழக் காம்புகள் போல அம்மரத்தின் மலர்க் காம்புகள் சிதறிக் கிடக்கின்றன. அருகே ஒரு குடம். மற்ருெருத்தி அங்கு வருகிருள்.

உட்கார்ந்திருந்தவள்: வா! கயற்கண்ணி! நேற்று மாலை ஆலயத்திற்குச் செல்ல நீ வருவாய் என்று எதிர்பார்த்தேன்.

கயற்கண்ணி: செல்வம்! நான் வருவதாகத்தான் இருந்தேன். ஆனல்......

செல்வம்: ஆனல் என்ன?

கயற்: தென் வாயிற் பூவனத்தின் வழியாக நான் நேற்று மாலை வந்தேன். அங்கே கண்ட ஒரு காட்சியில்தான் மாலைப்போதே முடிந்து விட்டது.

சேல்: அப்படியா? அக்காட்சி என்னவோ?...

கயற்: ஒரு கனிந்த காதல் நிகழ்ச்சி.

சேல்: நீ என்ன சொல்லுகிருய் கயற்கண்ணி?...யார் அவர்கள்?

கயற்: நம் விசாகையும் தருமதத்தனும் தான்.

சேல்: (வியந்து) விசாகையா?

கயற்: ஆம். அவள்தான். சற்று தூரத்தில் தருமதத்தன் வரும் போது நான் பூங்காவில் ஒரு புறமாக வந்து கொண்டிருந் தேன். அவன் பூக் கொய்து கொண்டிருந்த விசாகையை நோக்கிச் செல்வது கண்டு அங்கிருந்த ஒரு பூஞ்செடி மறைவிலிருந்து நிகழ்ச்சியைக் கண்ணுற்றேன். பாவம்! தாளாத காதற் பெருக்கு......

சேல்: தருமதத்தன் விசாகையின் அத்தை மகன் அல்லவா? அவனுக்குத் தன் உள்ளத்தை விசாகை நிவேதித்து விட்டாள் போலும்.

கயற்: நீ அறியாது பேசுகிருய்.

சேல்: பின் என்ன?

கயற்: நிலைமையை நோக்கினல் விசாகை வெகு நாட்களுக்கு முன்பே தருமதத்தனுக்குத் தன் உடலையும் நிவேதித் திருக்கலாம்.

சேல்: ஆகவே களவுமணம்....

கயற்: ஆம், ஐயமில்லை.

சேல்: இளமை, காதல்; கனலும் காற்றும்!...

கயற்: சரி, போவோம் வா.

(இருவரும் பிரிகின்றனர்.)

3

இந்த அவதூறு விரைந்து பரவுகிறது. பலர் பலவாறுபேச ஆரம்பிக்கின்றனர். விசாகை இதைச் செவியுற்ருள். தங்கள் காதல் மனத்தளவிற் பொங்கியெழுந்து மாசுபடாதிருக்க அயலார் கூறும் பழிச் சொல்லைக் கேட்டுப் பதை பதைத்தவளாய், கந்திற்பாவை என்னும் தெய்வத்திடம் முறையிடுகிருள்.)

விசா: கந்திற்பாவாய்! இந்த அபலையின் அழுகுரலைக் கேட்டு நீ இரங்காயா? காதல், கட்டிளமையின் பிறப்புரிமை யல்லவா? பூங்கொடி ஒரு கொழுகொம்பைத் தழுவ எண்ணுவது தீங்கா? தருமதத்தர் என் உயிர்த் துணைவர் என நீ அறியாயா? எங்கள் அன்பு மாசுபட்டதா? உள்ளக் காதலுக்கு அயலார் கள்ளம் கற்பிக்கின்றனரே, இதை நீ அறியாயா? காதலை விரும்பிய கன்னி ஒருத்திக்குக் கண்ணீர் ஒன்றுதான் கைம்மாறு? அயலார் கூறும் இந்த அவச்சொல்லை நீ அழித்தல் வேண்டும். ஆருது பொங்கும் என் பெருந் துயரை நீ ஆற்றல் வேண்டும். தருமதத்தரது மாசற்ற குண நலத்தை உலகுக்கு உணர்த்த வேண்டும். எம்மைப் பழிச்சொல்லுக்கு இரையாக்கி விடாதே! கந்திற்பாவாய்! என் தெய்வமே உன்னை வணங்குகின்றேன்.

[கந்திற்பாவையின் அருட் கண்நோக்கு விசாகைபால் விழுகிறது.]

கந்திற்பாவை: உன் கண்ணீர் தவிர்வதாக! என் குழந்தாய், உன் அவலம் ஒழி. உலகிரே! தாமரை சூரியனைக் காதலிப்பது உண்மை. ஆனல் சூரியனல் தாமரை இன்னும் மாசுறவில்லை. தருமதத்தனும், விசாகையும் உயிர்க் காதலர்கள்தான். ஆயினும் இவர்களிடையே இன்னும் களவு நிகழ்ந்ததில்லை. பழிச்சொல் ஒழிக! தூய்மை குன்ருத இவ்விருவர் காதலும் நாளும் வளர்ந்து நல்வாழ்வு அருளுக!

மக்கள் யாவரும் விசாகையை யும் தருமதத்தனையும் புகழ்கின் றனர்.

ஆனல் விசாகை தன் மனதிற் பிறந்த சினமும் வெறு ப்பும் தவிராதவளாய் தன் வாழ் நாள் முழுதும் கன்னிமாடம் புகுந்து கன்னியாகவே கழிப்ப தாகச் சபதம் பூண்டு தாயிடம் வருகிருள்.

விசா: அன்னையே! தெய்வ வாக் கில்லாது போயிருப்பின் உண் மை தெளியாமலே போயிருக் கலாம். அயலார் கூறிய அவச் சொல்லே நிலைத்திருக்கும். அமு தத்தினுள்ளே உலகம் ஆலத் தைக் கொட்டியது. தருமதத் தர் என் உயிர் மன்னர். ஆயி னும் இப்பிறப்பில் இனி அவ ரைக் கைப்பிடிக்க மாட் டேன். எனது சிந்தையின் செம்மையைத் துலக்குவதற் காகவும் உலகின் முன் ஒரு மரு வற்ற வாழ்வை நடத்தி என் மன அடக்கத்தினை நிலை நாட்ட வும் என் வாழ் நாளெல்லாம் கன்னியாகவே கழிப்பேன்! புலன் இன்பம் ஒன்றே பேணி, நான் என் காதலைப் போற்ற வில்லை. பழி கூறிய உலகம் இதனைப் பகுத்துணரட்டும். என்காதலின் தூய்மையும், என் அன்பனின் செம்மையும் இறப் பின்றித் துலங்குவதன் பொரு ட்டு என் இளமையின் இன்ப த்தை நான் பரித்தியாகம் செய் கின்றேன். மறுமை மாயக் கதையில்லை யென்றல் அங்கே தருமதத்தனை எனது, ஊழ்வினை என்னேடு ஒன்று படுத்தும். பழி நிறைந்த உலகத்தின் இரக்க மில்லாத நெஞ்சின் கொடும் வெப்பத்திலிருந்து நான் விடை பெறுகின்றேன்.

இவ்வாறு சபதம் பூண்டு விசா கை கன்னிமாடம் புகலானுள். இதனைச் செவியுற்ற தருமதத்தன் ஆற்ருெணு வேதனையுடன் தன் மீதிருந்த பழியை நீக்கிய கந்திற் பரவை என்னும் தெய்வத்திடம் முறையிடுகிருன்.

தரு: கந்திற்பாவாய்! உனது திருவடி களை வணங்குகின்றேன். விசா கையின் கண்ணீரைத் துடைத்த உனது பெருங் கருணையை வியந்து போற்றுகின்றேன். எமது சிந்தையின் சீர்மையை உலகிற்கு விளக்கிய உனது செங் நாவின் புகழை வாயார, மன மாரப் போற்றுகின்றேன்.

அலர்தூற்றி எம்மை அழித்தது இந்த அரக்க உலகம். கன்னி யாகவே வாழ்வேன் என்று கடுஞ் சபதம் பூண்டு விட்டாள் விசாகை. இனி என் காதற் கற்பனை வெறும் கற்பனைதான். உலகே! எம் இன்ப நினைவை உன் கொடுங் கால்களாலே இரக்கமின்றித் தேய்த்து அழி த்து விட்டாய். உனது நாவின் பழிச் சொல்லென்னும் பெருந் தீயாலே எம் இளமையின்பத் தைச் சுட்டெரித்து விட்டாய். இனி வாழ்வெல்லாம் என் விசாகை கன்னி. ஆம் அவள் இனி என்றும் கன்னிதான். என் விசாகை, இனிப் பாடாத வீணை. பேசாத பூங்கிளி. உல வாத் தென்றல். தருமதத்தன் இனிச் சுடரில்லா வானம். சுதியில்லாப் பாட்டு. பூவாத பூஞ்செடி. பொருளில்லாத கவிதை. விசாகை! கழையிற் பிறந்த தீ கானலையே அழித்து விட்டதுபோல, உனது உள்ளத் திற் பிறந்த காதல் உன் வாழ் வையே சாம்பலாக்கி விட்டதே! விளக்கின் அழகுச் சுடரே விட்

டினுக்கு மரணக் குழி வெட்டி யதைப் போல எழில் கொண்டு எழுந்த நம் இதயக் காதலே நம் வாழ்வை நாசமாக்கி விட்டது.

நீ சிந்தையில் வளர்ந்த காதலை சிதைத்தாய். என் வாழ்வெல்லாம் இருண்டு விட்டது. இவ்வுலகில் நீ எனக்கு இல்லை எனில் என் இதயத்திலே இனி ஏது இன்பம். இனி, இப்பிறப்பில் நீ எனக்கில்லை. இன்பக் கனவென்னும் பொன்னுலகை நோக்கிக் கற்பனை யென்னும் நூலேணியிலே அந்தரத்தில் ஏறினேன். காலமென்னும் முள்ளால் சிதைவுண்டு அதன் பாதாளத்திலே என் கற்பனையோடு புரண்டு வீழ்கின்றேன். தருமதத்தா! உன் சிந்தையிலே ஓர் பொன் மாளிகை ஆக்கி, மல்லிகையின் மெல்லிதழ்களாலே ஓர் மஞ்சம் சமைத்து மனங் களிக்க ஓர் மதுக் கிண்ணமும் சமைத்தாய். தண் கதிர் பொழிய ஒரு வெண்ணிலாவும் வைத்தாய். தென்றலின் நறுமணம் மெல்லத் தவழ்ந்து வர ஒரு சாளரமும் ஆக்கினாய். மெல்லிசைக்காக ஒரு இன்னிசை வீணை செய்து அதை விசாகை என்னும் ஒரு தேவ கன்னிகையின் பூங்கரங்களிலே ஈந்தாய். பித்தனே! அதோ பார். மெல்லிய மலரிதழ்கள் கொல்லும் பாம்புகளாக நெளிகின்றன. நல்ல மதுக்கிண்ணத்திலே நஞ்சு பொங்குகின்றது. தண்ணிலாவிலிருந்து செந் தீச் சிதறல்கள் தெரிக்கின்றன. தென்றலுக்கு வைத்த சாளரத்தூடே விதியின் சூறுவளி வீசுகிறது. அதோ! பண்ணிசைக்கும் நல் வீணை பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறது. உன் தேவகன்னி விசாகை நீ செய்த பாவத்தாலே அரக்க நெஞ்சுகொண்டு விட்டாள். பார். நன்றாய்ப் பார்! இனி நீ என்ன செய்யப் போகிறாய்?

காரிரவு தன் காதலனுக்குத் தன் கண்ணீரை அழகிய புது மலர்களிலே விட்டுப் பிரிகிறது. என் இன்ப விசாகை! உன்னை எண்ணி எண்ணி ஏங்கி இந்தக் காவிரிப்பூம்பட்டினத்தின் மண்ணை என் கண்ணீரால் நனைத்து இங்கிருந்து பிரிகின்றேன். என் வாழ்வுப் பிரமசரியத்திலேயே கழிவதாக! காவிரிப் பூம்பட்டினத்தின் கன்னி மாடத்தில் விசாகை என்னும் ஒரு கனக விளக்கு எரிகிறது. அதன் தூய ஒளிச் சுடரையே நம்பி இந்தப் பாழுலகின் காரிருளை மெல்ல மெல்லக் கடக்கச் செல்லுகின்றான் தருமதத்தன். நின்று எரிந்து நீடு வாழ்க அச் சுடர்!

தருமதத்தன் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுச் செல்கிறான். கன்னி மாடத்தில் மனம் விம்மி வருந்துகிறாள் விசாகை.

விசா: விசாகை! இனி நீ என்றும் கன்னி. இன்ப உணர்ச்சிகளுக்கு உன் இதயத்திலே இனி மேல் இடமில்லை. நீ ஒரு அழகான பச்சை மயில். ஆனால் நீ, மகிழும் கார்காலம் உன் வாழ்வில் இனிமேல் இல்லை. உலகின் இளமையின் இன்பக் கூத்துக்களை விடு. உன் எதிர்கால வாழ்வுப் பாதையில் உனது பாதங்களின் கீழே நீ கொண்ட சூள் என்னும் கூறிய வாள் நீண்டு கிடக்கிறது. கலங்காதே! உன் ஆசைக் காதலன் தருமதத்தனைப் பற்றி இறைவனை நீ ஆராதிக்கையில் மேல் நோக்கிச்

செல்லும் மெல்லிய நறும் புகை போல உன் அன்பு உன் உள்ளத்திலிருந்து எழுந்து ஆண்டவனது திருவடிகளைச்சேரட்டும். மறுமையில் இறைவனருள், உன் வாழ்விற்கு இளவேனில் நல்குவதாக! அமைதி கொள்.

4

பல ஆண்டுகள் கழிகின்றன. தருமதத்தனுக்கு வயது அறுபதாகிறது. தருமதத்தன் நாடெங்கும் சுற்றிப், பின் தென் மதுரையிலே வாணிகம் செய்து பெருஞ் செல்வம் சேர்க்கிறான். தன் சபதத்தைக் கைவிடாது தூய பிரமசரிய வாழ்க்கை நடத்தி குபேர செல்வம் அடைந்த அவனைப் பாண்டிய மன்னன் கௌரவிக்கிறான். இவ்வாறிருக்கையில் தருமதத்தனைப் பார்க்க ஒரு நாள் ஒரு அந்தணன் வருகிறான்.

தருமதத்தன்: (வணங்கி) வரவேண்டும். பெரியீர்! நல்வரவு.

அந்தணன்: நல்வாழ்த்து! இந்நாட்டிற் பெருகி வளரும் உமது புகழினைக் கேட்டு, உம்மைக் காண்பதற்கு மகிழ்வோடு வந்தோம்.

தரு: எல்லாம் தங்கள் போன்றோரின் ஆசி.

அந்: மதுரையம்பதிதான் உமது தாய் நிலமோ?

தரு: இல்லை. சோழவளநாட்டில் காவிரிப்பூம் பட்டினம். ஆனால் பல ஆண்டுகளாகத் தென் மதுரைப் பதியிலேயேதான் வாழ்க்கை.

அந்: உமது உற்றார் உறவினர்?

தரு: யாவரும் சோழ நாட்டில்.

அந்: உன் இல்லத்தாரோ?

தரு: என் இல்லத்தார் என்று சொல்ல ஒருவருமில்லை.

அந்: என்ன, மனைவி மக்கள்?

தரு: பெரியீர், நற்பேறில்லாத ஒரு பிரம்மச்சாரி நான்.

அந்: (வியந்து) ஆஹா! இது என்ன விந்தை. தருமதத்தருக்கு இன்னும் திருமணமில்லையா? இம்மையின் இன்பம் உமக்கு இனி வேறு என்னதான் உண்டோ?

தரு: ஒன்றும் இல்லை. நான் நடமாடித் திரிகின்ற ஒரு வெற்றுடல்.

அந்: தருமதத்தரே, ஏன் துயரம்? மதுரைமன்னனால் கௌரவிக்கப் பெற்றீர். உமது மாடி மனை யெங்கும் பொற்குவியல் இருக்கிறது.

தரு: உண்மை. ஆனால் என் வாழ்வெல்லாம் பாவத்தின் நிழல் படர்ந்திருக்கிறது.

அந்: பெருமை மிக்க பாண்டி நாடே உம்மைக் கவுரவிக்கிறது தருமதத்தரே!

தரு: ஆம், ஆனால் என் தீவினை என்னை எள்ளிச் சிரிக்கிறது.

அந்: தருமதத்தரே! எனிந்த வெறுப்பு? குபேர செல்வமுடைய தங்களை வாட்டும் துயர்தான் யாதோ?

தரு: மன்னிக்கவும். அது ஒரு இருள்.

அந்: ஆயின் இம்மைப் பயனைத் தாங்கள் நிலையாக இழந்து விட்டீர்கள்.

தரு: ஆம்.

அந்: ஆனால் மறுமை?

தரு: அதை மரணத்திற்குப் பின் பார்த்துக் கொள்ளலாம்.

அந்: வாழ்வின் வெறுப்பாலே தருமம் மறந்து பேசுகின்றூர் தருமதத்தர். அன்பரே கதிரவனின் கவின் நிறைந்த காட்சி கண்ணிழந்தபின் இல்லை. இம்மையிற் செய்த நல்லறம்தான் மறுமையிற் கனியும். இவ்வாழ்வின் நல்லறமான இல்வாழ்க்கையை யிழந்தீர். மறு பிறப்பிலேனும் இத்தீவினை உம்மைத் தொடராது ஒழியட்டும். தவருதீர். இரவின் இருளில், தான் வெட்டிய பாவக் கிணற்றின் ஆழத்தை மறு நாள் உதயத்தின் ஒளியில் மனிதன் பார்த்தே தீருவான். மனை வாழ்க்கையில்லாதவன் முக்திக்கு உரியவனல்ல. மனிதனின் தீவினைக்குப் பரிகாரம் வெறும் செல்வக் குவியலால் கிட்டாது. அறத்தின் ஒளியாலல்லாது ஆத்ம இருளை அகற்ற முடியாது.

தரு: அறுபது நெடிய ஆண்டுகள் என் வாழ்வில் சென்றொழிந்தனவே! இனி நான் செய்ய வேண்டியதுதான் என்ன ஐயனே!

அந்: உலகில் துயரிலே உழல்கின்ற உயிர்களைப் பேணுங்கள். அவைகளின் துன்பத்தை உமது பொற்குவியலின் குளிர்ந்த நிழலிலே ஆற்றுங்கள். சீரிய அறம் யாவையும் ஆற்ற முற்படுங்கள். வறுமையாலும், பசியாலும் பிறக்கின்ற கண்ணீரைத் தவிருங்கள். இறைவன் திருவருளை எண்ணி எண்ணி இறைஞ்சுங்கள். தருமதத்த! இனித் தாழாது தங்கள் நாடாகிய காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தாங்கள் சேர்தல் நலம்.

தரு: அவ்வாறே. வணங்குகின்றேன்.

அந்: மங்களம். விடை பெறுகின்றேன்.

(செல்கிருன்)

5

தருமதத்தன் அவ்வந்தணன் உரைத்தவாறே தன் தாயகமாகிய காவிரிப் பூம் பட்டினத்தை அடைகின்றன். பெருஞ் செல்வனுய், புகழ் சுமந்து தருமதத்தன் திரும்பி வருவது நகரெங்கும் பரவுகிறது. தருமதத்தன் வருகின்ற செய்தியை அறிந்த விசாகை அதுவரை வெளியே வாராதிருந்தவள் தன் நாணத்தை ஒதுக்கி கன்னி மாடத்தை விட்டு வெளியே வருகிறள். தெரு வழியே அப்போது வந்து கொண்டிருந்த தருமதத்தனைத் தெரிந்து கொண்டு அவன் முன்சென்று உரையாடுகிறள். ஆனல் தருமதத்தன் அவளைக் கண்டுகொள்ளாதவனுய்த் திகைத்து நிற்கின்றன்.

விசா: பலநெடிய ஆண்டுகளுக்குப் பின்னே என் உயிர் அரசை இன்று காணப் பெற்றேன். நான் செய்த பூர்வ புண்ணியம்!

தரு: இது என்ன விந்தை! தாங்கள் யார்?

விசா: விந்தைதான். நீல வானத்தைப் பற்றி நிறைமதிக்கு நினைவில்லை. இன்னுமா தெரியவில்லை? தங்கள் விசாகை!

தரு: (வியப்பும், திகைப்பும் தோன்ற) என் விசாகை!

விசா: ஆம், தங்கள் விசாகைதான்.

தரு: என் கற்பனையில் பிறந்த கட்டழகி. அழகுக் கவிதையிற் பிறந்த அன்பின் ஓவியம். என் விசாகை!

விசா: ஆம். தங்கள் விசாகைதான்.

தரு: காதலின் தூய்மை காட்டத் தன் வாழ்வையே காணிக்கை வைத்துக் கன்னி மாடம் புகுந்தவள். என் பொருட்டுக் கண்ணீரின் ஊற்ருகிக் கரைந்தவள் என் விசாகை!

விசா: ஆம், அவள்தான். தங்கள் விசாகைதான்.

[சொல்லரிய இன்பத்தாலும் அன்பாலும் இருவர் மனமும் விம்மிப் பொருமுகின்றன]

தரு: ஆஹா! நீயா அவள்? விசாகை! என் கண்ணே! நான் கனவு காணவில்லையே!

விசா: கனவில்லை அன்ப! காட்சியேதான். ஆனல் நாம் இன்று முற்றிலும் புதியவர்களாகக் காண்கின்ருேம்.

தரு: ஆஹா! அன்றும், இன்றும்.

விசா: ஆம், அன்றைக்கும் இன்றைக்கும் இடையே பல நெடிய ஆண்டுகள்.

தரு: சென்ற காலத்தை நோக்கி என் சிந்தை தாவுகிறது விசாகை! பல நெடும் ஆண்டுகளுக்கு முன்னே, அன்ருெரு நாள், மாலைப் பொழுதிலே, மலர் வனத்திலே.........

விசா: காடுற்ற சிந்தனைகள், ஈடற்ற கற்பனைகள் மூடிக்கிடந்த நெஞ்சோடு நாம் ஒருவரை ஒருவர் கண்ணுற்ருேம். அக்காலத்தே,

வண்ணமலர் மதுவுண்டு
பாட்டிசைக்கும் வண்டுக்கு
மலர்மீது காதலென்ருேம்
தண்மை நிறை மழைத்திவலை
சிப்பிகொள்ளல் தணியாத
காதலுக்குச் சின்னமென்ருேம்.
விண்ணிலுறு மதிமீது
காதலுற்ற விரிகடல்தன்
அலைவீசி ஆர்க்குதென்ருேம்
கண்ணிலுறு எப்பொருளின்
அசைவினுள்ளும் காதலோ!
காதலென நாம்கதைத்தோம்.

ஆனல் நம்மை மயக்கிய அந்த அழகும், இளமையும் இன்று எங்கோ ஓடி ஒளிந்து விட்டன. காதல! தங்கள் கற்பனை விசாகையின் வதனமான செந்தாமரை மீண்டும் பொற்குளம் சேர்ந்து விட்டது. நுதலாய் மிளிர்ந்த பிறைமதி வானிலுள்ள முழுமதியோடு கலந்து விட்டது. கரும்புருவச் சிலைகளாகிய காமனின் போர் வில், அவனது கரங்களைச் சென்றடைந்தன. அவளது கண்களாகிய குவளை மலர்கள் காமதேவனின் அம்பருத் தூணியில் அடைக்கலம் புகுந்து விட்டன. இதழ்களின் செந்நிறம் மீண்டும் சென்று பவழத்திலே படிந்து விட்டது. அவளது சொற்களாகிய பண்கள் யாழின் இசை நரம்புகளிலே புகுந்தன. அவளது சொல்லின் இனிமை சென்று தேன் குடம் புகுந்தது. அவளது கூந்தலாகிய கார் முகிலைக் கார்ப் பருவம் தன்னெடு அணைத்துக் கழிந்தது. அவளது நக நுனிகளில் இருந்து, கிளி தன் அலகின் செந்நிறத்தைத் திரும்பக் கவ்விப் பறந்து விட்டது. தென்றலொடு கலந்து அவளது பாதத்தின் மென்மை மறைந்தது.

இப்போது தங்கள் முன் நிற்பது தாங்கள் அன்று கண்ட

கற்பனை விசாகை அல்ல; ஒரு நறைமுதுமகள். எல்லா அழகுகளும் எங்கோ ஒளிந்தன. ஆனால் அன்றிருந்த என் இதயம் மட்டும் முன்னினும் பெரிதும் பண்பட்டுப் பேரழகோடு அன்புப் பெருக் கெடுத்து நிற்கிறது. என்னிடத்தே எஞ்சி நிற்பது அது ஒன்றுதான்.

தரு: (கண்ணீர்வழிய) அது ஒன்றே போதும் விசாகை! அது ஒன்றே போதும். ஒரு நறைமுது மகளாய் வந்து என் முன் நிற்கும் என் நல்வினையே! முதுமை வந்த காலக் கோடுகள் நம் முகங்களிலே படிந்து விட்டன. நல்லோசை பெற்ற நம் குரலிலே நடுக்கம் பிறந்து விட்டது. சித்தத்தில் வீசிய மோகப் புயல் அடங்கி ஒய்ந்தது. கழிந்தது இளமை காமப் பெருக்கொடு. ஒழிந்தது காதல்மேல் ஊக்கம். இறைவன் திருவடிகளை நோக்கிப் பிறவியின் இன்னலைத் தீர்த்திட ஒரு நெறியே ஓடியது நம் உள்ளம். இளமையும் யாக்கையும் நில்லா; வளம் நிறை செல்வமும் வலிமையும் நில்லா.

வா! விசாகை! வா! ஒழிந்தது நம் துயர். ஒழிந்தது ஆணவம். ஒழிந்தது உலக பந்தம். கருணைக் கடலாகிய இறைவனது கழலடிகளைப் போற்றிப் பாடி மகிழ்வோம் வா!

(இருவரும் பாடுகிறார்கள்)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கு எம்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்று
கைதான் நெகிழவிடேன் உடையாய் எம்மைக் கண்டுகொள்ளே.

பாரதியார்: (சில குறிப்புகள்)

கே. வி.

1882-ம் வருடம் கார்த்திகை மாதம் எட்டையபுரத்தில் பிறந்தவர் பாரதியார். அவருடைய தந்தையான சின்னசாமி ஐயர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகம் வகித்து வந்தார்.

இளமையில் அவர் திருநெல்வேலி உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்ருர். பதினைந்தாவது வயதிலேயே அவருக்குத் திருமணமாகிவிட்டது. தந்தை இறந்த பிறகு காசியில் அவர் அத்தை வீட்டில் இருந்துகொண்டு எப். ஏ. வகுப்புவரையில் வாசித்தார். ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய பாஷைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்ருர்.

இளமையிலேயே பாரதி கவிதைகளில் காணும் இன்பஇசையோடு பேசுவார். நினைத்த மாத்திரத்தில் துண்டுக் கவிதைகள் பல புனைந்து நண்பர்களை மகிழ்விப்பார். அவருடைய பேச்சில் வேடிக்கை மலிவு. அந்தக் காலத்தில் தமிழில் கவிதை புனைவதைத் தவிர பாரதிக்கு வேறு எந்த வேலையும் செய்யத்தெரியாது. 1904-ல் மதுரை சேதுப்பிள்ளை பள்ளிக்கூடத்தில் தமிழாசிரியராக நியமிக்கப் பட்டார். அவருடைய கவிதா சக்திக்காக 'பாரதி' என்ற பட்டம் புலவர்களால் வழங்கப்பட்டது. தமிழர்கள் எல்லோரும் வாசித்து அறியக்கூடிய சாதாரணத் தமிழையே அவர் ஆதரித்தார்.

1901-ல் சுதேச மித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக அமர்ந்தார். பிறகு 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியரானுர்.

தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பும் வீரம் ததும்பும் ஆவேசக் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதியதின்பயனுக 1908-ல் புதுச்சேரியைப் புகலிடமாகக் கொண்டார்

'இந்தியா' வாரப்பத்திரிகையை புதுச்சேரியிலிருந்து நடத்தினர். பிரிட்டிஷ் இந்தியாவில் அது தடுக்கப்பட்ட பிறகு அரவிந்தர் வெளியிட்ட 'கர்மயோகி' பத்திரிகையின் தமிழ் வெளியீட்டை நடத்தி வந்தார். அவருடைய காவியங்கள் பெரும்பாலும் புதுச்சேரியில் எழுதப்பட்டவை. அக்காலத்தில் பாரதி தமது மனைவியுடனும் இரு புதல்விகளுடனும் மிக்க வறுமைப் பட்டார். 1918-ல் கடயம் சென்று 1920-ல் மீண்டும் சென்னை திரும்பினர். 1921 செப்டம்பர் 11-ல் திருவல்லிக்கேணியில் அமரத்துவம் பெற்ருர்.

தமிழ்த்தாய் பொலிவிழந்து மங்கி மடிந்து போகும் தருவாயில் காரிருளை அகற்றும் கதிரவனைப் போல் தோன்றி, தமிழ் மொழிக்குப் புத்துயிர் தந்தார். கடல் மடை திறந்தது போல் ஆவேசக் கவிதைகளைப் பொழிந்தார். உணர்வும் வீரமும் நிறைந்த வாக்குகள் ஊற்றுப்போல் பொங்கி யெழுந்தன.

அவருடைய இந்தக் குறுகிய வாழ்க்கையில் அவர் தமிழ்த் தாய்க்கு ஆற்றிய தொண்டை அளவிட முடியாது. பாரதி, தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்த தொண்டை தமிழர்கள் என்றென்றும் மறக்க முடியாது. அவர் நினைவு என்றும் நிலைத்திருக்க இன்று அவருக்குக் கலைக்கோயில் அமைத்து, விழாவும் நடத்துகிருர்கள்.

யுத்தகால இலக்கியம்

"சுகி"

இந்தப் பாழாய்ப்போன பூலோகத்தை யுத்தத்துக்குப் பின்னல் சொர்க்க மாக்கிவிட பல துறைகளிலும் முயற்சிகள் நடக்கின்றனவே, உன் கருத்துக்கள் என்ன? இப்படிக் கேட்டது ஒ ள்க் குரல்.

1. ஆபீசுகள் சினிமாக் கொட்டகைகள், இங்கு சைக்கில் சரங்கள் (Stand) வைத்திருப்பதுபோல குழந்தைத் தொட்டில்கள் வர வேண்டும்.

2. தமிழில் வெளி வந்துள்ள வசன நூல்கள், கவிதைப் புஸ்தகங்கள் அவ்வளவையும் அழித்து வசன கவிதை எழுத காகிதம் செய்தல்.

3. அழுக்கேருத துணிமணிகள்; வெயில் மழை இரண்டையும் எதிர்த்து நிற்கும் ஆடைகள்.

4. கரும்பிலிருந்து பவளமும் கடற் சிப்பியிலிருந்து சர்க்கரையும் வெண்டைச் செடியின் ஒரு கிளையில், என் ஒரே கொத்தில் அவரை, பீன்ஸ், தக்காளி, கத்தரி, பூசனி உள்பட காய்க்கக்கூட பலவின் காய்கறிச் செடி!

5. ரூபாய்க்கு 192 அணுவும், அணுவிற்கு 192 தம்பிடியும் உள்ள நாணயச் செலவாணி!

'சி.ஐ.டி.' என்ற குரல் கேட்டது. அழிக்கும் விமானம் வரும் பின்னே, அபாய அறிவிப்புச் சங்கொலி வரும் முன்னே என்பது போல காமு வந்தாள்.

மீண்டும் "சி. ஐ. டி" என்று அபாயச் சங்கு போல அலறினள். எனக்கு அப்படியே வியர்த்து விறு விறுத்துப் போய்விட்டது. என் முகம் கவிதை போன்றது; வசனகவிதையாக மாறியதை உணர்ந்தேன். முகத்தில் ஏற்பட்ட விகாரங்களை மறைத்துக் கொண்டு "யார்?" என்றேன்.

"C. I. D." என்று ஆங்கில உச்சரிப்பில் சொன்னள். நான் வருங்காலத் திட்டம் தயாரிப்பது எப்படித் தெரிந்ததாம்?

"என்ன சொன்னன்?"

"வந்தவன் 'ஐயா' வந்தால் வீட்டிலேயே இருக்கச் சொல்லுங்கள். ஜெயில் சூப்பரிண்டெண்டு வருவார்' என்பதாகச் சொல்லி விட்டுப் போனன்."

யுத்த காலத்தில் எங்கெங்கு மணிக் குண்டுகள் (மணியான குண்டுகள் அல்ல, ஐயா 'டைபாம்' என்ற மணிக்குண்டுகள்!) புதைந்து கிடக்குமோ எனத் தவிக்கும் சிப்பாய் போல மேஜையில் திருஷ்டி செலுத்தினேன். நாலைந்து விசிட்டிங் கார்டுகள், அதில் இரண்டு போலீஸ் அதிகாரிகள் விலாஸமிட்டவை. ஒன்று பெரிய

டாக்டர்; மற்றென்று கிரிமினல் வக்கீல் விலாசம் படைத்தது. என் மனம் ஆடிக் காற்றில் பறக்கும் அம்மிபோலாயிற்று. வர வர பீதியும் புதிரும் நிறைந்த பிரபல கனவான்கள் விலாஸம் நிறைந்த கையெழுத்துக்கள், துப்பாக்கி பாய்ந்த காயத்தில், பீரங்கிக் குண்டுகளை வைத்துக் கட்டிய கதையாயிற்று.

'ஜம்' மென்று பெரிய கார் ஒன்று ஒயிலாக வந்து திடீரென மூலையைத் தாக்கிற்று. காரின் பெட்ரோல் நாற்றத்தைவிட அதிகமாகத் தூக்கியடிக்கும் வாஸனைத் திரவியம் சுமந்த நாரீமணி காரில் இருந்த கதவைத் திறந்தபடியே முகத்தை நீட்டியது, கருமேகத்துக்குள்ளிருந்து பார்க்கும், ஆகாய விமானத்தை நினைப்பூட்டியது.

என்னுடம்பில் திகிலும் குழப்பமும் எதிரும் புதிருமாக ரத்தத்தில் ஓடின.

"நான் கலெக்டர் மனைவி; உங்களைக் கண்டு பேச வருவார்; கொஞ்சம் அவசரம் கடை வீதியில் ஒரு கஜம் மல் கொடுக்கிறார்களாம்; வருகிறேன், நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு மின்மினி போல மறையும் அம்மின்மினியின் கார் புறப்பட்டபோது என் மனசைப்போல, எங்கள் வீடும் ஆடிற்று; அவ்வளவு பழமையான வீடு!

காமுவைப் பார்த்து ஒரு பிரகடனம் விடுத்தேன். அதன் சாராம்சம்:

"வி 1 என்று சொல்லப் படுகிற நான், தற்சமயம் குழப்பங்களுக்கு மேல் குழப்பமாக நடக்கும் விஷயங்களைத் தெளிவு படித்துக் கொள்ள வேண்டி, நிபந்தனையின்றிச் சரணகதி யடைகிறேன். ஸி. ஐ. டி. போலீஸ் அதிகாரிகள் விசிட்டிங் கார்டுகள், பிரமுகர்கள் விஜயம், இதெல்லாம் என்ன புதிர்?"

அவள், அதை லக்ஷ்யம் செய்ததாகப் பட்டதா? பிரமுகர்கள் அறிக்கைகளைத் தீராத வியாதிக்கும் தீர்ப்பான வழக்கும் நடுவில் போடும் பத்திராதிபர்கள் போல வாவது செய்தாளா?

அவள் புந்நகை பூத்தாள். சரி சாதகமான விஷயம் வரப்போகிறது; விஷயங்கள் தெளிவாகும் என்று நினைத்த சமயம் "ஜில்லா ஜட்ஜ் உங்களை பார்க்க வேண்டுமென சொன்னதாக, அவளுடைய வக்கீல் நண்பருடைய மோட்டார் ஓட்டி சற்று முன் வந்து விட்டுப் போனன்" என்றாள்.

விஷயம் இன்னும் சிக்கலாயிற்று. துப்பாக்கி வேண்டாம் தோட்டா நஷ்டமாகாமல் இருந்

தாற்போதும் என்று தவித்த சமயம், நீர் மூழ்கிக் கப்பல் தலை தூக்குவதுபோல மாமனார், சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தார்!

"மாமா இதென்ன, மர்மத்தின் மேல் மர்மமாக இருக்கிறது?" ...

"வசன கவிதை!" என்றார் மாமா. அப்போது அவர் முகத்தில், சாந்தியா சலனமா? ஹாஸ்யமா சோகமா? இன்பமா, துன்பமா? ஒன்றும் புரிய விடாதபடி 'காமபிளாஷ்' செய்திருந்தது.

கண்களில் மட்டும் ஒருவித அசட்டுக் களை சொட்டிற்று. விமானம் தூக்கிக் கப்பல் மேல்த் தளம் போல், விளங்கிய வழுக்கை மண்டையில், ஒரு வெடி குண்டைத் தூக்கி (வசன கவிதையை) எறியலாமென சிந்தித்தேன். எண்ணியபடி எதுதான் நடக்கிறது? அதற்குப்பதில் அவரே தூக்கி எறிந்தார்:

யுத்தம் அது கொடிது
காலம் அது பெரிது
இலக்கியம் அது இனிது
யுத்தமே நீ வா, உன்னை வணங்குகிறேன்
வழிபட உனக்கு ஒரு பீரங்கி உடைக்கிறேன்!
காலமே, நீ போய்க் கொண்டிரு
கடிகாரமே உனக்குச் சமர்ப்பணம்
இலக்கியமே நீ இன்னிசை வீணை
அலக்கழிப்பவர்கள் ஆயிரம் வீணர்கள்

மாமா மேலே செல்லுமுன் "மாமா மாமா உங்களுக்கு வசனகவிதை பிடித்து விட்டதா?" என்றேன். அவர் சிரித்தார். அது ஊர்ஜிதத்திற்கு ஊன்று கோலாக, இருந்தது.

சி. ஐ. டி. யுக்குப் பதில் சித்தயூனானி ஆயுர்வேத வைத்யர்கள் வரலாகாதா என நினைத்த சமயம் பாட ஆரம்பித்தார்; அதாவது வசனம் வந்தது. தமிழில் கவிதையைப் பாடுவதும் வசனத்தைப் படிப்பதும் மரபு. ஆனால் இவர் கவிதையைப் படிப்பவர்; வசனத்தை ராகத்தோடு படிப்பவர்!

என் மனசில், டாங்குப் படைபோல புரண்டு கொண்டிருந்த சி. ஐ. டிகள் போலீஸ் இன்ஸ்பெக்டர் விசிட்டிங் கார்டுகள், எல்லாம், முகமூடிக்குள் அகப்பட்ட விஷவாயுபோல மாமனார் பிரசங்கத்தால் பலனற்றுப் போயின!

"மாப்பிள்ளை, எனக்கும் இலக்கியத்தின் சுற்றுக்கோடு தெரியும். நீங்கள் என் ஔவையார் ஆகக்கூடாது?"

"இதையெல்லாம் எல்லாம் வல்ல, எம்பெருமானைப் பார்த்து அல்லவா தேட வேண்டும்! படைப்புக்கு அதிபதி அவனல்லவா, மாமா"

"இல்லை, காலதேச வர்த்தமானத்திற் கொப்ப இலக்கியத்தைச் சமைக்க வேண்டும். சூழ் நிலையின் சுற்றுச் சார்புக் கொப்பதன் பேனா முனையில் உலகத்தைப் பார்க்கிறவன் எழுத்தாளன். எழுதுகிற விஷயம், எழுதியவன் வாழ்ந்த காலத்தைப் பறையறைய



வேண்டும். ஔவையார், தம் கவிதை யொன்றில், தாம் போர்க் களத்தில் வாழ்ந்தவர் என்பதைப் பாடியுள்ளார். உதாரணமாக, என்று ராகத்தோடு பாடி வந்தவர் பின்வாங்கி பேச ஆரம்பித்தார். கவிதை பிறந்தது.



இன்னும் ஆருது சினனே, அன்னே
உய்ந்தனர் அல்லர் இலன் உடற்றி
யோரே
சிறுவர் நோக்கிய கண்தான்
சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனுவே.

அஃதாவது, அரசன் பெற்றெடுத்த பிள்ளையின் மலர் முகம் பார்த்தும் போர்க்களத்திலிருந்து வந்ததால் கண் சிவப்பு மாருமல் இருந்ததால் போர் வெறி அப்படிப்பட்டது என்கிருர் ஔவையார்'' என்று சொன்ஞர் மாமனர்.

"என்னையும் கவி எழுதச் சொல்லுகிறீர்களா மாமா?'' என்று இரக்கத்தோடு கேட்டேன். நான் கவி எழுதுமுன்பே போலீஸ் இலாக்கா படையெடுக்கத் தயாராக இருக்கிருர்களே என்பது மின் வெட்டுத் தாக்குதல்போல நினைவில் எழுந்தது.

''ஒரு எழுத்தாளர் சொல்வது போல 'கதையை விளக்கெண்ணெய் சாப்பிட்ட அன்றும், கட்டுரையை ஏகாதசி அன்றும், கவிதையை அரைத் தூக்கத்திலும் வசன கவிதையை முழுத் தூக்கத்திலும் எழுதலாம் என்பது என் மேற்கோள்''

அறிவின் கேந்திர ஸ்தானமாக விளங்கும் கண்களைப் பார்த்தேன். மூடியிருந்தது. சரி முழுத் தூக்கம் என்று நினைத்தபடியே காலண்டரைப் பார்த்தால் அன்று ஏகாதசி! உடனே முகத்தைப் பார்த்தேன்; விளக்கெண்ணெயின் முலாம் தெரிந்தது.

அவரும் நானும் ஒரே கடையில் வாங்கும் ரேஷன் அரிசி, கற்பகத்தரு ஸ்டோர்ஸ் சர்க்கரை, உடன்கட்டை டிப்போ விறகு இவற்றை உபயோகித்துத் தான் சமைத்து உண்கிருேம். அப்படிக் குயுக்தியாக அவர் மூளை கொரில்லாயுத்தம் செய்வானேன்? என் மனம் மட்டும் ஜப்பானிய சிப்பாய்போல் பொம்மலாட்டம் போடுவானேன்?

வெளியே பார்த்தேன்; மோட்டார்கள், லாரிகள், ஆண்கள், பெண்கள் இப்படிப் பலவும் 'க்யூ' வரிசையில் நின்றன. போலீஸ் சூப்பிரண்டண்டு கூட்டத்தை சமாளித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு விஷயம் விளங்காமல் அரசியல் வட்டார ரூபங்கள் போல, என்னென்னவோ மனதிற்கு வந்தபடி தோன்றின. நான் நீ யென்று ம. எண். வாங்கவும், டிக்கெட் எடுக்கவும் பழகி விட்ட கூட்டம் நெருக்கிக் கொண்டு, வாசலிலேயே போர் முனை ஆரம்பித்தது.

கூட்டத்தின் கூக்குரலால், வீட்டின் விட்டம் ஒரு அடி உயர்ந்து தணியும்; ஆரவாரம் தாங்காத

சுவரோரங்களின் காரைகள் பெயர்ந்து விழுந்தது, பொடி அப்பிய நாரிமணிகளின் இயற்கைக் கன்னம்போல் ஆயிற்று! வீட்டுக்கு உள்ளே பரபரவென்று கரடு முரடு ஆகும் சுவர்களுக்கும் வெளியே பறபறக்கும் முரட்டுக் கூட்டத்திற்கும் என்ன சம்பந்தம்?

என் மாமனரின் இலக்கிய சேவை, வசன கவிதைப் பற்று அவர்களுக்குப் பிடிக்கவில்லையா? சமூகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போடும் இந்த பொதுஜனம், இலக்கியத்தில் கூடவா முணுமுணுக்கவேண்டும்? என்ன அக்கிரமம்!

ஒரு வேளை என் மாமனரை ஒரு ஜப்பானிய உளவாளி என்று எண்ணியிருக்கலாம்! அதுதான் நியாயமாகப்பட்டது. மாடிக்கு ஏறி, அங்கிருந்து ரகஸிய ஆயுதத்தால் பொது ஜனத்தைத் தாக்க முயற்சி செய்தேன். பிரசங்கந்தான் அந்த ரகஸிய ஆயுதம்! சொல்லம்பு வில்லம்பைவிட பெரிதென்று பொது ஜனம் உணர வாய்ப்பான சந்தர்ப்பம் கிடைத்தது!

மொட்டை மாடியில், மாமனர் பின் தொடர ஏறி நின்றபோது போர்க்களத்தில் கபிலர் பாரியுடன் மதில்மீது நின்று எதிரிகளான மூவேந்தர்களுக்குப் பிரசங்கம் செய்த சங்க காலக் காட்சி நினைவில் எழுந்தது.

"வி 1க்கு ஜே ஜே" என்ற கோஷங்கள் வானளாவி எழுந்தன! மாடியின் தளம் எழும்பி இறங்கிற்று. கூட்டத்தின் பார்வை, பாட்டில் பதிந்தது. நிசப்தம் நிலவிற்று.

"அன்பர்களே, நண்பர்களே, என் மாமனர், வசனகவிதையில் அன்பு கொண்டவர்......"

"வாழ்க வசன கவிதை!" என ஜனசமுத்திரம் அலை மோதிற்று. எதற்காக அவர்கள் வந்துள்ளார்கள் வாழ்த்துவதற்காகவா? அட கண்ணருவியே! நாலைந்து தந்திச் சேவகர்கள் வந்து வீட்டிற்குள் நுழைய முயற்சித்தார்கள். கார்களில் வந்திறங்கிய பிரமுகர்கள், உத்தியோகஸ்தர்கள் கணக்கில் அடங்க முடியாது. தெருவே நெடுக ஜனப்பிரளயம். அணி வகுத்து நிற்கும் படை வீரர்களைப் பார்வையிடும் தளபதிபோல மொட்டை மாடியில் கம்பீரமாக நின்று இரகசிய ஆயுதத்தைப் பிரயோகம் செய்தேன்.

"அன்பர்களே! ஆருயிர்நேசர்களே!! இனிய இவ்வூர்ப் பிரமுகர்களே, கனதனவான்களே என் மாமனர் யுத்தகாலத்தில்தான் எதிலும் முன்னேற முடியும் என்ற கொள்கைப்படி கம்பராமாயணத்தை வசன கவிதையாக எழுத முயற்சிக்கிருர். தமிழிலுள்ள கவிதைகள் — காவியங்கள் அவ்வளவையும் தாம் வசன கவிதையாக எழுத முடியும் என்று சவால் கூறுகிருர்...."

இதற்குள் கூட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடக்கி தந்திகளை வாங்கிக் கொண்டு போலீஸ் சூப்பரிண்டெண்டு மாடி நோக்கி வந்தார். நடக்கப் போகிற என் பிரசங்கத்தை முன்கூட்டியே எத்தனை தீர்க்க தரிசிகள் கவனித்துவிட்டார்கள்? ஆசிச் செய்திகளை அம் மாபெரும் கூட்டத்திற்குச் சொல்லத் துடிதுடித்தேன். ஆனல் கூட்டத்தை அதுவரை சமாளிக்க வேண்டுமே!

"அன்பர்களே! இங்கே ஒரு வீசை சர்க்கரையோ, அரை அவுன்ஸ் மண்ணெண்ணெயோ, ஒரு கெஜம் துணியோ கிடைக்கப் போவதில்லை! பின் ஏன் நீங்கள்

கூடியிருக்கிறீர்கள் என்பதுதான் விவாதத்துக்குரிய ரஸமான விஷயம்"

தந்திகள் தாங்கிய அந்த போலீஸ் ஆபீஸர் வந்து என் கையில் சமர்ப்பித்தார் தந்திக் குவியல்களை. ஒரு தந்தியை நான் பிரித்தபோது, என் மாமனார் மற்ற தந்திகளை யெல்லாம் பிரித்து என் கையில் அடுக்கினர். அதைப் படித்தபோது ராக்கெட்டுக்கு மணிக்கு 7500 மைல் பிரயாணம் செய்வது போல இருந்தது என் நிலை.

ஹைதராபாத்

வி 1 க்த

என் நண்பன் புனவிலுள்ளவனுக்கு திருச்சியிலிருந்து அடித்த அவன் நண்பன் (இவனுக்குத் திருநெல்வேலி நண்பன் கொடுத்தது) தந்தியின்படி உன் வீட்டில் இரண்டு அறைகளை வாடகைக்கு விடப்போவதாக அறிகிறேன். விமானத்தில் மாலை புறப்படுகிறேன். எனக்கே இரண்டு அறைகளையும் விட வேண்டும். வாடகை எதுவானாலும் சரி.

"சாரி"

நூற்றுக் கணக்கான தந்திகளிலும் இதே விஷயம்! இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், காசி கன்னியாகுமரி முதல், வங்காளம் கைபர் கணவாய் வரையுள்ள வெவ்வேறு இடங்களிலிருந்தும் இரண்டு அறைகள் தங்களுக்கே வேண்டுமென வந்த தந்திகள்!

சிவசிவா! கூட்டத்தில், என் பொன் மொழிக்காக நின்ற பரிதாபக் காட்சி, நினைக்க நினைக்க இன்னும் பரிதாபகரமான காட்சியாகவே இருக்கிறது.

"அன்பர்களே! வீடுதேடி ஆவலுடன் நிற்கும் பெரியோர்களே. நண்பர்களுக்காக பாடுபட்டு, தேடி வந்துள்ள நல்லறிஞர்களே! யாரோ ஐந்தாம் படைக்காரர்கள் எனக்கு வேண்டாத விரோதிகள் நான் வீடு—வாடகைக்கு விடப் போவதாக ஒரு ஆதாரமற்ற செய்தியை, கம்பியில்லாத் தந்தியாகிய வதந்தி மூலமாக அனுப்பி விட்டார்கள்.

"என் மன்னிப்பை, அந்த ஐந்தாம்படை வீரர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்........." என்று முடிக்கு முன்பே, கூட்டம் கலைந்தது. மறுநாள் என் வீட்டை குடிக்கூலிக்கோ, ஒட்டுக் குடித்

தனத்திற்கோ விடப் போவதில்லை யென பல பத்திரிகைகளுக்கும், விளம்பர விகிதப்படி அறிக்கை அனுப்பிவிட நினைத்த சமயம், "மாப்பிள்ளை, யுத்தகாலத்தில் சம்பாதிக்கத் தெரியாதவர்கள்—உங்களைப் போன்றவர்கள் — பணம் சம்பாதிக்க முடியாது. புகழ், அதுவும் சம்பாதிக்க முடியாதவர்கள் — சுத்த முட்டாள்கள்! உங்கள் பெயர் இப்போது இந்த ஊரில் தெரியாத இடம் உண்டா? இந்தியா எங்கும் பரவி விட்டது. வாடகைக்கு இரண்டு அறைகள் விடப் போவதாக வதந்தியைப் பரப்பிய ஐந்தாம் படை ஆள் நான் தான்!" என்று கம்பீரமாகச் சொன்னார், "ஆம்" பாடிய படியே. நான் அப்படியே மூர்ச்சையானேன்.

கண் விழித்துப் பார்த்தபோது என் மாமனார் குறட்டை சப்தம் மெஷின் பீரங்கிக் குண்டுகள் போல டம் டம் என ஒலித்து என் தூக்கத்தைக் கலைப்பதையும், அத்தூக்கத்திற்கு ஆதார சுருதியாக இருந்த வசன கவிதையையும் உணர்ந்தேன்!

தூக்கம் அது இனியது
கனவு அது வாழ்க
குறட்டை அது ஒழிக
கனவு இல்லாத் தூக்கம்
ஆம்,
கதவு இல்லா வீடு!
வீடு மண்ணைப் பிசைந்து
மனிதன் பிடித்த பாண்டம்
வாழ்விற்கும் தாழ்விற்கும்
வாசற்படி குயில்கூடு!
கொள்ளிடம்! காவிரி!
கும்மிட்டி அடுப்பு
பற்றி எரியுது நெருப்பு
பால்ப்பானையின் நண்பன்
இனியது இனிது இனிது

என் மனோ வியாதிக்கும், கதை பிரபலத்திற்கும் காரணமான இந்த வசன கவிதையை வாழ்த்துகிறேன்; வாழ்விக்கிறேன்.

வில்லி, சொன்னபடி நாடகம் நடத்திவிட்டாள் – (Elopement) ஓடிப்போதல் –

மாலை ஐந்து மணிக்கே டிக்கெட் வசூலை வாங்கிக் கொண்டு கப்பல் சீட்டு வாங்கித் தன் கையாளுடன் எட்டுமணிக் கப்பலில் ஏறி வில்லி மணிலாவுக்குச் சென்றாள். அங்கே ராபர்ட்டு தயாராயிருந்தான்; அவனுடன் அமெரிக்காவுக்குப் பயணமானாள். இனி அவளை யார் என்ன செய்ய முடியும்; வினை தான் ஏதாவது செய்ய முடியும்.

மக்வாடர் அவமானம் பொறுக்க முடியாமல் இரண்டு நாள் வெளியேறவில்லை. பணமெல்லாம் வில்லியுடன் போனது. தமிழ்மணிக்குச் செய்த கொடுமை அவன் நினைவிற்கு வந்தது. மனச்சாட்சி விஷக்கடி கொடுத்தது. மக்வாடரின் மண்டைக் கருவம் இறங்கிப் போனது.

தன் சட்டை தொப்பி சாமான்களை ஏலம் போட்டான் மக்; அவனுடைய திரை நடனச் சாமான்களையெல்லாம் தமிழ்மணியே வாங்கிக் கொண்டான். எல்லாம் ஆயிரம் ரூபாயிக்கு விற்றான்; அந்தத் தொகையைக் கொண்டு மக்வாடர் ஒரு வியாபாரம் செய்ய நினைத்து அங்குமிங்கும் சுற்றினான்.

இச்சமயமே தமிழ்மணியின் நாகரிக நூல் வெளிவந்தது. அதை மக்வாடர் படித்து உணர்ச்சி பெற்றான். தனது நூலின் பொய்க் குப்பைக்கும் இந்த நூலின் மேன்மைக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்தான். தமிழ்மணியைச் சந்திக்க அவன் உள்ளம் துடித்தது. ஆனால் தமிழ்மணி இங்கே யில்லை. எங்கே போனான்?

அத்தியாயம் பதினான்கு

சட்டிச் சாமியார் ஆசி

தமிழ்மணி தமிழர் நாகரிகம் என்ற நூலைக் கோலாலம்பூரில் அச்சிடத் தந்ததும் சட்டிச் சாமியைத் தேடித் திரிந்தான். சட்டிச்சாமி என்ற பெயர் ஒருவருக்கும் தெரியவில்லை. “மகான்” என்ற பெயர்

எங்கும் வழங்கியது; மகான் இப்போது ஈப்போவில் இருக்கிறார் என்ற செய்தியறிந்து தமிழ்மணி அங்கே சென்றான்.

ஈப்போவில் வள்ளியப்பன் என்ற பரமபக்தன் வீட்டில் தேவாரமும் திருப்புகழும் முழங்கின; அங்கே தமிழ்மணி புகுந்ததுமே "வா, தம்பி" என்றொரு சத்தம் கேட்டது. சட்டிச்சாமியார் (மகான்) "நினைத்தபடி வந்தாயே" என்று வரவேற்றுத் தமிழ் மணியைப் பக்கத்தில் அமர்த்திப் பாடச் சொன்னார். தமிழ் மணி தன் ஆர்வத்தையே ஒரு கீர்த்தனமாகப் பாடித் தீர்த்தான்.

எதுகுல காம்போதி — ஜம்பை தாளம்

பல்லவி

பரிபூரணானந்த சுகவாரி
  தன்னை நான்
பருகும் ஒரு வரம் அருள்வாய் (பரி)

அனுபல்லவி

பரிவான குருவாகிப் பசுபாசவினை தீரப்
பரிசிக்கும் பதியறிவைத் தரிசிக்கும்
  பலனீந்து (பரி)

சரணம்

தேகாத்ம பந்தமற
  மோகாதி தொந்தமற
சாகாத நிலைகண்டு
  நோகாத நிலைகண்டு
    யோகத்திலே பரம
    போகத்திலே சக்தி
    வேகத்திலே இதயத்
    தாகந் தணிந்திடவே (பரி)

"அதற்குத்தான் தம்பி உன்னைச் சிவன் இங்கே பிடித்துத் தள்ளினான். இனி அடியார்கள் செல்லலாம்; தம்பியுடன் பேச வேண்டும்" என்றார் சாமி. கூட்டம் கலைந்தது. கதவும் அடைத்தது. சட்டிச்சாமி தமிழ்மணியை அள்ளியணைத்து, "தமிழ் மணியே நீ கப்பல் விபத்தில் தப்பியது சிவன் செயல். உனக்காகவே பர்மாவிலிருந்து ஓடி வந்தேன். சிவமணியே உன் தகப்பனார் சிதம்பரத்தில் நடராஜ தரிசனம் செய்து கொண்டு தேவார திருவாசக பாராயணத்தில் மன மகிழ்ந்திருக்கிறார். உனக்கு ஏராளமான வேலையுள்ளது. கலைமணியே உன்னை மனதால் கவனித்து வருகிறேன். உன்னை மோசம் பண்ணிய அந்த வெள்ளைக்காரன் எப்படிப் போனான் பார்த்தாயா? இன்னும் பார் — சிகாகோ ஓட்டலில் அவன் விதி மூயப் போகிறது. அவள் விதியும் அப்படியே. அப்பனே இந்த அட்டூழியங்கள் உலகெங்கும் உள்ளன. பெண் பொன் மண் மாயமே உலகை ஆட்டுகிறது. நீ தப்பிக் கொண்டாய்; உன்னை ஒரு சக்தி காப்பாற்றுகிறது. அது உன்னை வழி நடத்தும்.

தமிழ்: சாமி, அது தங்கள் யோக சக்தியென்பதை அறிந்தே வந்தேன். சாமி அடைக்கலம் புகுந்தேன்; என்னைக் காக்க வேண்டும். ஏதோ கலையினால் கடவுளை அன்பு செய்து கொண்டிருக்கிறேன்.

சாமி: மணி, கடவுள் அருளே உன் கலையில் இறங்குகிறது; இதோ இறங்கி விட்டது. அப்படியே, அப்படியே கண் மூடித் தியானிக்க.

தமிழ்மணி சுவாமிகளின் திருக்கைகளைக் கோத்துக் கொண்டே தியானத்தால் தன்னை மறந்தான்; விறுவிறுப்பான யோக மின்சாரம் அவன் உடலில் பரவியது; உள்ளம் திறந்தது; ஆக்ஞா சக்கரம் திறந்தது; ஒளி தெரிந்தது. சஹஸ்ராரத்தில் சக்தி பாய்ந்தது; தமிழ் மணி உடல் உயிர் மனம், உள்ளம் எல்லாம் மறந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தான். சுவாமிகள்

அவனது புருவ நடுவிலிருந்து நெற்றியில் தடவிக் கொண்டே ஓம் சிவம் ஓம் சக்தி என்றார். பிறகு முதுகெலும்பிற் செல்லும் நாடிகளைக் கீழிருந்து மேலே தடவினர்.

அப்படியே தாமும் தியானத்தில் ஆழ்ந்தார். மூன்று மணி நேரம் தமிழ் மணி உள்ளாழ்ந்து சமாதியிலிருந்தான். அஷ்டாங்க யோக சித்தியும் உடனே பலித்தது — மகான் அருளால்.

"எழுந்து பணி செய்" என்று சாமியார் தலையில் தட்டிய பிறகே மணி விழித்தெழுந்தான். உடனே சாமியார் காலில் விழுந்து "குருநாதா, பெறவேண்டியதைப் பெற்றேன். இப்படியே தினம் காலை மாலை தியானம் செய்வேன். குருநாதன் அருள் இரங்கி, ஏழையை முன்னேற்ற வேண்டும். இப்படியே குருசேவை செய்து கொண்டிருந்தாலும் போதும் மகான் கட்டளைப்படி செய்வேன்.

சாமி: மணி, நீ பாத சேவை செய்யத்தேவையில்லை; இதோ இன்றிரவே சிதம்பரம் செல்லும் இது. இதன் சக்தி உன்னுள் விளையாடும். அதைக் கொண்டு நீ உலகில் சன் மார்க்கக் கலைப் பணி செய். தமிழர் கூட்டத்தை உலகில் உயர்த்து. நான் தமிழகத்தில் உன் கலைக் கோயிலுக்கு வழி துலக்கி வருவேன்; இன்னும் நான்காண்டுகள் சென்றுலே அது நடக்கும். அதற்குள் உனக்கு ஒரு பெண் துணை வருகிறது. உனக்காகவே பிறந்த அந்தணப் பெண், கலைச் செல்வி; அவளுடன் இப்படியே தியானித்துவா — அவளையே சக்தியாகவணங்கு. சிற்றின்பத்துக்கு இடந்தராதே. அவளால் உன் கலைப்பணி சீர் பெற்றோங்கும்.

தமிழ்: சாமி, பெண் என்றுல் பயமாயிருக்கிறது. நான் பிஜிலி யிடமும், அந்த வெள்ளைக்காரி யிடமும் பட்டது போதாதா?

சாமி: மணியே இது உத்தமி; உனக்கென உதித்தது. சொன்னபடி செய்.

தமிழ்: என் கதி யென்ன? சிங்கையி லிருப்பதா? இன்றேல் இந்தியா செல்வதா?

சாமி: இப்போது இந்தியா விற்குப் போகாதே; உலகப் புகழ் பெற்று வந்தாலே இந்தியா மதிக்கும். நீ விரைவில் கப்பலேறி, உலகப் பிரயாணம் செய்வாய். அதற்கொரு நண்பன் வருவான், உதவுவான். அங்கே ஜப்பானுக்குச்செல். ஜப்பானிய நடனமும், கலையும் பழகு—பிறகு உன்னை ஒரு புண்ணியாத்மா அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லும்; அங்கே உனக்கு வேலை அதிகம். அதுவருமாறு:

1) சுத்தாத்வைத சமயவிளக்கம்
2) தமிழிசை முழக்கம்.
3) ஹாலிவுட்டில் படத்தொழில் கற்றல். தமிழர் நாகரிக விளக்கமான நாடகங்களும், படங்களும் தயாரித்தல்.
4) அமெரிக்க நகரங்களில் சுத்தாத்தை சங்கம் நிறுவுதல்.
5) அமெரிக்காவில் வளரும்புதிய தொழில்களின் ஆராய்ச்சி.

சில தமிழருக்கு, வேண்டிய பணம் உதவி, அங்கே யந்திரத் தொழில் பயிலச் செய்தல். பிறகு நீ இங்கிலாந்தில் இசைத் தொண்டும் சுத்தாத்வைத சங்க சேவையும் செய்து ஐரோப்பாவையும் சுற்றிக்கொண்டு "உலகக் கலை

ஞன்'' (World Artist) என்னும் பட்டம் பெற்று இந்தியாவுக்கு ஏராளமான பணத்துடன் வர வேண்டும். அங்கே கலைக்கோயிலுக்கு நிலம் தயாராயிருக்கும். பிறகுதான் அந்தக் கைங்கரியம் நிறைவேறும். சரி புறப்படு; ஓம் சிவசக்தி ஓம்.

தமிழ் மணியும் சாமியும் புறப்பட்டனர். சாமி கடற்கரை சென்றதும் கப்பல் தயாராயிருந்தது. இருவரும் சிங்கப்பூருக்கே சீட்டு வாங்கினர். காலையில் சிங்கப்பூருக்கு வந்தது கப்பல். தமிழ்மணி கண்விழித்து ஓம் குருபாதம் என்று வணங்கப் பார்த்தான். சாமியைக் காணோம். "சிவ சிதம்பரம்'' என்றொரு சீட்டு மட்டும் இருந்தது.

மகானின் மகிமையை வியந்து போற்றி இன்பக்கண்ணீருதிர்த்து தமிழ்மணி முற்றிலும் புதிய மனிதனாகத் தன்னிடத்திற்கு வந்தான். அவன் முகப்பொலிவைக் கண்ட பொன்னம்பலம் மணி நீ மாணிக்க சிவம் என்று வணங்கினன்; அதே சமயம் மக்வாடர் வந்து மன்னிப்புக் கேட்டு, "இனி நான் உன் சேவகன்'' என்றான். "ஐயா எனக்கு வேண்டிய சேவகர் உண்டு; வந்தனம், இந்தாருங்கள் கனிகள்'' என்று தந்து அனுப்பினன் மணி. மக்வாடர் கப்பலேறினன். பிறகு தகவலில்லை இனித் தொல்லையுமில்லை.

மறுவாரமே சிங்கப்பூர் ஹாலில் தமிழிசை விருந்துக்குத் தமிழரும், சீனரும், ஜப்பானியரும் ஏற்பாடு செய்தனர்.

அத்தியாயம் பதினைந்து

சங்கீத கோஷ்டி

போரின் கொடுமையால் நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. உணவுப் பொருள்களைப் போர் அள்ளிச் சென்றது. அகவிலை ஏறியது. கப்பலேறி வரவேண்டிய சாமான்கள் அரிதாயின. உள்நாட்டுத் தொழிலுக்கேற்ற சரக்குகளும் சண்டைக்காகச் சென்றன. பருத்தியும், நூலும் கிடைப்பதே அரிதாகி, விலையும் ஐந்தாறு மடங்கு அதிகரித்தன. தறிகள் வேலை செய்யவில்லை; நெசவுக்காரர் பட்டினி கிடந்து மெலிந்தனர். இப்படியே பல கைத்தொழில்கள் நலிந்தன. ஆதலால் ஜம்புநாதனுடைய சுதேசி வியாபாரஞ் செழிக்கவில்லை. கிராமபோன் தொழிலுக்கு வேண்டிய சமான்களும் ஐரோப்பாவிலிருந்து வரவில்லை. ஆதலால் சாமிநாதன் கடையை விற்றுவிட்டு நஷ்டமில்லாமல் ஊருக்கு வந்து சேர்ந்தான். இதற்கு முன்பே வாணி திருச்சிராப்பள்ளிக்கு வந்து, பிடில் கோவிந்தசாமி பிள்ளையின் அன்பினால் சங்கீதத்திலும் வீணையிலும் நல்ல தேர்ச்சியும் ஸ்வர ஞானமும் பெற்றாள். கோவிந்தசாமிபிள்ளையின் பிடிலுக் கேற்றபடி வாணி வீணை வாசிப்பாள். இரண்டுடனும் வாய்ப்பாட்டும் சேர்ந்தால் கலையின்பம் பெருகும். தன் வீணைக் கேற்ற குரல் தமிழ்மணிக்கே உண்டு என்பதை வாணி மறக்கவில்லை. தமிழ்மணியின் அழகும், அன்பும் கலையும் அவளை முன்பே காந்தம் போல் இழுத்தன. அடிக்கடி

அவள் அவனுடன் சேர்ந்து நல்ல பாடல்களை மீட்டிக் கச்சேரி செய்ய நினைத்தாள். இருவரும் பாடிய இசைத்தட்டை அடிக்கடி வைத்துப் பார்த்தாள்; ஊசி வைத்துத் தட்டு சுழலும் போது அவள் மனமும் தமிழ்மணியை நினைத்துக் கலக்கனவிற் சுழலும். வாணிக்குக் கச்சேரி செய்ய விருப்பம். ஆனால் ?......

வீட்டிலுள்ள பழம்பாட்டி "கண்ணாட்டிக்குக் கச்சேரியா — காலை முறித்து விடுவேன்" என்று கண்டித்தாள். வாணி கோவிந்தசாமி பிள்ளையிடம் சிக்ஷை சொல்லிக்கொள்வதையும் கண்டித்தாள். ஊரிலிருக்கும் வம்பர், குப்பைக் கதை களெல்லாம் கட்டி விட்டனர். அனைத்தினும் கொடியது ஒரு திமிர் பிடித்த வாலிபன் பெயர் போடாமல் அவளுக்கு ஆபாசக் கடிதம் எழுதியதே. "என்னைக் காதலித்து வந்தால் நாடகக் கம்பெனி நடத்திச் சுகமாக வாழலாம்; இனியும் பிடிவாதம் செய்தால் ஆபத்து வரும். அவமானப் படுத்துவேன்." இந்த மாதிரி எழுதியவனை வாணி அறிவாள். வேள்ளையன் என்பதை இரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள். வாணி ஒருநாள் அண்ணா சாமிநாதனிடம் கடிதத்தைக் காட்டிக் கிழித்தெறிந்தாள். அந்த வாலிபன் சேட்டை பொறுக்க முடியவில்லை.

அவனுக்கு உடந்தை தடிச் சொங்கு என்றால் ஆபத்திற்குக் கேட்கவேண்டியதில்லை. வீட்டிலும் வெளியிலும் இப்படி இடர்கள் முளைத்தன. வாணி தன் வாழ்வை இப்படிக் கழிப்பது தற்கொலை எனக் கருதினாள். வீட்டை மீறுவது; வெளியுலகின் இடர்களை வெல்வது என்ற துணிவுடன் சாமிநாதனை அணுகினாள். சாமிநாதன் ஜம்புநாதன் யோசனையைக் கேட்டான்.

ஜம்புநாதன், அனுபவசாலி. நன்றாக மத்தளம் வாசிப்பான்; சாமிநாதனும் இசைப் புலவன். வாணி வீணை மீட்டுவது, சாமிநாதன் பாடுவது, ஜம்புநாதன் மத்தளம் வாசிப்பது; ஊர் ஊராகக் கச்சேரி நடத்துவது — என்று மூவரும் கிளம்பினர்.

"பெண்பிள்ளை புருஷருடன் கச்சேரி பண்ணுவதாம்; கெட்டதே காரியம்" என்று உறவினர் சீறினர். சாமிநாதன் எவ்வளவோ சமாதானம் சொன்னான். "உன்னாலேதான் அந்தப் பெண் கெட்டாள்" என்று உறவினர் அவன் மேல் பாய்ந்தனர். இருவரையும் சாதிப் பிரஷ்டம் செய்வதாக மிரட்டினர். "கலிகாலமப்பா கலிகாலம்; பெண்களுக்குக் கால் முளைத்து விட்டது! மீசை ஒன்றுதான் பாக்கி. கோணல் வகிடும் குமரிக் கலியாணமும், அறுதலி மணமும், அடாத செயலும், வாய் நீட்டமும், மேடைப் பேச்சும், சாய மினுக்கும், ஆட்டமும் பாட்டமும், பாட்டுக் கச்சேரியும், ஆண்களுடன் சரி சமனாகப் பழகுவதும் — கலிகாலமப்பா கலிகாலம்" — என்று பழம்பாட்டி ஊளையிட்டாள். சாமிநாதன் சரியான பதிற் சொல்லித் தன் காரியத்தையே சாதித்தான்.

ஒருநாள் தேசமித்ரனில் தமிழ்மணியைப் பற்றி ஒரு குறிப்பிருந்தது:

மலேயாவில் தமிழிசை

(நமது நிருபரிடமிருந்து)

இன்று மலேயா முழுதும் தெரிந்த பெயர் தமிழ்மணி இராம

197236

நாதன் பெயரே. இவர் மதுரையி லிருந்து பர்மா சென்று, கச்சேரி கள் நடத்தினர்; அங்கே கலகத் தின் காரணமாகச் சிங்கப்பூருக் குச் சென்ருர். தாய் நாட்டிற்கு வர இவர் ஏறிய கப்பல் எம்டன் குண்டால் மூழ்கியது. இவர் மட்டும் தெய்வாதீனமாகத் தப்பிக் கரை சேர்ந்து, சிங்கப்பூரில் தம் இசைப் பணியைத் தொடங்கினர். ஏராளமான தமிழரும், மலேய ரும், சீனரும், ஜப்பானியரும், வெள்ளைக்காரரும் இவர் இசை யின்பத்தைப் பருக வருகின்றனர். இவரால் தமிழுக்கும் தமிழிசைக் கும் பெருமை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்மணி தமது கலையினல் உலகை வெல்வாரென்பது உறுதி. இப் போது தமிழ்மணி சிங்கப்பூர் மார்க் கெட் தெருவில் நடராஜன் என்னும் அன்பருடன் தங்கியிருக்கிருர்.

சாமிநான் படித்தான்; வாணி படித்தாள். "அண்ணு, இங்கி ருந்து சிறுமைப் படுவதைவிட அங்கே போய் அவருக்கு உதவி செய்யலாமே" என்ருள். சாமி நாதன் ஒப்புக் கொண்டான். பணம் வேண்டுமே. நல்ல வேளை யாய் அப்பொழுது சென்னையில் சங்கீதக் கச்சேரிகள் நடந்தன.

சாமிநாதன், வாணி, ஜம்புநா தன் ஆகிய மூவரும் இரவு வண்டி யில் தைரியமாகப் புறப்பட்டனர். சென்னை சங்கீத சபைத் தலைவர் கலாநிதி, காயக சிகாமணி முத் தையா பாகவதரைக் கண்டு தமது வித்தையையும் காட்டினர். பாக வதர் வாணியின் யாழிசையை மெச்சி அன்றே கச்சேரிக்கும் ஏற்பாடு செய்தார். வாணி கச் சேரி ஆறு மணிக்கு. அவள் கோஷ்டியுடன் ஐந்து மணிக்கே கச்சேரி மண்டபத்திற்குச் சென் ருள். அப்போது, அங்கே ஒரு பெண், பிடிலும், அவள் தமையன் குழலும் இனிமையாக வாசித்த னர். சபை மிகவும் விரும்பிக் கேட்டது, மங்களம் ஆனதும் சபைக்காரியதரிசி "இன்று கமலம் பிடிலும் கண்ணன் குழலும், சேஷு கஞ்சிராவும் இசை விருந் தளித்தன. கமலத்தின் இசை யறிவும் சாதனமும் அற்புதமா னவை" என்று பேசிச் சன்மான மளித்தார்.

பிறகும் கமலமும் கண்ணனும் வாணியின் கச்சேரிக்காக இருந் தனர்.

வாணி மேடையேறி சபையை வணங்கி வீணையை மேளம் செய் தாள். சாமிநான் குரலும் ஜம்பு நாதன் மத்தளமும் சேர்ந்து யாழி சையின்பத்தைப் பேரின்பமாக் கின. சபை அடிக்கடி க்ரகோ ஷத்துடன். ரசித்துக் கேட்டது. இரண்டு மணி நேரம் அமிர்த வர்ஷமாக வாணி வீணை வாசித் தாள். காரியதரிசி அவளை மிகவும் மெச்சி மூன்னூறு ரூபாய் சன் மானந் தந்தார். அதைப் பெற்றுக் கொண்டு வாணி கோஷ்டி புறப் பட்டபோது, கமலம் எங்கள் மோட்டாரிலேயே வரலாம் என்று அவர்களை அழைத்துக் கொண்டு தன் ஜாகைக்கு வந்தாள். அதே சுந்தர விலாசத்திலேதான் சாமிநாதனும் வாணியும் இறங்கி யிருந்தனர். எல்லாரும் நல்ல நண்பரானுர்கள்.

சாப்பாடானது; வாணி அரை மணி நேரம் பஜனை செய்தாள். அதற்குக் கமலி பிடில் வாசித் தாள். கண்ணன் குழலூதினன். நாத பூஜை உள்ளத்தை அள்ளி யது. நாத சுகத்தில் எல்லார் உள் ளமும் ஒன்ருனது. பஜனை முடிந் ததும், "இப்படியே எல்லாரும் சேர்ந்து கலைப்பணி செய்யலாமே"

என்றாள் வாணி. கமலம் 'ஆகா நடக்கட்டுமே' என்றாள். வாணி—சாமிநாதன் ஒப்பி மலேயாப் பிரயாணத்தைப் பற்றிச் சொன்னான். "ஆகா நாங்களும் வருகிறோமே. இங்கிருப்பதைவிட அங்கே சென்றால் கமலத்திற்கும் ஆறுதலாயிருக்கும்" என்றான் கண்ணன். வாணிக்குக் கமலம் பெரிய துணையானாள். இருவரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டு மனம் பொருந்தினர்.

கமலம் யார்? கேட்டால் வியப்பீர்கள். தஞ்சாவூர் மதனகோபாலன், டில்லியில் மதன் பாபுவாய், பிஜிலியுடன் சேர்ந்து டுணுக்கேசராகி, அடிமையாகிக் கைதியாகிப் பிறகு சுயபுத்தி வந்து இரங்கூன் சிறையிலிருக்கும் கதையை வாசகர் அறிவார். அதே மதனகோபாலன் மனைவிதான் கமலம். கமலம் முன்னே முன் கோபி, சண்டைக்காரி, பொறாமைப் பித்தி; இப்போது அவள் பரம சாந்தை, பொறுமையின் வடிவு, அன்பு மயம்—காலத்தின் சோதனை அவளை அப்படி மாற்றி விட்டது. கணவன் தன்னைப் பிறந்த வீட்டில் கொண்டு வந்து தள்ளி எங்கோ சென்றொழிந்தான். போனவழி தெரியவில்லை. தன் குணக்கேட்டை வெறுத்தே கணவன் அப்படிச் செய்ததைக் கமலம் அறிந்தாள். மனச் சாட்சியின் சவுக்கடியே அவளைத் திருத்தி விட்டது. கணவன் இசைப் புலமை அவளுக்குண்டு; அவன் பாடுவான் இவள் பிடிலிழுப்பாள். இவளும் பாடுவாள்; ஆனால் பிடில் முதல்தரம். ஏழைக் குடும்பம் எத்தனை நாள் தன்னைக் காக்கும். பிறருக்குப் பாரமாயிருக்க அவளுக்குப் பிரியமில்லை. அவள் தமையன் கண்ணன் வேணுகான கலாநிதி. வயது நாற்பத்தைந்திருக்கும். அவனுக்குப் பதினாறு வயதிலேயே கலியாணமாய், முதல் தாரம் வீட்டுக்கு வந்து மறு வருஷமே கர்ப்பமாகி ஒரு ஆண் குழந்தை பெற்று இறந்தாள். குழந்தையும் இறந்தது. கண்ணன் இரண்டாந்தாரம் கொண்டான். அவளுக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. இரண்டு பெண்கள் இறந்தன. ஒரே பெண்ணைத் தகுந்த இடத்தில் கட்டிக் கொடுத்தான் கண்ணன். மாப்பிள்ளை பம்பாயில் வேலை பார்க்கிறான். கவலை விட்டது. கண்ணன் வேணு கானத்திலேயே காலங்கழித்தான். அப்போதுதான் கமலமும் வந்து சேர்ந்தாள். கணவனைப் பிரிந்த கமலம் வெகு துயரப்பட்டாள். அவள் துயரத்தை நாத சுகத்தில் மறக்கச் செய்தான் கண்ணன். இருவரும் சுதந்திரமாகக் கச்சேரிகள் செய்து நல்ல பெயர் பெற்றனர். கண்ணனுக்குக் கர்நாடக சங்கீதத்தை உலகெல்லாம் பரப்ப விருப்பமுண்டு. மலேயாவில் அவனுக்கும் நண்பர் அதிகம். 'தமிழன்' ஆசிரியர் அவன் நண்பரே. ஆதலால் வாணியுடன் கமலமும் தானும் கப்பலேற முற்பட்டான்.

மறுநாளே கண்ணன் கோலாலம்பூர் தமிழன் ஆசிரியருக்கு ஒரு தந்தி கொடுத்தான்:—

"நான் சங்கீத கோஷ்டியுடன் வருகிறேன்—மொத்தம் எட்டுப் பேர்—ஸ்வெட்டன்ஹாம் துறைமுகத்திற்கு ஆளனுப்புக." எட்டுப் பேர்களில் வாணி, சாமி, ஜம்பு, கண்ணன், கமலம்—ஆகிய ஐவரும் வித்வான்கள். மற்ற மூவர் துணையாட்கள். தந்தி கொடுத்ததும் நெல்சன் என்ற கப்பலில் ஏறி எல்லாரும் பயணமானார்கள்.

இனி அவர்களை மலேயாவில் சந்திப்போம். **(தொடரும்)**

மனக் குலைவு.

(ரா. மகாதேவன்)

மலைகளின் மீது முகிலாடக் கண்டேன்
முகில் கூந்தலாச்சுதடி
அலைகளின் மீது நுரையாடக் கண்டேன்
நுரை திரை யாச்சுதடி

கலைகளினுள்ளே இசையாடக் கண்டேன்
இசை நகை யாச்சுதடி
வலைகளினுள்ளே மீனாடக் கண்டேன்
மீன் மனம் ஆச்சுதடி

சிலைகளினுள்ளே களையாடக் கண்டேன்
களை பொலிவாச்சுதடி
உலைகளினுள்ளே அனலாடக் கண்டேன்
அனல் உடல் ஆச்சுதடி

கொலைகளின் மீது பழியாடக் கண்டேன்
பழி வழியாச்சுதடி
கிளைகளின்மீது நாராடக் கண்டேன்
நார் கயிராச்சுதடி

பசும்புல்

சு. கிருஷ்ணராவ், எம். ஏ., பி. எல்.
டி. எஸ். சங்கரன், பி. எஸ்ஸி.

தமிழ்க் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை, பசும் புல்லைப் பற்றி பசுமையான கவிதை ஒன்று பாடியிருக்கிறார். எத்தனையோ மகத்தான பொருள்கள் உலகில் இருக்கும்போது புல்லைக் குறித்தும் ஒரு பாடலா என்று ஆச்சரியப் படலாம். ஆனால் உண்மை அப்படி இல்லை. மனித உபயோகத்திற்கான எல்லா முக்கிய கால்நடைகளும் புல்லுண்டு வாழ்கின்றன. பழக்கப்பட்ட பிராணிகளில் புலால் ஜீவிகளைக் காட்டிலும் புல் ஜீவிகள்தான் அதிகப் பயன் தரக்கூடியன என்பது பலரும் அறிந்த விஷயம். மனித நாகரிகம் துவங்கிய நாள் முதல், அவன் வாழ்வுடன் ஆடு, மாடு, எருமை, குதிரை, கழுதை ஒட்டகம், யானை இவைகள் இணைக்கப் பட்டிருக்கின்றன. இயந்திரத் தொழில் சிறந்த இக்காலத்திலாகட்டும், அல்லது எக்காலத்திலாகட்டும் இப்பிராணிகள் மிகமிக இன்றியமையாதனவே யாகும். ஒருவன் நூறு நாய்களை வைத்திருப்பதைக் காட்டிலும் பத்து எருமைகளை வைத்திருந்தால் அவன் செல்வவானாகவேகருதப்படுவான். ஏனைய பிராணிகளுக்கு உடல் வலிமையையும், உழைக்கும் திறனையும் கொடுப்பது அவைகளின் முக்கிய உணவாகிய புல்தான். தாவரவர்க்கத்திலேயே புல் மிக மிகக் கீழ்ப்பட்ட நிலையிலிருந்தாலும், அதனால் மனித வாழ்க்கைக்கு ஏற்படும் பயன் மிகவும் அதிகமானது. ஆதலால் ஜீவாதாரத்திற்கு அத்யாவசியமான தாவரங்களில், புல் மிகச் சிறந்தது என்று கூறுவது மிகையாகாது. புல் இன்றி, அதனால் ஆடுமாடுகள் இன்றி, வண்டி வாகனங்களின்றி தயிர், மோர், பால், வெண்ணெய், நெய், இறைச்சி, இவைகளின்றி பண்ணைகளை நடத்த வழியின்றி மனிதன் அவதிப் பட்டால்தான், புல்லின் அருமை பெருமைகளை நாம் அறிய முடியும். இது பற்றித்தான் முதற்கடவுளாகிய கரி முகத்தோன் அறுகம் புல்லைத் தன் சென்னியிறுத்திப் போற்றுகின்றான். மனித வாழ்க்கைக்குப் புல் எவ்வாறு சிறந்ததென்று இதனால் விளங்க வில்லையா?

அறுகஞ் சூடிய அமரர் கோனைத்
திரும்பத் திரும்பத் தொழுவோம்
யாமே

"உணவு, உறக்கம், ஊடல், உயிர்ப் பிராணிகளுக்குப் பொது வாயினும், மனிதன் புல்லைத் தின்னாதவரை கால் நடைகளின் அதிருஷ்டம்தான்" என்று ஒரு வடமொழிப் புலவன் பாடியிருக்கிறான். அக்கவி இருபதாம் நூற்

ருண்டில்; இப்போது வாழ்ந்திருப்பானுகில் இவ்வாறு சொல்ல மாட்டான் என்று நிச்சயமாகக் கூறலாம். ஏனெனில் மக்கட் தொகைப் பெருக்கத்தாலும் உணவுச் சுருக்கத்தாலும், மனிதன் தன் அறிவைக் கொண்டு புல்லையுங்கூடப் பக்குவப் படுத்தி உண்பதற்குப் பழகி விட்டான். இதுகாறும், மனித உணவிற்குப் புல் தகுதியானதா என்று ஆராயப் படவில்லை. ஆனுல் உலகப் போரை முன்னிட்டு பல நாகரீக நாடுகளில் இப்பிரச்னை தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது. ஜப்பான் தேசத்தில் விஞ்ஞானிகள் நம் நாட்டில் வளரும் உபயோக மற்றவை என்று கருதப்பட்ட மரம், செடி, கொடி, பூண்டு இவைகளை எவ்வகையில் பக்குவப்படுத்தி மனிதனுக்கு உணவாக்கலாம் என்று ஆராய்ச்சிகளைச் செய்து வருகிருர்கள். புல் பூண்டுகளையும் பக்குவம் செய்து உணவாக நாம் கொள்ள முடியும் என்றும் கண்டு பிடித்திருக்கின்றனர்.

நம் தமிழ் நாட்டில் நாம் பற்பல கீரைகளையும், தழை தண்டுகளையும் உண்கிருேம். அவைகளால் விசேஷ உடலுறுதி ஏற்படுகிறதென்று மருத்துவர் சிறப்பாகக் கருதுகின்றனர். எனவே கீரை, தழை இவைகளைப் புசிக்கும் மனிதன் ஏன் புல்லைப் புசிக்கக் கூடாது? என்று அமெரிக்க விஞ்ஞானிகளும் இவ்விஷயத்தை ஆராய்ந்து உணவுகளிற் சிறந்தது புல் என்று கண்டு பிடித்திருக்கின்றனர்.

பழங் காலத்தில் மனிதனுக்குச் செல்வம் கால்நடைகள்தான். பண்டம் மாற்ற நாணயமாக இருந்ததும் அவைகள்தான். அதனுல் கால் நடைகளுக்கு முக்கிய உணவான புல்லைத் தேடிக் கொண்டு அவர்கள் பல இடங்களிலும் அலைந்து திரிந்து வந்தனர். புல்லைக் கண்டால் பெரும் பொக்கிஷத்தைக் கண்டது போலப் பெரிதும் மகிழ்ச்சி கொள்வார்கள். புல்லைத் தேடி அலையும் தொழிலில் ஈடுபட்ட நம் முன்னேர்கள் பல்வேறு நாடுகளுக்கு பல்வேறு நாகரிகங்களை உண்டாக்கினர் என்று சரித்திர வாயிலாக அறிகிருேம். ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து, ஐரோப்பா, பாரசீகம், இந்தியா முதலிய நாடுகளை நாடிச் சென்றது தம் கால் நடைகளுக்கு புல்லிற்காகத்தான் என்று ஊகிப்பது மிகையாகாது. மற்றும், கால்நடை உணவிற்கேயன்றி, தம் இல்லங்களுக்கு மேற்கூரையாகவும், சுவர்களாகவும், படுக்கையாகவும் புல் பயன்பட்டு வந்தது. தருப்பை என்ற ஒரு வகைப்புல், பல வைதீக யாகங்கள் செய்யப் பயன்படுகிறது என்றும் நாம் அறிவோம். எனவே தொன்று தொட்டு மனித வாழ்க்கையின் சுகாதாரத்திற்கும், செல்வத்திற்கும், இன்பத்திற்கும், இம்மை மறுமைப் பயன்களுக்கும் எல்லாவற்றிற்கும் புல் தான் முக்கிய காரணம் என்று விளங்குகிறது.

இப்போது நடக்கும் போர் விஞ்ஞானிகளின் போர். மனித வர்க்கத்தை எளிதில் கொன்று, பெரும் நகரங்களை அரை நொடியில் பாழாக்கும் போர்க் கருவிகளை யமைத்துக் கொடுக்கும் விஞ்ஞானிகளே மனிதன் உய்யும் பொருட்டு புல்லைக் கொண்டு மிகச் சிறந்த உணவையும் உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றனர். ஆக்கவும் அழிக்கவும் வல்ல விஞ்ஞானிகளின் திறமைதான் என்னே! பல விஞ்ஞானிகள் பல்லாண்டு

ஆராய்ந்து புல்லைக் குறித்து பல உண்மைகளைக் கண்டறிந்திருக்கின்றனர். "மனித உணவிற்கு புல் அத்தியாவசியம் என்றும், பழங்கள் காய்கறிகள் இவைகளில் இருக்கும் வைடமின் உயிர்ச் சத்தைக் காட்டிலும் 28 மடங்கு அதிகமும், கிழங்குகளிலுள்ள "ஏ" வைடமினைப் போன்று 23 மடங்கு அதிகமும், கீரைகளிலுள்ள "பி" வைடமினைப் போன்று 9 மடங்கு அதிகமும், லெட்டூசிலுள்ள "பி-2" வைடமினைப் போன்று 22 மடங்கு அதிகமும், தக்காளியிலுள்ள "சி" வைடமினைப் போன்று 14 மடங்கு அதிகமும் புல்லில் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். எனவே மிகச் சிறந்த உணவுப் பொருள்கள் என்று நாம் கருதும் காய்கறிகள், பழ வர்க்கங்கள், கீரைகள் இவைகளைக் காட்டிலும் பன்மடங்கு "புல்" சிறந்தது எனக் காண்கிறோம்.

மேலே கூறிய ஆராய்ச்சிகளைக் காட்டிலும், மிகக் கடினமானது புல்லை நாம் எவ்வகையில் உட்கொண்டால் நம் வயிற்றில் அது ஜீரணிக்கும் என்பதே. இதைக் குறித்தும் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. புல்லை மனிதனுக்கு ஏற்ற உணவாகச் செய்ய அதை உலர்த்தி, மணமுள்ள வெண் பொடியாகச் செய்து, உணவுக்குத்தக்க பக்குவம் செய்திருக்கின்றனர். இம்முறை இன்னும் இரகசியமாகவே இருந்து வருகிறது. இம்முறையில் புல்லிலுள்ள வைடமின் அளவு மாறுவதில்லையாம். இவ்வாறு புல் வகை மட்டுமின்றி, சோளம், கம்பு, தினை, ராகி, வரகு, நெல் முதலிய புல் இனத்தைச் சேர்ந்த எல்லாப் பூண்டுகளின் சருகுகளிலிருந்தும் தட்டுகளிலிருந்தும், இவ்வாறு சிறந்த புல்லுணவைத் தயாரிக்க முடியும். இவ்வாறு தயாரித்த உணவுப் பொடியை விஞ்ஞானிகள் உட்கொண்டு அதனால் உடலுறுதியையும், உடல் நலத்தையும் பெற முடியும் என்று அவர்கள் சாதிக்கின்றனர். இத்தகைய உணவை உண்டாக்க ஒரு இராத்தல் எடைக்கு மூன்று அணுவிற்கு குறைவாகத்தான் ஆகிறதென்றும் கணக்கிட்டிருக்கின்றனர். மற்றும் புல் உணவைப் பெருவாரியாக இயந்திரங்களைக் கொண்டு செய்தால் மிகவும் சிக்கனமாகவே செய்ய முடியும். "டப்பா உணவு" அபரிமிதமான இந்நாளில் இனி டப்பியில் அடைத்து புல்லுணவும் கிடைக்கக் கூடியதாக ஆகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

இதுவரை மனிதன் பறப்பவைகளில் ஆகாய விமானம், ஊர்வனவற்றில் டாங்கிகள், ஓடுபவைகளில் மோட்டார், ரயில், நீந்துபவைகளில் கப்பல்கள், மூழ்குபவைகளில் நீர் மூழ்கிக் கப்பல்கள், தாவரங்களில் பெரும் மரங்கள் இவைகள் தவிர மற்ற எல்லாவற்றையும் உட்கொள்ளுவதாக நாம் சரித்திர பூகோள நூல்கள் வாயிலாக அறிகிறோம். ஆனால் மனிதன் புல்லைத் தின்பதாக எங்கும் படித்ததுமில்லை; கேட்டதும் இல்லை. புல்லும் புற்றரையும் கால் நடைகளின் ஏகபோகமாக இதுகாறும் இருந்து வந்தன. மனிதனுடைய அவசியத்திற்காக, தன் அறிவுப் பெருக்கால் புல்லையும் பக்குவப் படுத்தி உண்ணக் கற்றுவிட்டான். இதனால் உணவையும், வாழ்க்கையையும் பொருத்து மனித வர்க்கமும் கால் நடைகளும் ஒரே குலமாகி விடுகின்றன! இதுதான் படைப்பின் ரகசியம் போலும்!

ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

வங்காளியின் மனைவி தன் புருஷனைப் பார்த்து, "உங்கள் தொழிற்சாலையில் இவருக்கு ஏதாவது வேலை கிடைக்குமா?" என்றாள்.

அவன் சிறிது மேலும் கீழும் விழித்து விட்டு, "ஓ! கிடைக்கக் கூடும்" என்றான்.

"உங்கள் பெயர் என்ன?" என்று திவாகர் கேட்டான்.

"ஹரீஷ பட்டாச்சாரியா. என்னைப் பிராமணன் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். நான் செம்படவன். சனங்கள் அன்புடன் பட்டாச்சாரியா என்று அழைக்கிறார்கள். ருத்திராட்ச மாலை அணிந்திருக்கிறேன். மாம்சம் புசிப்பதை விட்டு விட்டேன். இரண்டாயிரத்தைநூறு ரூபாய் செவழித்து பல இடங்களுக்கும் போய் வந்திருக்கிறேன். வீட்டில் தேவியைப் பிரதிஷ்டை செய்து நான்கு வருஷங்களாகின்றன. இனிச் செய்ய வேண்டிய தொன்றும் பாக்கி இல்லை. அதனால்தான் நான் மனைவியிடம் அடிக்கடி, ஆராகானில் உள்ளதை விற்று விட்டு எங்காவது புண்ணிய ஸ்தலத்தில் போய் இருந்து கொள்வோம் என்பது" என்று கூறிவிட்டு விழிகளை மேலே ஏற்றிக்கொண்டு உட்கார்ந்து கொண்டான். திவாகரின் மூளை இன்னும் பூரண வளர்ச்சி அடையவில்லை. அவன் வேகாத மண் பானை. முழு மனிதனல்ல. ஆகையால் அவர் கூறிய வார்த்தைகளின் அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"சரி, நகைகளை விற்று விடட்டுமா?" என்று அந்தப் பெண் கேட்டாள்.

வீட்டுக்காரனின் தியானம் கலைந்தது. "விற்றுவிடு" என்றான்.

உலகத்தின் சூதுவாது தெரியாத திவாகர் இப்போது விஷயம் என்ன என்பதை அறிந்தான். அவன் எழுந்து நின்றுகொண்டு, "நான் போய்விட்டு வருகிறேன்" என்றான்.

திவாகர், ஹரீஷிடம் விடை பெற்றுக் கொண்டான். அவன் இன்னும் குளிக்கவில்லை. சாப்பிடவில்லை. அங்கிருந்து சென்று மேல் தளத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டான். கப்பல்

நதியைக் கடந்து சமுத்திரத்திற்கு எப்போது வந்தது என்பது அவனுக்குத் தெரியாது. அவன் மறுபடி கண் விழித்துப் பார்க்கும் போது சூரியன் செந்நிறமாக விளங்கினான். அநேகர் பேசிக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். திவாகர் சூரிய அஸ்தமனம்பற்றி ஆங்கிலத்திலும், வங்காளியிலும் அநேக புத்தகங்கள் படித்திருக்கிறான். இதுதான் அஸ்தமனமா? இது தான் கடலா? நாற்புரமும் பரவியுள்ள நீலக் கடலையும், அஸ்தமன சூரியனையும் பார்த்தான். சூரியனை நமஸ்கரித்தான். கண்களில் நீர் பெருகியது. ஆகாயம் இருண்டு வந்தது. மாலை இருள் பரவத் தொடங்கியது. அவன் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான். பார்க்கப் பார்க்க ஆகாயமும், ஜலமும் இருண்டது. ஆனால் திவாகர் மட்டும் பழையபடியே ரேனிங்கைப் பிடித்து அசையாது நின்று கொண்டிருந்தான்.

இரவு குளிர் காற்று வீசத் தொடங்கியது. மேல்த் தட்டில் மனிதர்களே தென்படவில்லை. தலைக்கு மேலே கிருஷ்ண பக்ஷத்து நீல ஆகாயம் கம்பீரமாகக் காக்ஷி அளித்தது. கீழேயும் அம்மாதிரியே நீலக்கடல். இவை இரண்டிற்கும் இடையில் திவாகர் சிறிது ஆறுதல் அடைந்தான். அப்போது ஒரு கோமளக் கர ஸ்பரிசத்தால் அவன் கவனம் கலைந்தது. திரும்பிப் பார்த்தான். கிரணமயி நின்று கொண்டிருந்தாள்.

கிரணமயி, "என்ன செய்து கொண்டிருக்கிறாய்? சாப்பிடாமல் இறக்கலாமெனத் தீர்மானித்து விட்டாயா?" என்றாள். திவாகர் ஒன்றும் பேசவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். கிரணமயி சிறிது நேரம் பதிலை எதிர்பார்த்துவிட்டு, "அறைக்குப் போகலாம்வா" என்று கூறி வேஷ்டியைப் பிடித்து இழுத்துக்கொண்டு அறைக்குள் சென்றாள். பிறகு அவனை உட்கார வைத்து, "ஒன்றும் தெரியாவிட்டாலும் கூட இப்படி அழுது தொழுவதால் கப்பல் ஊருக்கு திரும்பிக் கொண்டுபோய் விடாது என்பது தெரிந்திருக்க வேண்டும். பசியால் வாடி வதங்கினாலும் சமுத்திரத்தில் குதித்தாலும் திரும்பிப் போக முடியாது. நீ ஆராகான் போய்த்தான் ஆக வேண்டும். பின் எதற்காகப் பட்டினியிருந்து என்னையும் பட்டினி போட வேண்டும்? கொடுத்ததை வாங்கிச் சாப்பிடு. கப்பல் ஆராகான் போய்ச் சேர்ந்த பிறகு இஷ்டமிருந்தால் இரு; இல்லாவிட்டால் திரும்பி விடு. நான் சத்தியமாகத் தடை செய்யவில்லை" என்றாள். பசியினால் களைப்படைந்திருந்தாலும் அவள் கண்கள் தீவிர ஒளியுடன் பிரகாசித்தன. இத்தனை நாளைக்கப்புறம் அவனுக்கு உண்மை புலப்படுவது போல் இருந்தது. தாபத்தால் எரியும் அவளுடைய இரு கண்கள் பேரிலும் அவனுக்குத் துளி கூட மோகம் கிடையாது. அவன் வேறு ஒன்றும் பேசாமல் முழங்காலுக்கிடையில் தலையை வைத்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

சில நிமிஷங்களுக்கப்புறம் கிரணமயி எழுந்து கொஞ்சம் மிட்டாய்களை எடுத்து ஒரு தட்டில் வைத்து திவாகருக்கு முன்னால் கொண்டுவந்து வைத்தாள். பிறகு அவன் முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு ஒவ்வொன்றாக எடுத்து அவன் வாயில் ஊட்டினாள். முழுதும் தீர்ந்த பிறகு

கிரணமயி முன் சாய்ந்து ஒரு முத்த மிட்டுவிட்டு கலகல வெனச் சிரித்தாள்.

இந்த விஷ முத்தத்தையும் கொடூரச் சிரிப்பையும் கூட திவாகர் பொறுத்துக்கொண்டான். ஆனல் இரவு ஒரே படுக்கையில் படுக்க அவள் ஆயத்தம் செய்வதைக் கண்டு அவனல் பொறுக்க முடியவில்லை. அவன் எழுந்து நின்று கொண்டு, "இது வேண்டாம் மன்னி! என்னல் இது செய்ய முடியாது. என்னை விட்டு விடு. நான் வெளியில் எங்காவது படுத்துக்கொள்கிறேன். உன் விருப்பப்படி இந்த அறையில் இரவைக் கழிக்க முடியாது. ஒருக்காலும் முடியாது" என்முன்.

கிரணமயி படுக்கை விரித்துக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டுப் போனள். திவாகர் மறுபடியும் உறுதியாக, "இது ஒருக்காலும் முடியவே முடியாது" என்முன்.

கிரணமயி, சிரிக்க முயற்சித்தாள். ஆனல் சிரிக்க முடியவில்லை. "என்ன, இங்கு தூங்கக் கூடாதா?" என்முள்.

இரண்டு கண்களும் தீப்போல எரிந்தன. அவள் பல்லைக் கடித்துக் கொண்டு, "அந்நியர் வீட்டுப் பெண்ணை அழைத்துக்கொண்டு ஓடுவது ரொம்ப சுலபமானது என்று நினைத்துக் கொண்டாயா? எது செய்தால் எது விளையும் என்பது உனக்குத் தெரியாதா? நீ என்ன பச்சைக் குழந்தையா? எல்லாக் குற்றத்தையும் என் தலை மேல் சுமத்திவிட்டு நீ உபேந்திர அண்ணவிடம் திரும்பிப் போய், 'நான் சாது!' என்று சொல்லலாமென நினைத்துக்கொண்டாயா? உனது உபேந்திர அண்ணவும் தலை நிமிர்ந்து நடப்பார். இது முடியாது பாபு! நான் சொல்வதை உன்னல் புரிந்துகொள்ள முடியாது. புரிந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. நீ சாதுவானலும், வேறு என்ன வானலும் எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. அவமானத்தால் நான் தலை குனியும்போது உனது உபேந்திர அண்ண தலை நிமிர்ந்து நடக்க, நான் விட்டு வைக்க மாட்டேன். இதை நன்கு தெரிந்து கொள்" என்று கூறிவிட்டுப் படுக்கையை விரித்தாள். திவாகர் அருகிலிருந்த பெஞ்சியின் மேல் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டான்.

இரவு இருவரும் ஒரேபடுக்கையில் தூங்கினர்கள். சகலத்தையும் துறந்து அரிச்சந்திரன் சண்டாளனிடம் தன்னை ஒப்படைத்துக் கொண்டதுபோல திவாகரும் இந்தச் சண்டாளியின் அருகில் படுத்து ஆத்மாவை அவளுக்கு அர்ப்பணம் செய்தான். ஆனலும் அவன் இதயத்தில் நிறைந்திருந்த வேதனையும் வெறுப்பும் கிரணமயிக்குத் தெரியாமலில்லை.

இரவு முழுவதும் அவன் காதுக்கு யாரோ ஓலமிடுவது போலக் கேட்டுக்கொண்டிருந்தது. இடையிடையே கோப மூச்சும் பயங்கரமாகக் கேட்டது. புரண்டு படுக்கும்போது விழித்துக்கொண்டான். வெளியில் காற்று வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. கப்பல் ஆடத் தொடங்கியது. அவனுடைய மார்பின் மேல் கிரணமயினுடைய கோமளமான இடது கரம் கருநாகம் போல இருப்பதைக் கண்டான். விழித்துக் கொண்டால் கொத்திவிடுமே என்ற பயத்தால் அதைத் தொடக் கூடத் துணியவில்லை. மறுபடியும் கண்ணை மூடிப் படுத்துக் கொண்

டான். காற்றின் வேகம் அதிக கரித்துக் கொண்டு வந்தது. கப்ப லும் அதிகமாக ஆடத் தொடங்கி யது. கிரணமயி விழித்துக் கொண்டாள். திவாகரின் மார் பில் கிடந்த கையைச் சிறிது அழுத்தி, "வெளியில் என்ன? புயல் வந்து விட்டதா?" என்ருள்.

"ஆம்."

"அப்புறம் என்ன செய்வது?"

திவாகர் ஒன்றும் பேசவில்லை. கிரணமயி மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டு, "கப்பல் மூழ்கி விட்டால் நல்லது தானே! இதற் குத்தானே ஆண்டவனைப் பிரார்த் திக்கிருய்?" என்ருள்.

"இல்லை."

"அப்பா! என்ன சொன்னுலும் இந்த 'இல்லை' என்ற பதில்தான். நீ மனிதன் அல்லவா? கற்சி லையா?" என்று கூறிவிட்டு அவனை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள். பிறகு, "கப்பல் மூழ்கினல் நாமிருவரும் இப்படியே இறப்போம். அலை கள் நம்மை இவ்விதமே கரையில் ஒதுக்கும். சனங்கள் பார்ப்பார் கள். பத்திரிகையில் படம் வெளி வரும். உபேந்திர அண்ணு கூடப் பார்ப்பார். இது எவ்வளவு நன் ருயிருக்கும்?" என்ருள்.

கிரணமயி காட்டிய பயங்கரச் சித்திரம் திவாகருக்குப் பிடிக்க வில்லை. அவன் மனதிற்குள்ளா கவே கலக்கமடைந்தான். பிறகு தன்னை மெதுவாக விடுவித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அப்புறம் தப்பித்தோம் பிழைத் தோம் என வெளியில் வந்தான்.

அத்தியாயம் முப்பத்தைந்து

வெளியில் வந்ததும் திவாகருக்கு நிம்மதியாக இருந்தது. புயல் சற்று அடங்கியிருந்தது. ஆனல் கடல் கொந்தளிப்பு மட்டும் அடங்கவில்லை. எங்கு பார்த்தா லும் ஜலமயமாகக் காணப்பட்டது கண்ணுக் கெட்டிய வரையில் கரை தெரியவில்லை. அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கடலையே விடாது பார்த்துக் கொண்டிருந்தான்.

இதயத்தை வாட்டிக் கொண் டிருந்த எண்ணங்களை மீண்டும் யோசித்து மனதைப் புண்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. கடலலை மலைபோல எழுந்து வந்து கப்பலைத் தாக்கும், பிறகு அவைகள் சின்ன பின்னமாகும். மீண்டும் அவை கள் மேலெழுந்து வரும். இந்த ஆச்சரியமான விளையாட்டை திவாகர் கண்கொட்டாமல் பார்த் துக்கொண்டிருந்தான். கீழ்வானில் கருமேகங்கள் மலைபோலத் திரண்டு நின்றன. சூரியன் உத யம் ஆகுமா ஆகாதா என்பதைப் பற்றிச் சொல்ல சூரிய கிரகணம் ஒன்றுகூட பூமிக்கு வரவொட்டா மல் மேகங்கள் தடுத்து நின்றன. சிறிது நேரத்திற்குள் கூலிக்காரர் கள்பரபரப்புடன் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். மேலே கப்பித்தான் மணியை அடிக் கடி அடிக்கத் தொடங்கினன். புயல் வரவர அதிகரிக்கத் தொடங் கியது. பெரும் புயலுக்கான அறி குறிகள் தென்பட்டன. இருண்ட மேகங்களும், சீறிக் கிளம்பும் கடலலைகளும் புயல் வரும் என் பதை கப்பித்தான் முதற்கொண்டு காமினியம்மாள் வரையிலும் சக லருக்கும் தெரியப் படுத்தின.

அப்போது அங்கே கூலிக்காரன் வந்து திவாகரிடம், "பாபு மழை வரப்போகிறது. இங்கே ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? உள்ளே போங்கள். அங்கே என்ன நடக்கிறது பாருங்கள்!" என்றான்.

திவாகர் ஆவலுடன், "அங்கே என்ன நடக்கிறது?" என்றான்.

அவன் சிரித்துக்கொண்டு, "ஒன்றுமில்லை, கப்பல் ஆடுகிறது. பெண்களைப் போய்ப் பாருங்கள் என்றேன். இந்த ஆட்டத்தைச் சமாளிப்பது கஷ்டம்" என்றான்.

திவாகர் எழுந்து நின்று கொண்டான். அவன் கூறுவது உண்மை என்று பட்டது. நின்றவுடன் விழப் போனான். வேலைக்காரன் அவனைப் பிடித்துக் கொண்டு, "வாருங்கள் பாபுஜி" என்று அவனை அழைத்துவந்து அறைக்கு முன்னால் விட்டான். திவாகர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய்ப் பார்த்தான். கிரணமயி ஒரு பெஞ்சியை இறுகப் பிடித்துக்கொண்டு படுத்துக்கொண்டு இருந்தாள் திவாகர் மெதுவாக அவளருகில் சென்று உட்கார்ந்து கொண்டு, "அதிக சிரமமாக இருக்கிறதா மன்னி?" என்றான். கிரணமயி ஒன்றும் பேசவில்லை மௌனமாக அவனது துடையின் மீது கையை வைத்து அழுத்தினாள். கப்பல் அங்கும் இங்கும் ஆடத் தொடங்கியது. வெளியில் காற்று 'விர் விர்' என பலமாக அடித்தது. கடலலைகள் உக்கிரத் தாண்டவம் ஆடின. நீர்த் திவலைகள் வேகமாய் மூடியிருந்த ஜன்னல் கண்ணாடியில் வந்து மோதின. இந்தச் சிறிய அறையில் இன்னும் இருள் நிறைந்திருந்தது. நேற்று இரவு விரித்திருந்த படுக்கை அப்படியே கிடந்தது. திடீரென, கடந்த இரவு நடந்த சம்பவங்கள் அவன் நினைவிற்கு வந்தன. அவன் தலை சுழன்றது. உட்கார்ந்திருக்கவே முடியவில்லை. அதே இடத்தில் கிரணமயினுடைய தலையருகில் தன் தலையை வைத்து மயக்கம் அடைந்தவன் போலப் படுத்துக் கொண்டான்.

கிரணமயி அவனுடைய நெற்றியைப் பிடித்துக்கொண்டு, "படுத்துக் கொண்டாயா? தலை சுற்றுகிறதா?" என்றாள்.

திவாகர், "ஆம்" என்றான்.

கிரணமயி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, "சரி பாபு, புயல் கடுமையாகிக் கொண்டே வருகிறதே, கப்பல் மூழ்கிவிடும் என்று நினைக்கிறீர்களா?" என்றாள்.

"இல்லை."

"மறுபடிம் அந்த 'இல்லை.' கச்சேரியில் சாக்ஷி சொல்வது போலல்லவா பதிலளிக்கிறாய்?" என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் பேசாமலிருந்தாள். பிறகு, "கப்பல் மூழ்கா விட்டால் இப்படியே எத்தனை நாளைக் கழிப்பது?" என்றாள். திவாகர் பதிலளிக்காததைக் கண்டு, "நான் சொல்வதைக் கேட்கிறாயா?" என்றாள்.

"கேட்டுக்கொண்டு தானிருக்கிறேன். ஆகிற நாள் ஆகட்டும்."

"அதற்கப்புறம்?"

"அதற்கப்புறம் சமுத்திர ஜலம் இருக்கவே இருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு முழக் கயிறு கூட கிடைக்காமலா போய் விடும்? இவை இரண்டில் ஏதோ ஒன்று உதவும்."

இவ்வளவு நேரம் கழித்து திவாகர் வாய் திறந்து மிகக் கசப்பாகப் பேசியதைக் கேட்டு கிரணமயி, "வேண்டம், அப்படி ஒன்றும் செய்ய வேண்டாம். வீட்டுக்குத் திரும்பிப் போய் விடு. நீ ஆண் பிள்ளை யானதினுல் பரவாயில்லை. உனது சுற்றத்தார்கள் இதை வைத்துக்கொண்டு பிரமாதப் படுத்துவார்கள் என்று நான் நினைக்கவில்லை" என்ருள்.

திவாகர் பேசாமலிருந்தான். அவள் கூறியதை அவனுல் ஒப்புக் கொள்ள முடியவில்லை. வெகு நேரம் பேசாமலிருந்து விட்டு, "ஆனுல் நீ?" என்ருன்.

கிரணமயி மிகவும் சாந்தமாக, "நானு? நான் இப்போது போகுமிடத்திலேயே இருந்து கொள்கிறேன்" என்ருள்.

திவாகர் சந்தேகமடைந்தான். "எப்படி இருந்து கொள்வாய், மன்னி? அங்கே யார் இருக்கிருர்கள்?" என்ருன்.

"யாருமில்லை."

"அப்புறம்?"

"அப்புறமும் இருந்துதான் ஆக வேண்டும்."

"நன்ருய் விபரமாகச் சொல்லு மன்னி? ஒருவரும் அங்கு இல்லை என்கிருய்; பின் அங்கு ஏன் போகிருய்? அங்கு தனியாகவே இருப்பாயா?"

கிரணமயி புன் சிரிப்புக் கொண்டாள். அந்தச் சிரிப்பை திவாகர் கவனிக்கவில்லை. பார்த்திருந்தால் திகைப்படைந்திருப்பான். பிறகு மெதுவாக, "இல்லை பாபு, தனியாக அல்ல. என் வயது அதற்குத் தகுந்ததல்ல. நீ இவைகளை எல்லாம் எதற்காகக் கேட்கிருய்?" என்று கூறி திவாகருடைய கையைப் பிடித்துக்கொண்டு, "உன்னை நான் வீணுகத் தொந்தரவு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு" என்ருள்.

திவாகர் மௌனமாகப் படுத்துக் கொண்டிருந்தான். விஷயங்கள் ஒன்றும் அவனுக்கு நன்கு புரியவில்லை. இருண்ட வழியிலே, வீட்டுக்குத் திரும்பிப் போகலாம் எனக் காட்டிய தீபத்தையும் அணைக்க வேண்டிய சமயம் வந்து விட்டதை உணர்ந்தான். தீபம் அணைந்தாலும் பரவாயில்லை. ஆனுல் அது அணையும்போது எழும் துாக்கந்தத்தை நினைக்கவும் உள்ளம் நடுங்கியது. எழுந்து உட்கார்ந்து கொண்டு, "இதுவரையிலும் ஏன் என்னிடத்தில் இம்மாதிரி வேடிக்கை செய்தாய்?" என்ருன்.

அவன் கூறியதைக் கேட்டு கிரணமயி திடுக்கிட்டாள். "வேடிக்கை என்ன பாபு?" என்ருள்.

"என்னை வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி சொல்லி ஏமாற்றவில்லை?"

"இதில் ஏமாற்று என்ன?"

"ஆனுல் இது உண்மைதானு?"

"உண்மைதான்."

"நீ தனியாக இருப்பதும் உண்மைதானு?"

"அதுவும் உண்மைதான்."

"ஆ! அற்குத்தான் ஆராகான் போகிருயோ? சரி; யாரிடத்தில் என்ன ரூபமாய் இருப்பாய்?"

கிரணமயி ஒன்றும் பேசாமல் பெரு மூச்சு விட்டாள். இப்படி விட்டுப் போய் விடுவது என்பது திவாகருக்கு மிகக் கஷ்டமான

காரியம் என்பது கிரணமயிக்குத் தெரியாமலில்லை. இந்த மகத்தான துக்கத்தால் அவன் மனம் என்ன பாடு பாடுகிறது என்பதும் அவளுக்குத் தெரியும். திவாகரை அவள் காதலித்ததில்லை. காதலிக்கவும் முடியாது. அவனுடைய உதாசீனத்தினல் இது வரையில் அவள் மனே வேதனை யடைந்திருந்தாள். இது மிகவும் ஆச்சரியமாகத் தானிருக்கிறது.

திவாகர் கேட்ட கேள்வியில் ஒளிந்து கொண்டிருந்த வேதனை தெரிந்தவுடனே கிரணமயினுடைய மனக்கலக்கம் வெளிப்பட்டது. இந்த மனே பாவத்திற்குக் காரணமுமிருந்தது. இந்த அனுபவமற்ற இளைஞனுக்கு தன் மேல் நாளுக்கு நாள் கவர்ச்சி ஏற்படுகிறது என்பதைத் தெரிந்தும் தெரியாதவள் போலிருந்தாள். சிறிது சிறிதாகச் சேரும் தேன் துளிகளை அலட்சியம் செய்திருந்தாள். ஆனல் இன்று அந்த் தேன் துளிகள் உலர்ந்து போன பிறகு மனித சக்திகளை எல்லாம் ஒன்று சேந்த்துச் சிரித்துக் கொண்டு, "நான் யாரிடத்தில் எப்படி இருந்தால்தான் உனக்கென்ன? திரும்பிப் போகிறது என்று முடிவு கட்டினதிற் கப்புறம் இந்த அர்த்த மற்ற கேள்விகளை எல்லாம் ஏன் கேட்கிருய்'' என்ருள்.

திவாகர் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். அதற்கப்புறம், "திரும்பிப்போவதாக நான் ஒருக்காலும் சொல்லவில்லையே! நீதான் திரும்பிப் போகச் சொன்னுய். நான் சொல்லவில்லை'' என்ருன்.

"அது உண்மைதான் ஆனல், உன் மனதிலுள்ளதை நான் சொன்னேன்'' என்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்த்தாள். ஆனல் பதிலைக்காணேம். கிரணமயி அவன் யோசிக்கட்டும் என்று பேசாமல் இருந்து கொண்டாள். சிறிது நேரம் ஆயிற்று. புயல் மழையால் கப்பல் ஆட்டம் கொடுத்தது. கூலிக்காரர்களின் சத்தமும் அடிக்கடி கேட்கத் தொடங்கியது. கிரணமயிக்கும் சிறிது கலக்கம் உண்டாயிற்று. ஆனல் அந்தச் சின்னஞ் சிறு அறைமட்டும் அமைதி கலையாமல் இருந்தது.

திவாகர் ஒன்றும் தர்க்கம் செய்யமாட்டான் என்று உணர்ந்த கிரணமயி மெள்ள "சரி, அப்படியானல் நீ திரும்பிப் போவது நிச்சயம் தானே?'' என்ருள்.

"இல்லை''

கிரணமயி வேறு ஒன்றும் கேட்கவில்லை. மெதுவாக அவன் தோளின்மேல் கையை வைத்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

அத்தியாயம் முப்பத்தாறு

அன்று இரவு புயல்க் காற்று ஓய்வடைந்தது. கடலின் கொந்தளிப்பும் அடங்கி காலையில் அமைதி அடைந்தது. ஆனல் ஆகாயம் நிர்மலமடையவில்லை. மேகங்கள் மூடுண்டுதானிருந்தன.

காலையில் கொஞ்ச நேரம் சூரியன் வெளியே தலையைக் காட்டிவிட்டு மறுபடியும் மறைந்து கொண்டான்.

திவாகர் வெளியில் வந்து ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டான். மனே வேதனை முன்போல இன்று அவ்வளவு அதிகமாகப் பாதிக்கவில்லை. தூரத்திலே கரை தென்படுவதுபோல்

தோன்றியது. மனேவேதனை சிறிது மட்டுப்படவே திவாகர் மறுபடி ஒருதரம் கிரணமயி கூறியதைச் சிந்தனை செய்து பார்க்கத் தொடங்கினன்.

"பிறருடைய நியாயமான உரிமைகளில் நாம் தலையிடுவதுதான் உண்மையில் தீமை செய்வதாகும். ஆகையால் நாம் ஒரு காரியம் செய்ய முற்படுமுன் பிறருடைய உரிமையில் நாம் தலையிடுகிறேமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனக்கு என்று சில உரிமைகளிருக்கின்றன. தனது உரிமைகள் என்பதால் மாசுடையதாய் விடாது. அந்த உரிமைகளை விட்டுக் கொடுப்பது என்பது தனக்குத்தானே தீங்கு செய்து கொள்வதாகும்" என்று கிரணமயி கடந்த இரவு தர்க்கம் செய்தாள்.

சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு அவள் மறுபடியும் "திருடன் பிறருடைய உரிமைகளில் பிரவேசித்துத் தீங்கு செய்கிருன். குடிகாரனுக்குப் பணம் கொடுப்பதும் தீங்குதான். ஏனென்ருல் பணம்கொடுத்து அவனைக் குழியில் தள்ளுகிறேம். நன்ருக வாழும் உரிமையிலிருந்து அவனைக் கெடுக்கிறேம்" என்று கூறினுள்.

திவாகர் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். இதைப் பார்த்துக் கிரணமயி, "மனிதனுக்கு இதைப்பற்றி பல சந்தேகங்கள் உண்டு. உரிமைகள் விஷயத்தில் அபிப்பிராய பேதமுண்டு. ஆனல் இதற்கும் ஒரு எல்லை உண்டு என்பதில் யாருக்குமே சந்தேகமில்லை. ஆனல் இந்த எல்லையைத் தாண்டுவதற்குத் தனி மனிதனுக்கோ சமூகத்திற்கோ துணிச்சல் கிடையாது. சமூகம் இந்த எல்லையைக் கடந்த பிறகும் தனக்குத் துன்பத்தை விளைவித்துக் கொள்கிறது. நாம் யாருடைய நியாயமான உரிமையிலாவது தலையிட்டோமா என்று ஒரு கணம் நீ யோசித்துப் பார்த்தாயானல் இப்படி வருத்தப்படவே மாட்டாய். நான் விதவை; என்மேல் யாருக்கும் அதிகாரம் கிடையாது. நீயும் கலியாணமாகாதவன். உன் பேரிலும் யாருக்கும் உண்மையான அதிகாரம் கிடையாது. என்னைக் காதலிப்பதால் நீ யாருக்கும் தீமை செய்யவில்லை. இதைப் புரிந்து கொள்வது கஷ்டமானதல்ல; சுலபமானது" என்ருள்.

திவாகர் ஆச்சரியத்துடன் "இது என்ன மன்னி? அதர்மமான கர்தல் அநியாயமல்லவானல் உலகத்தில் அநியாயம்தான் என்ன?" என்ருன்.

"எதற்காக அதர்மம் என்று கருதுகிருய்? அப்படிக் கருதுவதற்கு உனக்குக் கல்வி போதாது. சரி, இதை ஏன் நீ அதர்மமாகக் கருதுகிருய்?"

திவாகர் கோபத்துடன் "புனிதமான விவாகமல்லாததை சமூகம் ஒப்புக் கொள்ளாது. நண்பர்களும் உறவினர்களும் வெறுப்பார்கள். இதுதான் அதர்மம். இது நன்கு தெரியக்கூடிய எளிதான விஷயம்" என்ருன்.

கிரணமயி சிரித்துக் கொண்டு, "இது எளிதில் விளங்கக்கூடிய விஷயமா? எளிய விஷயங்கூட சில சமயங்களில் கடினமான விஷயமாகப் போய்விடும். என்பதைச் சிறிது யோசித்துப் பார்த்தாலே தெரியவரும். புனிதமற்றது என்பதைக் கண்டு கொள்ளுவதற்குப் போதிய அறிவு உனக்குக் கிடையாது என்பதை அநேக தரம் கூறியிருக்கிறேன். உலகத்திலே இம்மாதிரி அனேக ஆண் பெண்கள் சேர்ந்திருக்கிருர்கள்.

நீ அவர்களையெல்லாம் புனிதமற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. உனக்கு உதாரணங்கள் காட்டிப் பேச்சை வளர்த்திக் கொண்டுபோக எனக்கு இஷ்டமில்லை. வேண்டுமானல் புராணங்களைப் படித்துக்கொள். அம்மாதிரி சேர்க்கைகளை யெல்லாம் சமூகம் ஒப்புக் கொண்டது. மேலும் கல்யாண மந்திரங்களால் அவர்கள் புனிதமாக்கப் பட்டார்கள். நமது பதரியா கட்டத்து வீட்டருகில் கண்வமுனியின் ஆஸ்ரமம் இருந்திருந்தால் சகுந்தலையின் ரகசியக் காதலுக்காக ரிஷிகள் மட்டுமல்ல பதரியா கட்டத்து வாசிகள் அனைவருமே சாதியை விட்டுப் போயிருக்க வேண்டுமே! அந்தக் காதல் நாடகத்தைப் படித்து எத்தனை பெண்கள் வெட்கப்படுகிறார்கள்?

"இல்லை, இல்லை, பயப்படாதே! நான் மற்ற பெண்களைத் தூஷிக்கவில்லை. இந்தக் காலத்தையும் அந்தக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் இல்லை. இந்தக் காலம் இப்படியே இருக்கட்டும். இவர்களும் இருந்த இடத்திலேயே இருக்கட்டும். எனக்கு இவர்களைப் பற்றிக்கவலை இல்லை. ஆனல் அந்தக் காலத்து சகுந்தலையை இக்காலத்தவர்கள் ஏன் வெறுப்பதில்லை? இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்றாள்.

சிறிதுநேரம் மவுனமாக இருந்துவிட்டு "ஏன் ஜனங்கள் வெறுப்பதில்லை தெரியுமா? அவர்களுடைய சந்திப்பு எப்படியிருந்தாலும் சரி. ஆனல் அதனுடைய ஆதர்சத்தை அவர்கள் குலைக்காமல் வைத்திருந்தார்கள். கண நேரத்தில் தங்களை ஒன்று சேர்த்த அந்தப் பந்தத்தை பலப்படுத்துவதற்காக எவ்வித சந்தேகத்தையும், நாணத்தையும் விட்டு வைக்க வில்லை. ஒருக்கால் அவர்கள் வெட்கப்பட்டு உண்மையை மறைத்திருந்தால் அந்தக் கதையை எவ்வளவு இனிமை உள்ளதாக எழுதியிருந்தாலும் அது யாருடைய உள்ளத்தையும் கவர்ந்திருக்காது. உண்மை எதுவோ அதை நன்கு சிந்தித்துப் பார்" என்றாள்.

திவாகருக்கு இந்த வார்த்தை ஒன்றும் பிடிக்க வில்லை. அவன் பொறுமை இழந்து "ஆதர்சம் என்னவாகவோ இருந்து விட்டுப் போகட்டும். இன்றைய சமூகம் அதை ஒரு நாளும் ஒத்துக் கொள்ளாது. தர்மமானலும், அதர்மமானலும் அதால் தீமைதான் விளையும். சமூகத்தில் இருந்து கொண்டு சமூகத்திற்கே தீமை விளைவிப்பது தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும்" என்றான்.

"பாபு, சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பதும், சமூக சட்டங்களுக்குத் தீங்குவிளைவிப்பதும் ஒன்றாகாது. சகல பொருள்களுக்கும் ஒரு உண்மையான அதிகாரம் இருக்கிறது என்று பல தடவை உன்னிடம் கூறியிருக்கிறேன். சமூகம் சத்தியத்தை மீறினல் துன்பமடைந்துதான் ஆக வேண்டும். அந்தத் துன்பத்தினல் சமூகம் இறந்து விடுவதில்லை அதனுடைய கண் திறக்கப்படுகிறது. கல்வி கற்பதற்காகவோ அல்லது சுற்றுப் பிரயாணத்திற்காகவோ அயல் நாடு செல்வதை சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லையா? இது சம்பந்தமாக பல தடவை துன்பப் பட்டிருக்கிறதே. அதனல் பிராணன் போய்விட வில்லையே! சமூகத்தில் புத்திசாலித் தனத்தைக் கண்டு நீ சந்தோஷம் அடைகிறாயா? நீ அதனுடைய அறிவை நன்கு அறிந்து கொண்டாயா?'

"இல்லை எனக்குத் தெரியாது. நன்கு தெரிவதற்கு ஒரு வழியும் இல்லை"

"நிச்சயமாகக் கிடையாதா? தன் புத்தியினுல்கூட முடியாதா?"

"எல்லோரும் எல்லா விஷயத்துக்கும் தங்கள் புத்தியின்படி போனுர்களேயானுல் சமூகம் இருக்க முடியாது"

"நானும் இதைத்தான் உன்னிடம் சொல்ல வந்தேன். எந்தக் காரியத்திற்கும் தன் புத்தியின் படியே நடப்பதென்ருல் சமூகம் இருக்காது. அது போலவே, எல்லா சமயத்திலும், எல்லாக் காரியத்திலும் சமூகம் தன் இஷ்டப் படியே நடப்பதென்ருல் மனிதனும் இருக்க முடியாது. மனிதனுக்குத் தவறு செய்ய முடியும், அநியாயம் புரியத் தெரியும். சமூகத்திற்கு இதுஒன்றும் தெரியாதா? இரண்டிற்கும் எல்லை நியமிக்கப் பட்டிருக்கிறது. அறிவின்மையினுலோ அல்லது கீழான உணர்ச்சியினுலோ அந்த எல்லையை மீறினுல் அதிருப்தி ஏற்படுகிறது. அந்த அதிருப்தியை உனது கடவுளால்க் கூடத் தடுக்க முடியாது."

திவாகர் ஒன்றும் பேசவில்லை. கிரணமயி சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு, "இந்த எல்லை எந்த சமூகத்திலும் ஒரே இடத்தில் நிலைத்து நிற்பதில்லை. அவசியத்தை முன்னிட்டு மாறிக்கொண்டே போகும்" என்ருள்.

"அதை யார் மாற்றுகிருர்கள்?"

"எந்த நியதியினுல் இந்த உலகம் நடக்கிறதோ! அந்த நியதிதான் இந்த எல்லையை மாற்றுகிறது. அது மாற்றுகிறதா? இல்லையா என்பது அதை யாராவது எதிர்க்கும்போதுதான் தெரியவரும்"

இது வரையிலும் கிரணமயி கூறியவைகளெல்லாம் ஓடி வந்ததிற்கு அனுகூலமான வாதங்களாகவே இருந்தன. இருந்தாலும் மனதில் துக்கம் இருந்து கொண்டு தான் இருந்தது. இந்தக் காரியம் கெட்டதென்பதில்அவனுக்குச் சந்தேகம் இல்லை. எல்லாக் குற்றத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தான். ஆனுல் அந்த கர்வம் பிடித்த பெண் இவ்வளவு பெரிய குற்றத்தையும் பொருள் படுத்தாமல் சமூகத்தின்மேல் குற்றத்தைச் சுமத்துவதைக் கண்டு அவனுல் ஒன்றும் கடுமையாகக் கூற முடியவில்லை. ஆகையால் அவன் மிகவும் சாந்தமாக "சரி நம்மால் சமூகம் எவ்வளவு தூரம் விழிக்கிறதோ, கர்வபங்கம் அடைகிறதோ, பார்க்கலாம்" என்ருன்.

இதைக் கேட்டுக் கிரணமயி சிறிது நேரம் பேசாமலிருந்தாள். பிறகு அவன் எதிரில் உட்கார்ந்து கொண்டு "நாம் எங்கு தீங்கு இழைத்தோம்? பயந்து கொண்டு விலகி நின்று கொள்வதும், விலகி இருந்து கொண்டு தீங்கு விளைவிப்பதும் இரண்டும் ஒன்ருகுமா? நீயும் பீ. ஏ. வரையிலும் படித்திருக்கிருயல்லவா?" என்ருள். பிறகு அவள் தலையிலிருந்து கால் வரையிலும் போர்வையை எடுத்துப் போர்த்திப் படுத்துக் கொண்டாள்.

ஆனுல் விவாதத்தை இவ்விதம் தடுக்க முடியாதல்லவா? அது உள்ளத்திலேயே சதா சஞ்சரித்துக் கொண்டுதானே இருக்கும்? உடனே அது வெளிப்பட்டுத்தான் தீரும். அப்படித்தான் நடந்தது. இந்தத் தடைபட்ட தர்க்கம் கிரணமயின் உள்ளத்தில்மட்டும் சஞ்சரித்துக் கொண்டிருக்க வில்லை. திவா

கர் உள்ளத்திலும் பெருத்த புயலைக் கிளப்பி விட்டிருந்தது. முக்கியமாக கிரணமயி கடைசியாகக் கூறிய 'நீயும் பீ. ஏ. வரையிலும் படித்திருக்கிருயல்லவா?' என்ற வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

அவன் எப்போதும் படித்தவன் என்று கர்வப் பட்டுக் கொண்டதில்லை. ஆனல் கிரணமயி கூறிய வார்த்தைகளால் கோபமடைந்தான். இருந்தாலும் எந்த விதம் சண்டைக்கு வழி கோலுவது என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். அதோடு இன்னொரு விஷயமும்கூட. இந்த இரண்டு நாளைய பேச்சு வார்த்தைகளினல் அவனுக்குப் பிராணன் போய்விடும் போலிருந்தது. மனதில் கொஞ்சம்கூட நிம்மதி கிடையாது. எங்கும் போவதற்கு வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தபோது கூலிக்காரன் கொண்டு வந்து அறைக்கு முன் விட்டபோது அவன் உள்ளம் அவன் வசத்திலிருக்கவில்லை. அதோடு இந்த வாதப் பிரதிவாதங்களும் சேர்ந்து அவன் மூளையை நன்கு கலக்கி விட்டன.

வெளியில் அடிக்கும் புயலின் சப்தத்தையும் கிழித்துக் கொண்டு கப்பலில் மணி பனிரண்டடிக்கும் ஓசை எழுந்தது. திவாகர் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

திடீரெனக் 'கிரணமயி' 'பாபு' எனக் கூப்பிடுவதைக் கேட்டு திவாகர் திடுக்கிட்டு விட்டான். இதயத்திலே பயமும், நம்பிக்கையும் நடமாடின. "என் மன்னி?" என்ருன்.

"நீ திரும்பிப் போய் விடு"

திவாகர் பலமாக "ஒருக்காலும் முடியாது" என்ருன்.

"என் முடியாது? முன் பின் யோசியாமல் ஒரு காரியத்தைச் செய்து விட்டு அதன் பலனை வாழ் நாள் முழுதும் அனுபவிப்பதா? அது கூடாது"

"உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். திரும்பிப் போவதால் அந்தப் பாரம் என் தலையிலிருந்து இறங்கி விடாது."

"இன்றே இறங்கி விடுமென்று நான் சொல்லவில்லை. ஆனல் நாளாக நாளாக இறங்கி விடலாம்"

"ஆனல் எங்குதான் போவது?"

"உனது வீட்டிற்கு. உனது உறவினர்களிடம். உனது உபேந்திர அண்ணவிடம் போவது. எல்லோரும் உன்னைச் சேர்ந்தவர்கள்தானே?"

"அவர்கள் எல்லாம் என்னைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது உனக்கே தெரியும். உபேந்திர அண்ணதான் இருக்கிருர். அவரிடம் என்னை நீ திரும்பிப் போகச் சொல்கிருயா?" என்ருன். அவன் பேசி நிறுத்தியதும் பயத்தால் அவன் உள்ளம் நடுங்கியது. கிரணமயி அதை அறிந்தாள். மனதிற்குள்ளாகவே குரூரமாகச் சிரித்துக் கொண்டு, "சரி, அவரிடமே திரும்பிப் போவது" என்ருள்.

திவாகர் சிறிது நேரம் பேசாமலிருந்தான். அதற்கப்புறம் மெதுவாக "உனக்கு அவரைப் பற்றி நன்கு தெரியாது. எனக்கும் தெரியாது. அவரை யாருமே நன்கு அறிய முடியாது போலும். ஆனலும் சிறு வயதிலிருந்து அவருடைய பராமரிப்பில் இருந்ததினல் எனக்குக் கொஞ்சம் அவரைப் பற்றித் தெரியும். அவர்

முன்னல் போய் நிற்பதைவிட தீக்குளிப்பதுமேல்,' என்ருன்.

கிரணமயி திடுக்கிட்டாள். திவாகரிடம், "அவர் அவ்வளவு கொடூரமானவரா? இதில் உன் மீது தப்பில்லை என்பதைத் தெளிவு படுத்தினலும் அவர் உன்னைத் தண்டிப்பாரா? அப்படி ஒருக்காலும் செய்ய மாட்டார்" என்ருள்.

கிரணமயியை அவன் கவனிக்க வில்லை. சுவரில் மாட்டியிருந்த விளக்கைப் பார்த்துக் கொண்டு "அவருக்கு ஒன்றும் தெளிவு படுத்திச் சொல்ல வேண்டியதில்லை அவர் அனைத்தையும் தெரிந்து கொள்வார். நான் செய்த காரியத்தில் என்மீது தப்பில்லைஎன்று உன்னைப் போல என்னல் நினைக்க முடியவில்லை. நீ கூறுவதே உண்மையாக இருந்து, நான் குற்றவாளியல்லாதவனக இருந்தால் எப்பொழுதாவது ஒரு நாளைக்கு அவரிடம் போகும்போது அவரே அதைத் தெரிந்து கொள்வார். அன்று என்னைப் பற்றி நிச்சயமாக அறிவார்கள். நீ தண்டனையைப் பற்றிக் குறிப்பிட்டாய். அவர் என்ன தண்டனை அளிப்பார் என்று எனக்கு எப்படித் தெரியும் மன்னி? அவர் எப்போதும் தண்டித்ததில்லை. அன்று.........." அதற்குமேல் அவனல் பேச முடியவில்லை. இரு கண்களிலிருந்தும் கண்ணீர் உதிர்ந்தது.

கிரணமயி ஒன்றும் பேசவில்லை. திவாகரையே விழித்தகண் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தின் கொதிப்பை ஆண்டவன்தான் அறிவான்.

மறுபடியும் திவாகர் மிகுந்த வேதனையுடன் சொல்லத் தொடங்கினன். "மனதிலுள்ளதை என்றும் தெளிவாக நான் கூறியதில்லை; இன்றும் கூறமுடியாது. ஆனல் அவர்பேச்சை மட்டும் எடுக்காதே என்று உன்னை வேண்டிக் கொள்கிறேன். நான் சகலத்தையும் பொறுத்துக் கொள்வேன். ஆனல் அவரைப் பற்றிய விஷயத்தை எப்படிப் பொறுப்பேன்? இரண்டு நாளாக அவரைப் பற்றித்தான் யோசித்துக்கொண் டிருக்கிறேன். நாம் கல்கத்தாவிலிருந்து வந்த அன்று அவர் என் அறைக்குமுன் நின்றுகொண்டு "நீ புத்தகங்கள் எல்லாம் வாங்கிவிட்டாயா?" என்ருர். நான் 'ஆம்' என்றேன். அதற்கு அவர் "ஜாக்கிரதையாக இரு. எது வேண்டுமானலும் உடனே எனக்கு எழுது; தெரிந்ததா!" என்று கூறி ஒரு கத்தை நோட்டுக்களை என்முன் வீசி எறிந்துவிட்டுப் போனர்."

சிறிதுநேரம் பேசாமலிருந்து விட்டு மறுபடியும், "இதனல்தான் நான் யோசிக்கிறேன். நான் அவருக்கு அளித்துள்ள தண்டனையைப் பார்க்கும்போது அவர் கொடுக்கக் கூடியது இதற்குக் குறைவாகத் தான் இருக்கும்" என்ருன்.

திவாகரின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. விளக்கு வெளிச்சத்தில் அவைகள் நன்கு பிரகாசித்தன. கிரணமயி கற்சிலை போல மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். திவாகர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "நேற்று நீ 'உபேந்திர அண்ணவை தலை குனியச்செய்வேன்' என்று சொன்னய். அன்று இரவு என்ன பேசிக்கொண்டிருந்தீர்களோ, எதனல் நீ அப்படிக்கூறினயோ இதைப் பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. உன் எண்ணம் என்னவானலும் சரி தலை குனிய நேரிடும்போது எத்தகைய

துக்கம் உண்டாகும் என்பது உனக்குத் தெரிந்திருந்தால் நீ இம் மாதிரி கூறியிருக்கமாட்டாய். அவர் தலை குனிவதால் நாம் தலை நிமிர்ந்து விட முடியுமா? நீ அந்த முயற்சியை விட்டு விடு. அவர் நம்மைப் பொருட் படுத்தாத வரையிலும் அவரை யாரும் அவமானப் படுத்த முடியாது.'' என்றான்.

இவைகள் ஒன்றும் கூறத் தேவையே இல்லை. கிரணமயி எல்லாவற்றையும் அறிவாள். ஆகையால் தான் இதுவரையிலும் அவன் கூறுவதை மவுனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தாள். அவன் கூறிமுடிந்ததும் அவள் கனவு கலைந்தவள்போல, "அவரிடம் அவ்வளவு பக்தி இருக்கிறதா?'' என்றாள்.

பக்தி! இது எவ்வளவு அற்பமான கேள்வி! திவாகர் மயக்கமடைந்தவன்போல கிரணமயினுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு, "எல்லோரும் தான் அவரிடம் பக்தியுடன் இருக்கிறார்கள்.'' என்றான்.

அதற்கப்புறம் சம்பாஷணை முடிந்தது. சகலவிதமான வாதப் பிரதிவாதங்களும், சமூகம், உலகம், சுக துக்கங்கள் யாவுமே முடிவடைந்து விட்டன போல் தோன்றியது.

இந்த இரு ஜீவன்களும் அந்த நள்ளிரவில் விருப்பு, வெறுப்பற்ற ஒரு உன்னத நிலை அடைந்தார்கள். அங்கே புத்தியை விட அனுபவத்தைத்தான் முக்கியமாகக் கருதப் பட்டது. அங்கே பேசுவார்கள் இல்லை. அந்த இடத்திற்கு வந்து தங்கள் ஆசா பாசங்களுடன் அமைதி யடைந்தார்கள்.

அதிகாலையில் திவாகர் நித்திரை கலைந்தது. கடந்த இரவு போலவே கிரணமயினுடைய ஒரு கரம் அவன் மார்பு மேல் கிடந்தது. என்ன இருந்தாலும் அது ஒரு பூமாலை கிடப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்பட வில்லை. ஆனாலும் நேற்றுப்போல ஒரு கருநாகத்தைப் போலவும் காக்ஷி யளிக்கவில்லை. அவன் படுக்கைவிட்டு எழுந்து வரும்போது மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் அக்கரத்தை எடுத்து, படுக்கைமீது வைத்து விட்டு வந்தான்.

திவாகர் காலையில் படுக்கையை விட்டு எழுந்து போனது கிரணமயிக்குத் தெரியாது. ஆகையால் அவள் காலையில் கண் விழித்ததும் திவாகருக்காக வருத்தப் பட்டாள். கடந்த இரவு சம்பாஷணையால் கிரணமயி எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொண்டாள். திவாகர் உண்மையிலேயே எவ்வளவு நிராதரவாக இருக்கிறான்; உபேந்திரனை விட்டுப் பிரிந்ததால் எவ்வளவு துக்கப்படுகிறான் என்பதை அறியவே அவள் மிகுந்த துக்கமடைந்தாள். இந்தக் கள்ளங்கபடற்ற வாலிபனின் பிரம்மச்சரியத்தைக் கெடுத்த குற்றத்தை எண்ணி வேதனை அடைந்தாள். ஆகையால் படுக்கையை விட்டு எழும்போது அந்த அபாக்கியவானின் மீது புதியதொரு வாஞ்சையுடன் எழுந்தாள். ஆனால் திவாகரைக் காணவில்லை. கப்பல் வேலைக்காரனைக் கூப்பிட்டு தேடச் சொன்னாள். ஆனால் அவனாலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

கிரணமயி மிகுந்த ஆவலுடன் அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். எங்கோ தொலைவிலிருந்து மந்தமாருதத்துடன் கலந்து வரும் பரிமள சுகம்

போல அவள் எதிர்பார்த்ததில் ஒரு ஆனந்தம் கலந்திருந்தது,

ஒருநாளும் காதலிக்காத, என் மனத்தால் கூட காதலிக்காத அந்த திவாகருடன், புத்திக் கோளாறுல் அவனுடன் ஏன் குடித்தனம் செய்யவேண்டும்? ஏன் காதல் நடிப்பு நடிக்கவேண்டும்? கப்பலில் ஏறியதிலிருந்து இந்தத் துக்கம் அவள் மனதை வதைத்து வந்தது.

இந்தத் துக்கம் இதோடு முடிவடைந்து விடப் போவதில்லை. ஒரு நாளைக்கு இந்தப் போலிக் காதல் வெளிப்பட்டுவிடும். டாக்டர் அனங்கமோஹன் இந்தப் பாடத்தை நன்கு போதித்திருந்தார். அந்தக் கெட்ட காலத்தில், இவளைச் சூழப்போகும் கொடிய விபத்தை எப்படிப் போக்குவது என்பதைப் பற்றியே சதா சிந்தித்து வந்தாள். கடந்த இருண்ட இரவிலே இருவரும் ஒரு முடிவிற்கு வந்தபோது அந்த இளைஞனிடம் இவளுக்கு ஏற்பட்ட பச்சாதாபத்தை வர்ணிக்கமுடியாது.

தன்னந்தனியாக அந்த அறையில் உட்கார்ந்து கொண்டு அவள் வாய்திறந்து, "இனி எனக்கு ஒரு பயமும் கிடையாது. நான் காதலிக்காதவனைக்கூட இனி அன்புடன் நேசித்து அவனுடைய மனக்குறையைப் போக்குவேன்" என்று சொல்லிக் கொண்டாள். இத்துயரத்தைச் சகிக்க முடியாமல் திவாகர் பிராணனை விட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவள் உள்ளத்தில் குடி கொண்டது.

அவளுக்குத் தனது கணவனது நினைவு ஞாபகத்திற்கு வந்தது. சதா எவ்வளவுபத்திரமாக அறைக்குள் அடைத்து வைத்து அவளைக் காப்பாற்றி வந்தார்! அவரிடம் அவள் ஒருநாள்கூட அணுகியதில்லை. அப்போதும் நாள் கழிந்து கொண்டுதானிருந்தது. எழுதுவது, படிப்பது, சமையல் செய்வது, மாமியாரின் திட்டுகளை ஏற்றுக்கொள்வது, முதலிய இவைகளிலேயே பகல் கழியும். இரவு ஆத்மாவுடன் போராடி, உள்ளத்தை அமுக்கிப் பிடித்துக் களைத்துப் போய் எப்படியோ தூங்கி விடுவாள். பிறகு அதிகாலையில் எழுந்திருப்பது. மறுபடியும் இரவு வரும். இப்படியே பல மாதங்களும் பல வருஷங்களும் கழிந்தன. ஒரு பிச்சைக்காரிகூட வாசலுக்கு பிச்சைக்கு வந்ததில்லை. எப்படி இருக்கிறாய்? என்று ஒரு அண்டை அயலார் கூட கேட்டதில்லை. ஒரு நாளும் சூரிய கிரணம் அவ்வீட்டைத் தொடவில்லை. ஒருநாளும் வழி தப்பிக்கூட காற்று அவ்வீட்டிற்குள் பிரவேசித்ததில்லை. இப்படியே பத்து வருஷங்கள் கழிந்தன. தாய் தந்தையர்கள் நினைவில்லை. சிறுவயதில் ஒரு சிறுகிராமத்தில் ஏழையான மாமா வீட்டில் வசித்து வந்ததுதான் நினைவிருக்கிறது. அதற்கப்புறம் மணப்பெண்ணாக வீட்டிற்குள் பிரவேசித்தாள். கணவன் அவளை ஒரு சிஷ்யையாக ஏற்றுக்கொண்டான். அன்றிலிருந்து அந்தக் கடுமையான குரு சிஷ்ய பாவம் இறக்கும் வரையில் பாதிக்கப்படவில்லை. கணவன் ஒருநாளும் அவளை ஆதரவுடன் நோக்கியதில்லை. நேசித்தாரா இல்லையா என்பதை ஒரு நாளும் வெளிப்படுத்தியதில்லை.

வங்காளி, சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பாஷைகளைச் சொல்லிக் கொடுத்து வந்தார். பாடத்தைச் சரியாக ஒப்பிக்காவிட்டால் அடிப்பதும் உண்டு. அழுது

கொண்டே சில சமயங்கள் சாப்பிடாமல் கூட தூங்கி விடுவதும் உண்டு. இதுதான் அவளுடைய மணவாழ்க்கையின் சரித்திரம்.

மாமியாரின் பரீக்ஷை இன்னும் கடினமாக இருந்தது. அவள் எந்தச் சிறுவரையும் மன்னிக்க மாட்டாள். அகோரமயி, அநேக தடவை இந்த இளம் மருமகள் தேகத்திலே சூடு போட்டு இருக்கிருள். ஒருநாள் எதோ ஒரு குற்றத்துக்காக அவளுடைய தலைமயிரை அறுத்து விட்டாள். துக்கம் தாங்காமல் அவள் அழுவதைக் கண்டு அகோரமயி எரியும் கொள்ளிக்கட்டையை எடுத்து கிரணமயினுடைய முதுகில் அடித்துப் பேசாமல் இருக்கும்படி உத்திரவு இட்டாள். முதுகு வெந்து விட்டது. புண் ஆறுவதற்கு ஒருமாதம் பிடித்தது.

இத்தனை நாளைக் கப்புறம் இன்றும் அந்த இடம் வலிப்பதுபோல் இருந்தது.

குமரிப் பருவத்திலிருந்து யுவதிப் பருவத்தை எப்பொழுது அடைந்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. இது தெரிவதற்கு எவ்வித வழியும் இல்லை. உஷையைப் போல அவளும் அருணேதயத்தின் செவ்வொளியில் மலர்ந்தாளோ என்னவோ?

யௌவனத்தின் பூரண அழகு பொலிந்து நின்றபோது அவள் கணவனுடன் சூட்சமமான ஆராய்ச்சிகள் செய்ய விரும்பினுள். குழந்தைப் பருவம் என் கடந்தது? அவள் என் மனைவி ஆனுள் என்பதைப் பற்றி யோசிப்பதற்கு சிறிதும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இன்பம் தான் ஜீவனின் ஒரே ஒரு லட்சியம்; மற்றவைகள் எல்லாம் உப லட்சியங்கள் தான். தயவு, தர்மம், புண்ணியம், இவைகள் எல்லாம் உப லட்சியங்களே.

"இகத்திலோ, பரத்திலோ, தன்னிடமோ, பிறரிடமோ, சுதேசத்திலோ, பரதேசத்திலோ, எங்கானும் இன்பத்தைத்தேடி அடைவதுதான் ஜீவனின் வேலை. தெரிந்தோ தெரியாமலோ ஜீவனின் சகல அணுக்களும் இம்முயற்சியில் கூடி நிற்கின்றன. கிரண், இதை நீ புரிந்துகொள்ள முயற்சித்துப் பார். இதனுல் இன்பம் அதிகப் படுகிறதா இல்லையா பார்க்கலாம்" என்று கணவன் கூறினுன்.

"சரி அப்படியே செய்கிறேன். ஆனுல், என் காரியங்களால் பிறருடைய இன்பம் கூடுதல் அடைகிறது, என்பது எனக்கு எப்படித் தெரியும்? இன்பம் அடையும் மார்க்கம் எல்லோருடையதும் ஒன்ருய் இருப்பதில்லையே" என்ருள் கிரணமயி.

ஆரான், தனது ஒளி யிழந்த கணகளால் உயரப் பார்த்துக் கொண்டு "துண்டு துண்டாகப் பார்த்தால் முழு ரூபமும் தெரியாது ஆனுல் முழுதும் ஒன்றுதான். நீ இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்." என்ருன்.

(தொடரும்)

★

ஞாயமென்னடி?

அ. ஸ்ரீநிவாஸன்

நாணித் தலைகுனிதல்
ஞாயமல்லடி
நானும் பல தினங்கள்
பொறுத்திருந்தேன்.
வீணிற் பசப்பி மனம்
வேதனை யுறல்
வேண்டுவ தில்லையடி
வேடிக்கைச் செயல்

பண்ணை வெளியிலே
முன்னமொரு நாள்
பாதி நள்ளிர வினிற்
பட்டிய ருகில்
எண்ணிய வெண்ணமு நின்
இனிய சொலும்
என்ன மறந்ததடி
இவ்விடத்திலே !

கூனற் பிறை மதியம்
தாரகை யொடு
கூடிக் களித்து நனி
குதூகலித்து

மோனத் திருக்குதடி
இந்த வையகம்;
முத்தக் களிப்பினொடு
முயங்கிடுவோம்.

நின்னைப் பிரிந்திருக்க
நேருவ தோடி?
நிற்குமோ திரியின்றி
நெடுஞ் சுடர்தான்.
முன்னைத் தவப்பயனின்
முறை யிதுவேல்
மோடி புரிவதினி
முறைமை யன்று!

அனுபவ உண்மை :

வெற்றியா? தோல்வியா?

ஆர். கே. பார்த்தசாரதி எம். ஏ., எல். டி.

1

ஆண் தெய்வங்களெல்லாம் கடுங் குற்றங்களையும் மன்னித்து விடு மென்றால் பெண் தெய்வங்கள் இல்லாத குற்றங்களையும் கற்பித்துக் குறை கூறும் போலும். பெண் தெய்வங்களின் பூலோகப் பிரதிநிதிகளான நாரீமணிகளும் அப்படியேதான். இல்லை யென்றால் நாராயணனின் மனைவி லக்ஷ்மி ஏன் அவ்விதம் அவனிடத்தில் நடந்து கொள்ள வேண்டும்? அவன் ஏதேனும் ஒரு காரியம் செய்ய வேண்டியதுதான்; உடனே அவள் குறை கூறத் தொடங்கி விடுவாள். அவன் என்னமோ புத்திசாலிதான். அக்காலத்திலும், அதாவது அவனுடைய கலியாணத்திற்கு முன்பும், இப்பொழுது உத்தியோகம் பார்த்து வரும் சமயத்திலும் அவனுக்கு நல்ல பெயர். ஆனால் இல்லற வாழ்க்கையில் மட்டும் அசட்டுப் பட்டம். இது அவன் மனைவியால் அவனுக்கு மனமுவந்து அளிக்கப்பட்ட 'பிருது'

அசட்டுப் பட்டம் கிடைக்கிறதே என்று ஓர் ஆண்பிள்ளை ஒன்றும் செய்யாமலிருந்துவிட முடியுமா? அதுவும், மணமாகி குடித்தனம் என்று வைத்த பிறகு, வீட்டு வேலைகளைக் கவனிக்காவிடில் யார் விடுவார்கள்? அப்படி விட்டாலும் கிடைப்பதென்னவோ அதே அசட்டுப் பட்டம் தானே! லக்ஷ்மி ஒவ்வொரு சிறு காரியத்தையும் நாராயணனைத் தான் செய்யச் சொல்லுவாள்; அவன் எவ்வளவு வேண்டிக் கொண்டாலும், தான் செய்யவே மாட்டாள். பிறகு அவன் செய்ததற்கெல்லாம் அஞ்ஞான ஸ்நானம் செய்வித்து 'அன்புடன்' ஏசிக் காட்டுவாள். அதில் அவளுக்கு ஓர் தனித்த திருப்தி; சந்தோஷமும் கூட.

நாராயணன் செய்த எவ்வளவோ காரியங்களுக்கு அந்த 'அசட்டுப்பட்ட அன்பளிப்பு' கிட்டியிருக்கிறது. என்றாலும் அவனுடைய 'அந்த'க் காரியம் வடிகட்டின முட்டாள்த்தனம் என்பது லக்ஷ்மியின், தாழ்மையான, அசைக்க முடியாத அபிப்பிராயம். இது பழைய அசட்டுக் காரியங்களை யெல்லாம்கூடப் புத்திசாலித்தனமான செயல்களாகச் செய்து விட்டதாம்!

பாவம்! (நாமாயினும் நாராயணனுக்கு அனுதாபம் காட்டுவோம்!) எவ்வளவோ அலைந்து, இந்த யுத்த காலத்தில், அதிலும் சென்னையில், ஓர் வீட்டை வாடகைக்குப் பிடித்தான் நாராயணன். அவன் மஹா அதிர்ஷ்டசாலி என்று தானே கூறத் தோன்றுகிறது? உண்மையில் அவனுடைய துரதிர்ஷ்டம் இங்குதான் ஆரம்பமாயிற்று. வீட்டை வாடகைக்கு அமர்த்தியவுடன் ஊரிலிருந்த மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வந்தான். லக்ஷ்மி ரயிலில் வரும் பொழுதே 'வீடு எப்படியிருக்கப் போகிறது?' என்பதைக் கற்பனை செய்து விட்டாள். அந்தக் கற்பனையை அடிப்

படையாகக் கொண்டு, நாராயணனை எவ்வெவ்விதங்களில் 'அலச' வேண்டுமென்பதையும் வழியிலேயே தீர்மானித்து விட்டாள். வீட்டிற்கு வந்தவுடன் அவளுடைய கற்பனைகள் யாவும் உண்மையாக இருந்தபொழுது அவளுக்கு ஆச்சரியமும் திகைப்பும் கூட உண்டாகிவிட்டன. திகைப்பில், முன்னதாகவே தயாரித்து வைத்திருந்த குற்றச் சாட்டைப் படிப்பதற்குக் கூட இரண்டு நிமிஷம் தாமதமாகி விட்டது.

சௌகரியமான பெரிய வீடு தான் அது. இருந்தாலும் அதற்கேற்றாற்போல் பந்தோபஸ்து வேண்டாமா! முதன் முதலில் லக்ஷ்மியின் கண்ணிற் பட்டது 'வெரிச்' சென்று திறந்திருந்த முற்றம் தான். அடுத்தபடியாக அந்த முற்றத்திலேயே மாடிப்படி இருந்தது. மாடியோ மொட்டை மாடி; மேலும் ஒரு கதவிற்கு ஒரு பக்கத்தில்தான் தாழ்ப்பாள் இருந்தது. இத்யாதி; இத்யாதி. வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் அகப்பட்டால்?

நாராயணன், வக்கீல் வைக்க வழியில்லாத ஓர் குற்றவாளியைப் போல், ஏதோ பதிலளித்தான். திருட்டுப் பயம் இல்லை யென்பதற்கு, வீட்டின் இரு பக்கங்களிலும் தெருக்கள் இருப்பதையும், தெருக்களில் விளக்கு இருப்பதையும் அங்கு இரவு பகல் எந்நேரமும் ஜனங்கள் 'ஜே! ஜே!' என்று நடமாடிக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டான். பிறகு அந்த வீட்டைக் கண்டு பிடிப்பதற்கு அவன் பட்ட கஷ்டங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக விவரித்தான், மிகவும் பரிதாபகரமான பார்வையுடன். அதற்காகவும் லக்ஷ்மி ஒன்றும் அனுதாபப் படவில்லை. அந்த ஊரில் அந்தப் பக்கத்தில் எவ்வளவு வீட்டிற்குக் கம்பிகள் போட்டிருக்கின்றன என்பதைப் பார்த்து வரச் சொன்னாள். லக்ஷ்மி அம்மாதிரி 'சென்சஸ்' எடுக்கத்தயாராயில்லை. யாராகிலும் எடுத்து வந்தாலும் அதை நம்பத்தயாராயில்லை. அந்த வீட்டிற்கு நற்சாட்சிப் பத்திரம் தரத் தன்னுடைய நண்பர்களையும் அக்கம் பக்கத்து மனுஷர்களையும் கூண்டில் நிறுத்தி வாக்குமூலம் வாங்கித் தருவதாகவும் சொன்னான். கடைசியாக வீட்டில் எப்பொழுதும் ஒரு வேலைக்காரன் இருப்பான் என்றும் உறுதிமொழி கூறினான். இந்த உறுதிமொழி அவளுடைய பயத்தை இன்னும் அதிகரிக்கத்தான் செய்தது. வேலைக்காரனே 'ஐந்தாம் படை' வேலை செய்து விட்டால்?

கடைசியில் அந்த மாத முடிவிற்குள் வேறு வீடு பார்த்து விட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து விட்டு லக்ஷ்மி உள்ளே சென்றாள் — அடுத்தபடியாக என்ன குற்றங்கள் கண்டு பிடிக்கலாம் என்று யோசித்தவாறே. நாராயணன் 'ஏன்டா 'ரூம்' வாழ்க்கையை விட்டு விட்டு வீட்டு வாழ்க்கைக்கு வந்தோம்' என்று வருத்தப் பட்டுக் கொண்டே ஆபீஸிற்கு நேரமாகி விட்டதால் வண்டியேறிச் சென்றுவிட்டான். இத்தகைய 'எக்கச்சக்கமான' சந்தர்ப்பங்களில் ஆபீஸ் எவ்வளவு உதவி செய்கிறது?

2

"என்னைத்தேடிக் கொண்டு யாராகிலும் வந்தார்களா?" என்று கேட்டுக் கொண்டே நாராயணன் உள்ளே வந்தான். "உங்களையும் உங்க வீட்டையும் தேடிக்

கொண்டு மனிதர்கள்வருவார்களா என்ன?'' என்றாள் லக்ஷ்மி ஆத்திரம் பொங்க.

வீட்டைப் பற்றிய ஆத்திரம் இன்னும் தணியவில்லை என்பதை அறிந்து கொண்ட நாராயணன் நையாண்டிக்குப் பதில் நையாண்டி செய்வதை நிறுத்திக்கொண்டான். பிறகு அவளே ஆரம்பித்தாள். "யாரோ ஒருத்தர் வந்திருந்தார். விசாரித்ததிலே இந்த வீடு காலீன்னு கேள்விப்பட்டு வீட்டைப் பார்க்க வந்தாராம். அதுக்கு முந்தியேதான் நீங்க கழுத்தைக் கொடுத்து விட்டீர்களே! நாங்கள் வந்து விட்டோம்னு சொன்னேன். அடடா! அழாத குறையாக வெளியே போனார். இந்த வீட்டு 'லச்சணத்துக்கு அவ்வளவு வருத்தம்'' என்றாள் லக்ஷ்மி கிண்டலாக.

"லக்ஷ்மி! அவரை என் அப்படி அழ வைத்து அனுப்பிச்சே? 'இதோகாலிபண்ணித் தாரேன்'னு சொல்லி மளமளன்னு சாமானையெல்லாம் எடுத்து வாசல்லே வைக்கறதுதானே? அவரும் கூட மாட ஒத்தாசை செஞ்சிருப்பாரே! கூலிகூட மிச்சப்பட்டிருக்குமே'' இது நாராயணன் பதில்.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலிருந்தது இந்த ஹாஸ்யம். "போதும் போதும் ஒங்க விகடம். முதலில் வேறு வீட்டைப் பார்த்துவிட்டு பிறகு

வேறுகாரியம் பாருங்கள் ''என்று பொரித்து விட்டு உள்ளே சென்று விட்டாள் கோபமாக. "உத்தரவு" என்று அடங்கி விட்டான் நாராயணன்.

குடித்தனம் ஆரம்பித்து ஐந்து நாட்கள் ஆயின. நாராயணன் ஆபீஸிற்குப் போயிருந்தான். லக்ஷ்மி சாப்பிட்டுவிட்டு, உண்ட களைப்புத் தீர பாயில் சற்று நேரம் படுத்தாள். அவள் சிந்தனை சிதறியது. இமைகள் குவிந்தன.

ஒரு அழகான குளம். அதன் கரையை யொட்டினாற் போல் மரமும் செடிகளும் செழித்து வளர்ந்திருந்தன. ஒரு அழகான பெண், தங்கம் போல் தகதகத்த ஒரு குடத்தை இப்படியும் அப்படியுமாக ஒரு கலக்கு கலக்கிவிட்டு தண்ணீருக்குள் முக்கினாள். 'கடகட' வென்று இசை பாடியபடி தண்ணீர் குடத்திற்குள் நிறைந்தது. யாரோ அப்பெண்ணைக் கூப்பிடுவதுபோல் இருந்தது.

திடுக்கிட்டுக் கண் விழித்தாள், லக்ஷ்மி. எதிர்ச் சுவரில் இருந்த பொக்கை பொறிகள் அவள் கண்களை உறுத்தின. அவ்வளவும் 'பகற் கனவு' என்று உணர்ந்தாள். அதற்குள் யாரே ஒரு அம்மாமி – வயதான சுமங்கிலி — லக்ஷ்மியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தாள். பரஸ்பரம் அறிமுகமான சிறிது நேரத்தில் இருவரும் அதிக அளவளாவிப் பேச ஆரம்பித்தார்கள். பேச்சின் நடுவில் லக்ஷ்மியால் அவள் கணவனின் சமீபத்திய அசட்டுத்தனத்தைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அம்மாமிக்கு இந்த வார்த்தை 'கஞ்சி வரதப்பா' என்ற ரீதியில் அமைந்தது. உடனே 'சளசள' வென்று பேசினாள் "ஏனம்மா! அப்படீன்னா இந்த வீட்டை எனக்கு விட்டு விடேன். எனக்கு ஒரு வீடு வேண்டும். மாப்பிள்ளைக்கு இங்கே வேலை மாத்தீட்டாங்க. ஒரு வீடு பாக்கச் சொல்லி மககாயிதம் போட்டிருக்கா. இரண்டு மாஸமா அலையறேன். ஒருசாண் இடங்கூடக் கிடைக்கலே......"

வீடு தேடுவதிலுள்ள கஷ்டத்தை அந்த அம்மாள் சொல்லிக் கேட்கவே லக்ஷ்மியின் உற்சாகம் சிறிது குறைந்தது; வீட்டை மாற்றும் உத்தேசம் கொஞ்சம் தளர்ந்தது. "அதுக்கென்ன பாட்டி! போவதானால், முதல்லே உங்ககிட்ட சொல்லீட்டு அப்புறம் வீட்டைக் காலி பண்ணறோம்" என்று சமாளித்துக் கொண்டாள். அந்த உறுதிமொழிக்கே அம்மாமி அளவற்ற ஆனந்தம் அடைந்து விடை பெற்றுக் கொண்டாள்.

3

அன்று ஞாயிற்றுக்கிழமை. நாராயணன் வீடுபார்க்கக் கிளம்புவதாகச் சொல்லிக் கொண்டு ('போக வேண்டாம்' என்று லக்ஷ்மி தடுத்ததை, அவன் காதில் விழாததுபோல். கவனிக்க வில்லை.) வெளியே புறப்பட்டான். அப்பொழுது 'ஸார் இருக்காரா?' என்று கேட்டுக் கொண்டே ஒரு பெரியவர் உள்ளே நுழைந்ததால் அவன் புறப்பாடு நின்று இருவரும் உட்கார்ந்து கொண்டனர். குண்டூசியிலிருந்து அணுக்குண்டு வரை எல்லாவற்றையும் அளந்து விட்டு திடீரென விஷயத்திற்கு இறங்கினார் பெரியார்.

"என்ன ஸார், உங்களுக்குத் தெரிந்து ஏதாவது வீடு இருக்கிறதா? நீங்ககூட சீக்கிரத்திலே

இந்த வீட்டைக் காலி பண்ணப் போறதாக......''

நாராயணன் மிகுந்த உற்சாகத்துடன் "ஆமாம், ஆமாம். அப்படித்தான் உத்தேசம். இன்னும் இரண்டு மூணு நாளிலே......''

இந்தக் கட்டத்தில் லக்ஷ்மி 'சூ' கொட்டினாள் .'அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்' என்பதற்கு அடையாளமாக.

நாராயணன் "காலிபண்ணிடுவேன். என்ன ஸார்! வீடுண்ணு இருந்தா ஒரு கம்பியா கிம்பியா ஒரு எளவும் கிடையாது. மாடிப்படி வேறே தெருவிலேயே இருக்கு. ஒரு கதவுக்குக்கூட......''

லக்ஷ்மிக்குப் பொறுக்க வில்லை. 'ஐயோ, இப்படித் தத்துப் பித்துன்னு பேசறதே' என்பதற்குப் அறிவிப்பாக ஒரு கனைப்புக் கனைத்தாள். நாராயணன் இதை லட்சியமே செய்யவில்லை.

வந்தவர் "என்ன ஸார், அப்படி சொல்லிட்டீங்க. நீங்க ஏதோ பூர்வ ஜன்மத்திலே பண்ணின புண்ணியம்; இவ்வளவு பேஷா வீடு கிடைச்சிருக்கு. ஒங்களுக்கு வேண்டாம்னு சொல்லுங்க ஸார். நீங்க கொடுக்கறதுக்கு மேலே பத்து ரூபாய் கொடுத்து நான் இண்ணைக்கு சாயங்காலமே வந்து விடுகிறேன்''

நாராயணன் "மறுபடியுமா சொல்லணும். இது வேண்டாம்னு தான் சொல்றேனே. இது வீடா என்ன? இங்கேயிருக்கறதுக்கு தெருவிலே குடியிருக்கலாம் ஸார்......''

லக்ஷ்மிக்கு இந்தப் பேச்சு அடியோடு பிடிக்க வில்லை. பேச்சை மாற்றிப் பெரியவரை வெளியே அனுப்பத் துடியாகத் துடித்தாள். கடைசியில் 'தேள் தேள்' என்று கத்தி நாராயணனை சமையற் கட்டுக்கு ஓடிவரச் செய்தாள். "எங்கே? எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே பெரியவர்—அவர் மகா தைரியசாலி — வெளியே கம்பி நீட்டி விட்டார்.

நாராயணன் உள்ளே வந்தவுடன் லக்ஷ்மி அவனுடைய அசட்டுத்தனத்தை நன்றாக இடித்துக் காட்டித் தற்போது வீட்டிற்குள்ள கிராக்கியை அவளாகவே விவரிக்க ஆரம்பித்தாள். "அதெல்லாம் முடியாது. இந்தச்சனியன் பிடிச்ச வீடு எனக்குவேண்டாம்' என்று பிடிவாதமாக மேல்த் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே காலடி எடுத்து வைத்த நாராயணனைத் தடுத்து நிறுத்துவதற்குள் லக்ஷ்மிக்கு முக்காலே யரைக்கால் உயிர் போய்விட்டது;

4

என்னதான் லக்ஷ்மி பொல்லாதவள் (கணவனுக்கு மட்டுமே) என்றாலும் அவளுக்கு இப்படிலாம் உபத்திரவம் உண்டாக்கக் கூடாது. அப்பப்பா! அன்று அவள் கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பி வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. கோவிலில் அவள் வீட்டைப்பற்றிய பேச்சுதான் எங்கும். வழக்கமாகத் தங்கள் கணவன்மார்களின் குணதிசயங்களையும் மாமியார்களின் "அழிச்சாட்டிய''த்தையும் பற்றிப்பேசிக் காலத்தைப் புனிதமாகக் கோவிலில் கழிக்கும் பெண்கள் எல்லோரும் லக்ஷ்மியின் வீட்டைப்பற்றியேதான் பேசினார்கள். வீடு மாற்றத்திலுள்ள கஷ்டங்களைச் சொல்லிச் சிலர் அநுதாபப் பட்டனர்.பலர் பந்தோபஸ்து அற்ற வீட்டின்பயத்தைப் பற்றிப்

பேசினர். இன்னும் பலர் தங்களுடைய நாத்தனுர், மச்சினன், தம்பி, அத்தான் – இவர்களுடைய வீட்டுத் தேவையை மனதில் வைத்துக்கொண்டு லக்ஷ்மி வீடு மாற்றப்போகும் தேதியைக் கேட்டனர். ஒருவாறுக லக்ஷ்மி 'தாக்கு'ப்பிடித்து, சாமர்த்தியமாக நழுவி விட்டாள். சுவாமியைத் தரிசிக்காமலேயே வீட்டிற்குப் போகும்பொழுது வழி முழுவதும் "சீ! இருக்கும் வீட்டை மாற்றவே கூடாது" என்று தீர்மானம் செய்துக்கொண்டே போனுள்.

நாராயணன் வீட்டிற்கு வந்தவுடன் அந்தத் தீர்மானத்தை அவனிடம் சொல்லியும் விட்டாள். அவன் அதற்குச் சிறிதும் இடங்கொடுத்துப் பேசவில்லை. வீட்டை மாற்றியே விடவேண்டுமென்ற அவன்எண்ணத்தை மாற்ற, லக்ஷ்மி முதன் முதலாக அவன் காலில் விழுந்து கெஞ்சவும் தயங்கவில்லை. கடைசி ஆயுதம் – ரகசிய ஆயுதம் "இந்த வீட்டைக் காலி செய்து விட்டு என்னைச் சந்தியில் நிறுத்த வேண்டும் என்றுதானே உங்கள் ஆசை" என்று சொல்லி லக்ஷ்மி பொல பொல'வென்று கண்ணீர் விட ஆரம்பித்து விட்டாள். உடனே நாராயணன் ஆண்களுக்கே உரிய பெருந்தன்மையை ('போலி' என்று வேண்டுமானுலும் பெண்கள் சேர்த்துக் கொள்ளட்டும்) காண்பித்து அவள் இஷ்டத்திற்கு இணங்கிவிட்டான். 'அப்பாடா' என்று மன நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள் லக்ஷ்மி. நாராயணனும் அப்படித் தான் மூச்சு விட்டான் என்பதை லக்ஷ்மி எவ்விதம் அறிவாள்?

மறுநாள் சிற்றுண்டி நேரத்தில் 'ஆர்யபவன்' ஹோட்டல் அமர்க்களப் பட்டது. வெளியே செல்பவர்களுக்கெல்லாம் உள்ளே ஏதோ பெருத்த கலகம் நடக்கின்றதோ என்ற பிரமை! அத்தனை சத்தம்! அந்தப் பேரிரைச்சலின் கதாநாயகன் நம்முடைய நாராயணன்தான். கோடையிடிபாகவதர்களும் வெட்கித் தலை குனியும்படியான அட்டஹாஸச் சிரிப்பு அவ்வப்போது நாராயணனின் வாயினின்றும் வெடித்துக்கொண்டிருந்தது. சுற்றிலும் அதே ஆபீஸில் வேலை செய்யும் நாராயணனின் நண்பர்கள் இருந்தனர். சிறிது ஆரவாரம் அடங்கியவுடன் சிநேகிதர்களைப் பார்த்து "நண்பர்களே! வீடு மாற்றும் விஷயத்தை அடியோடு தோல்வியாக்க என்னுடன் ஒத்துழைத்த உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு ஓர் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் நாராயணன்!

இளம் எழுத்தாளரும் இலக்கியப் பண்ணையும்

"கலி"

பத்திரிகை ஆசிரியர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்பவர்களில் இளம் எழுத்தார்கள் என்று சொல்லப்படும் ஒரு பிரிவினருக்கு அதிகமான பங்கு உண்டு என்று சொன்னல் அது தவராகாது.

ஒரு கட்டுரையோ கதையோ பிரசுரத்திற்காக வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அக்கட்டுரை அல்லது கதைக்கு ஒரு முகவுரைபோல் அதன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் இருக்கும். தாழ்ந்த பாணியில் ஆரம்பித்து பத்திரிகாசிரியரே திணறும்படி அப்பத்திரிகையைப் பற்றி ஒரு அத்தியாயம் வர்ணித்து, தான் அதைப் படிக்கும் ஆர்வத்தின் அளவை அளந்து காட்டி, அக்கதையையோ கட்டுரையையோ அடுத்து வரும் இதழ்கள் ஏதாவது ஒன்றில் பிரசுரிப்பதின் காரணமாகத் தனக்கு ஏற்படும் மகிழ்ச்சியையும், ஊக்கத்தையும் பற்றி ஒரு புராணம் பாடி, அதிலுள்ள பிழைகளேயும் உசிதம்போல் திருத்தி வெளியிடலாம் என்பதற்குப் பரிபூரண சுதந்திரம் கொடுத்து, நமது பதிலை ஆர்வத்துடன் எதிர் பார்க்கும் கோலத்தைக் காட்டி, வெகு அடக்க ஒடுக்கமாய்க் கடிதத்தை முடித்திருப்பார்கள். ஆனல் கட்டுரையுடன் (முன்ஜாக்கிரதையாய்) வைத்திருக்கும் தபால்த்தலை, பெரும்பாலும் அக்கதை கட்டுரைகளைத் திருப்பியனுப்பும் கைங்கரியத்துக்கே உபயோகிக்கப்படும். இந்த விஷயம் அனுபவித்து, கேட்டு, அறிந்த பழைய விஷயம்தான்.

மறுமலர்ச்சிக் குரல் மூலைக்கு மூலை கேட்கும் இக்காலத்தில்கூட இந்த நிலைமை குறிப்பிடக்கூடிய அளவில் சீர்திருந்தி வருவதாகச் சொல்லி பெருமைப் பட்டுக் கொள்ள முடியாது. இந்த நிலைமைக்கு, ஆசிரியர்கள், இளம் எழுத்தாளர்கள் ஆகிய இரு சாராரும் காரணஸ்தர்கள். ஆசிரியர்களைப் பொருத்த வரையில் இளம் எழுத்தாளரின் விஷயதானங்களில் அவர்கள் அதிகமாய் அக்கரை காட்டுவதில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. இதற்கு துணை ஆசிரியர்கள் குழாமும், தங்கள் பத்திரிகைக்கோ அல்லது தங்களுக்கோ ஓரளவு நெருங்கிய தொடர்புடையவர்களின் விஷயதானங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் (நிர்ப்பந்தம் என்று சொல்லலாமா?) காரணங்களாக முன் நிற்கின்றன. (இதில் நாசூக்கான சிபார்சுகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை.) இரண்டாவது குற்றச்சாட்டு இளம் எழுத்தாளர்களின் விஷயதானம் நல்ல கருத்துள்ளதாய் இல்லாததும், கருத்து நன்ருக இருந்தாலும் நடையோ அல்லது பின்னியிருக்கும் முறையோ சுவையாய் இல்லாததும் ஆகும்.

இக் குற்றச்சாட்டு நேர்மையானது; நியாயமானது, என்று சொல்லலாம். ஆனல் இக்குற்றச்

சாட்டிற்கு பத்திரிகாசிரியர்களுக்கும் தாராளமான பங்கு உண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இனிமையும் இன்பமும் பொங்கி வழியும் பூஞ்சோலைக்கு வர இளம் எழுத்தாளன் எண்ணி, அந்த ஆசையையே வழி காட்டியாகக் கொண்டு தவருன பாதையில் இலக்கியச் சோலையை அடைய முயற்சிக்கிருன். இந்த முயற்சி பலிக்குமா? அவன் ஆசை நிறைவேறுமா? நிறைவேறும், எப்பொழுதோ ஒரு காலத்தில், அரைகுறையாக. ஆனல் அவன் போகும் வழி தவறு என்று காட்டி, சரியான முறையில் நேரான வழியில் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடையும் பாதையைக் காட்டி, அப்பாதையைச் சுலபமாகக் கடக்கும் விதத்தையும் தெரிவித்தால் அவனது ஆசை நிறைவேற முடியும்; லக்ஷியம் சித்திக்கும்; கனவு நனவாகும். இந்தப் பொறுப்பையும், கடமையையும் பத்திரிகாசிரியர்கள் உணர்வதாகத் தெரியவில்லை. இளம் எழுத்தாளர்கள் எழுதுவதெல்லாம் நன்ருயிருக்க முடியாது. மோசமாயும் இருக்கலாம். எழுதும் ஒவ்வொரு விஷயதானத்தையும் படித்துப் பார்த்து குற்றங் குறைகளைக் குறிப்பிட்டு, அதை எப்படி எழுத வேண்டும் என்பதைக் காட்ட ஒரு பத்திரிகாசிரியருக்கு முடியுமா? நேரமிருக்குமா? என்று கேட்கலாம். உண்மைதான். ஆனல் மனமிருந்தால் மார்க்கம் மட்டுமல்ல, நேரமும் உண்டு. ரொம்பவும் மட்டமானவைகளைத் தள்ளிவிட்டு (இந்தப் புண்ணிய திருப்பணியை உதவி ஆசிரியர்களே செய்து விடுவார்கள்) சத்து உள்ளவற்றில் சுமாராக உள்ளவைகளை மட்டும் முன்னல் குறிப்பிட்டது போல் சீர்படுத்த முயற்சிக்கலாம். 'அதெல்லாம் முடியாது; ஒரு எழுத்துக்கூட திருத்தவேண்டி அவசியமில்லாமல் வரும் புகழ்பெற்ற ஆசிரியர்களும், எங்கள் கோஷ்டியினரும் எழுதும் (அவர்கள் உண்மையிலேயே தப்பிதமாக எழுதியிருந்தாலும் சரி.) கதை கட்டுரைகளைத்தான் போடுவோம்' என்று சொல்லும் பத்திரிகாசிரியரின் பிடிவாத அரணைத் தகர்க்கும் அபிப்பிராயம் நமக்குக் கிடையாது. அவர்கள் ஏகாதிபத்தியத்துக்குள் பிரவேசிக்கக்கூட நாம் விரும்பவில்லை. அந்த முதலாளி மனப்பான்மை நமக்கு வேண்டவே வேண்டாம்.

ஏறக்குறைய எல்லா வகையிலும் இன்று முன்னணியில் நிற்கும் ரஷ்யா தேசம் இந்த இளம் எழுத்தாளர்களின் பிரச்னைக்கு ஒரு சிறந்த, மகத்தான உதாரணமாக நிற்கிறது.

இன்றைய இளம் எழுத்தாளன் தான் நாளைய பிரபல ஆசிரியன்; அவன் சக்தி அளவில்லாதது; வருங்கால சமூகத்தின் பிரதிநிதி அவன்தான்; அவனது பேனு முனையில்தான் வருங்கால வாழ்வு அடங்கியிருக்கிறது என்ற விஷயங்களை அறிஞர்களான சில ரஷ்ய ஆசிரியர்கள் உணர்ந்து இளம் எழுத்தாளர்களின் வாழ்க்கையில் வசந்தத் தென்றலும், இன்ப நிலவும் வீச ஒரு வழி கண்டு பிடிக்க முயற்சித்தனர். இது விஷயத்தில் புகழ் பெற்ற ரஷ்ய ஆசிரியரான மாக்ஸிம் கோர்க்கியின் தூண்டுதலும், இடைவிடாத வற்புறுத்தலும் அந்த முயற்சியைத் தீவிரமாக்கப் பெரிதும் காரணமாயிருந்தன. சோவியத் ஆசிரியர்களின் சங்கம் இந்த முயற்சியை மேற்கொண்டு 1933ம் வருஷத்தில் ஓர் இலக்கியப் பண்ணையை ஸ்தாபித்து

அதில் இளம் எழுத்தாளர்களின் பிரச்னையை உன்னதமான முறையில், வெகு எளிதாக ஆக்கிவிட்டது.

இந்த இலக்கியப் பண்ணையில் சேர விருப்பமுள்ளவர்கள் சிறியவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, சொந்தமாக ஒரு கதையோ கட்டுரையோ, கவிதையோ எழுதியிருக்க வேண்டும். அப்படி எழுதியிருப்பவர்கள் ஆரம்பத்தில் ஒரு பிரவேசப் பரீட்சையில் தேற வேண்டும். பிரபல எழுத்தாளர்களும் ஆசிரியர்களும் அடங்கிய ஒரு 'கமிஷன்' பிரவேசப் பரீட்சையில் தேறியவர்களை நிதானமாய் ஆராய்ந்து அவரவர்களுக்கு, ஏற்ற வழிகளில் அவர்கள் விரும்பும் இலக்கியங்களும், சரித்திரங்களும் கற்பிக்கப் படுகின்றன.

போதகர்களின் தூண்டுதல் இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கிறது. ஊக்கம் சந்தர்ப்பம் கிடைக்கும் போது திறமையை வெளிப்படுத்துகிறது. திறமை அபிவிருத்தியாகி புகழாக மாறுகிறது. புகழ் பொருள் வந்து சேர வழி கோலுகிறது. பொருள் நல்வாழ்வு நடத்தத் துணை புரிகிறது. நல்வாழ்வு எழுத்தாக உருப்பெற்று நாட்டின் நலத்தை அதிகமாக்குகிறது. எனவே எழுத்தாளனின் பேனாவிற்கும் நாட்டின் நலத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நாம் இதிலிருந்துகூட அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த இலக்கியப் பண்ணையில் சேர்ந்த பலர் இன்று ரஷ்யாவில் சிறந்த பத்திரிகாசிரியராகவும், விமர்சகராகவும், ஆராய்ச்சியாளராகவும் மாறி புகழும், பொருளும், பட்டமும், பதவியும் பெற்று பாங்குடன் வாழ்கிறார்கள். எழுத்தாளன் பிறவியிலேயே எழுத்தாளனாக இருக்க வேண்டும் என்பதில்லை; எழுத்தாளனையும் உற்பத்தி செய்ய முடியும் என்பதை ரஷ்யா தேசம் இன்று கண்கூடாகக் காட்டி நிற்கிறது.

இத்தகைய இலக்கியப் பண்ணைகள் பல இந்தியாவுக்குத் தேவை. வரவிருக்கும் புது இந்திய சர்க்கார் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுவது அவசியமல்ல, அத்தியாவசியம்!

மலர் மணம்

197236

பசுப்போலப் படுத்திருந்தாலும் பயங்கரமாய்க் காட்சியளிக்கும் ஒரு அழகிய வேங்கையின் படம் இம்மாத 'வசந்த'த்தின் மேலட்டையை அலங்கரிக்கிறது. அதற்கிசைந்த ஒரு பாட்டு!

'மறுமலர்ச்சி' என்ற வார்த்தை சமீபகாலமாய் ரொம்பவும் அடிபடுகிறது. அது சம்பந்தமான ஒரு சுவையான ஆராய்ச்சியை வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி இந்த இதழுக்கு உதவியிருக்கிறார். இந்த ஆராய்ச்சி அடுத்த கட்டுரையில் முற்றுப் பெறும்.

இந்திராணியின் உள்ள உணர்ச்சிகளை அள்ளித் தெளிக்கும் 'தேவசுகம்' அகலிகை கதையின் தொடர்புடைய ஒரு அழகான குணச் சித்திரம்.

தன் காதலினின் பிரிவை எண்ணி ஏங்கும் ஒரு காதலியின் மனோ நிலையை, உணர்ச்சிகள் கொப்புளிக்க அழகாக வர்ணிக்கிறார் வெ. ராமராவ், 'பிரிவும் பரிவும்' என்ற கட்டுரையில்.

கே. ஸி. எஸ். அருணசலம் தமிழ்ப்பற்றும், தேர்ந்த எழுத்து வன்மையும் உள்ள சிறந்த எழுத்தாளர். அவரது 'விசாகை' இலக்கிய ருசியுள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் கூட - ஒரு நல்விருந்து.

'யுத்தந்தான் முடிந்து விட்டதே! இனி 'சுகி'யின் யுத்த கால இலக்கியமும் வராமல் நின்று விடுமோ' என்று அஞ்சுபவர்களுக்கு, அபயமும், ஆறுதலும் கொடுக்கக் கூடியவை, இந்த இதழில் வெளி வந்திருப்பதும், அடுத்த இதழில் வெளிவரப் போவதுமான யுத்தகால இலக்கியங்கள்!

சத்து நிறைந்த பசும் புல்லை ஆடு மாடுகள்போல் மனிதரும் உண்ணலாம் என்பதை, உணவு ஆராய்ச்சி முறையில் தக்க உதாரணம் காட்டி நிரூபிக்கிறார்கள் அக்கட்டுரையின் 'கூட்டு' ஆசிரியர்களான டி. எஸ். சங்கரனும், அ. கிருஷ்ணராவும்.

கவிஞர் அ. ஸ்ரீநிவாசன் அவர்களின் இதயப் பூங்காவில் அவ்வப்பொழுது கவி மலர்கள் மலர்வதுண்டு. அத்தகைய ஒரு மலரின் மணத்தை வாசகர்கள், இவ்விதழில் அனுபவிக்கலாம்.

வீடு தேடும் படலம் பற்றிய ஒரு அழகான, நகைச் சுவைக் கட்டுரையை எழுதியிருக்கிறார் ஆர். கே. பார்த்தசாரதி.

இன்னும் சில இளம் உள்ளங்களின் எதிரொலியையும், வழக்கமான மற்ற அம்சங்களையும் படித்துப் பாருங்கள்.

'வசந்த'ம் ஐப்பசி இதழ், கண்கவரும் அழகும், நறுமணமும் கூடிய ஒரு சிறந்த இதழாக வெளிவருகிறது என்பதை முன் கூட்டியே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் நேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்

சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	ரூ.	5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ.	2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	ரூ.	2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி ...	ரூ.	94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ, பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணாகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ, மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	**திருவல்லிக்கேணி**
மயிலாப்பூர்	**தியாகராயநகர்**
புரசவாக்கம்	**மவுண்டுரோடு**

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட ,, ,, 33,66,622
ரிஸர்வ் நிதி ,, 35,00,000
டிபாஸிட்டுகள் 12½ கோடிக்கு மேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. **கோபால அய்யர்,** செக்ரடரி

I B N 101

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

THE GOVERNOR'S WAR FUND
IS PROUD
TO HAVE HELPED
A
COMMONWEALTH
TO
WIN THROUGH
BUT
SUBSCRIPTIONS FOR
AMENITIES FOR TROOPS
ARE STILL
BADLY NEEDED.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள
வைரங்கள்
அழகிய வேலைப்பாடமைந்த
பவுன் நகைகள்
நவீன முறைகளால் தயாரிக்கப்படும்
வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்
உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி
24/25. சைனு பஜார் :: மதருஸ்

வசந்தம் சந்தா விபரம்

வருஷ சந்தா	... ரூ.	6 0 0
ஆறு மாத சந்தா	... ரூ.	3 0 0
தனிப்பிரதி	... ரூ.	0 8 0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்

கொள்ளப்படமாட்டாது.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

ருசிகரமான கதைகள்! அழகான படங்கள்!

அரிய கட்டுரைகள்! அதிகமான பக்கங்கள்!

இவற்றுடன் கூடிய,

விசேஷ இதழாக வெளிவருகிறது!

'வசந்தம்' ஐப்பசி இதழ்

விலை ரூ. 0—8—0 தான்:

விபரங்களுக்கு:—

மானேஜர், வசந்தம் காரியாலயம்,

4/12 A, திருச்சிரோட், கோயமுத்தூர்.

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AV I

★

ஜுபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த

இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

வால்மீகி	— சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
என் மகன்	— ,, ,,
ஸ்ரீ முருகன்	— ஜுபிடர் பிக்சர்ஸ்
மஞ்சு கோஷா (ரத்னகுமார்)	— முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
காதம்பரி (குண்டலகேசி)	— K. S. S. பிக்சர்ஸ்

★

பொன் கலைக்குப் புதுக்கோயில்

"ஸ்வர்ண மாளிகை"

வனப்புமிக்க வைர நகைகளும், அழகுக்கு
அழகு செய்யும் ஆபரணங்களும் நிறைந்தது!

★

தேவையானதைத் தேர்ந்தெடுக்கலாம்

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

போன் 218A —: தபால் பெட்டி 139 :— தந்தி "ராஜா"

டைத்தெரு : : கோயமுத்தூர்